அருள் மொழிகள்

பொ. திருகூடசுந்தரன்

நவயுகம்

அருள் மொழிகள்

*

மொழிபெயர்ப்பாசிரியர்
பொ. திருகூடசுந்தரன், எம். ஏ., பி. எல்.

*

கிடைக்குமிடம்:
நவயுகப் பிரசுராலயம் லிமிடெட்
சென்னை

பொருளடக்கம்



மார்க்க ஒளரேலியன்
சிலை

முகவுரை

ஸ்ரீமான் பொ. திருகூடசுந்தரம் பிள்ளையவர்களின் நூல்களுக்கு அன்னியரின் முகவுரை அனுவசியம் என்று தமிழுலகம் சொல்லும் என்பதில் சந்தேகமில்லை. மகாத்மா காந்தியின் சத்யாக்ரக வியாசங்களில் பலவற்றைத் தொகுத்துத் தமிழ்செய்து ஸ்ரீமான் பிள்ளையவர்கள் தமிழருக்குப் பேருதவி செய்திருக்கிறார்கள்.

மகாத்மாவின் நூல்களை மொழிபெயர்ப்பதற்கிடையிலேயே பிள்ளையவர்கள் தமிழ் மொழியின் மீதுள்ள ஆர்வ மிகுதியால் உலகப் பிரசித்தமான இன்னொரு நூலைச் சம்க்ஷேபமாக மொழிபெயர்த்து வெளியிடுகிறார்கள். இந்நூல்தான் மார்க்க ஒளரேலியன் என்னும் ரோம சக்ரவர்த்தியின் ஆத்ம விசார ரூபமான மணிமொழித் தொகுதி. இந்நூலிற்கு உலகத்தின் அற நூல்களில் சிலவற்றைத்தான் இணையாகக் கூற முடியும். எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தால்

திருவள்ளுவ தேவரின் திருக்குறளின் யோக்கியதை இந்நூலுக்கும் உளது என்று சொல்லலாகும். ஆனால் இதனுள் இன்னொரு விசேஷமிருக்கிறது. திருக்குறள் எழுதியவர் இல்வாழ்க்கையினராக இருந்த போதிலும் உலக விவகாரங்களில் கொஞ்சமேனும் சிக்கிக்கொள்ளாமல், அவற்றிற்குப் புறம்பாகவே நின்று அவற்றை ஒரு சாக்ஷியைப் போல் பார்த்தறிந்து எழுதினவராவார். மார்க்க ஒளரேலியனோ ஒரு சக்ரவர்த்தி. சுமார் பதினைந்து லக்ஷம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள ஓர் ஏகாதிபத்தியத்தை 'வறிஞன் ஓம்பும் ஓர் செய் எனக் காத்து' ரக்ஷித்து வந்த அரசர்க்கரசன். அவனுடைய ஆத்மவிசாரணை போர்க்களத்தி னிடையிலும், மந்திரசபைக் கூட்டங்களின் மத்தியிலும், நீதி செலுத்தும் மன்றங்களிலும், சூழ்ச்சிக்காரர்களுடைய சூழ்ச்சியைக் குலைக்கச் செய்யும் முயற்சிகளுக்கிடையிலும் நிகழ்ந்ததாகும்.

கர்மணைவஹி ஸம்ஸித்திம்
ஆஸ்திதா ஜநகாதய:

(ஜனகர் முதலானவர்கள் கர்மத்தினாலேயே மோக்ஷ சித்தி அடைந்தனர்) என்ற கீதா வாக்கி

யம் (ந. கக) மார்க்க ஔரேலியனுக்கும் பொருந்தும் என்றால் அவனுடைய பெருமை படிப்போருக்கு ஒருவாறு விளங்கும். அசோகன், ஸ்ரீ ஹர்ஷன், குலசேகரன், சேரமான் பெருமாள் நாயனார் ஆகிய இம்மகான்களைத் தான் ஔரேலியனுக்கு ஒப்பிட்டுச் சொல்ல முடியும். இத்தகைய பெருந்தகை தன்னுடைய அபூர்வமான அனுபவத்தில் தன் மனத்தில் எழுந்த எண்ணங்களையெல்லாம் குறித்துவைத்ததைப் பிற்காலத்தவர் உலகிற்குப் பிரயோஜனமாகும்படி கிரேக்கிலும் லத்தீனிலும் தற்கால பாஷைகளிலும் வெளிப்படுத்தியுள்ளார்கள். ஸ்ரீமான் பிள்ளை லாங் என்பவனுடைய புதிய ஆங்கில மொழிபெயர்ப்பினின்று இம்மணிமொழிகளைத் தேர்ந்தெடுத்துத் தமிழ்ப்படுத்தி வெளியிடுகிறார்கள். இம்மொழிகளை மொழிபெயர்த்ததோடு நில்லாமல், அவர் ஆசிரியனுடைய சரித்திரத்தையும், அவன் காலத்தில் அவனது ஏகாதிபத்தியம் இருந்த நிலைமையையும் பற்றிய சில செய்திகளை முகவுரையில் எடுத்துக் காட்டிப் படிப்போருக்கு ஆசிரியனுடைய உள்ள நிலைமை நன்கு தெரியும்படி செய்துவைத்திருக்கிறார்கள்.

சரீரம் மிகவும் பலஹீனமாயிருந்தும், அடிக்கடி நோய்வாய்ப்பட்டு வீழ்ந்தும், பிள்ளையவர்கள் இத்தகைய நூல்களை எழுதிவந்து தாம் "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்பதை உலகத்துக்குப் பிரசித்தப்படுத்திக் காட்டி வருகிறார்கள். அவரைப் பார்த்துத் தமிழர் மற்றோரும் மேனாட்டு வடநாட்டு நூல்களைத் தமிழ்ப்படுத்தித் தமிழிலக்கியத்தை வளர்த்து வருவார்களானால் இன்னும் சில வருஷங்களுக்குள் நமது தாய்மொழியானது வங்காளி, குஜராத்தி, மராட்டி, தெலுங்கு முதலிய தனது சகோதரிகளின் முன் தலை நிமிர்ந்து நிற்கலாகும்.

பிள்ளையவர்களின் நூல்களுக்கு அன்னியரின் நான்முகம் அனாவசியம் என்று முதலில் சொன்னேன். ஆனால் நான் அவருக்கு அன்னியன் ஆகமாட்டேன். அவரை எனது அருமை நண்பர்களில் ஒருவராகவே கருதியுள்ளேன். ஆனது பற்றியே அவருடைய வேண்டுகோளை மறுக்கத் துணியாது அனாவசியமாயினும் இம்முன்னுரையை எழுத நான் முன்வந்தனன். படிப்போர் இந்நூலைச் சிரத்தையோடு படித்து,

ஆயிரத்து எழுநூறு வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டிருந்தாலும் சத்தியத்தின் சக்தியினுல் நித்தியத் தன்மை பெற்றுவிட்ட மார்க்க ஒளரேலியனுடைய மணிமொழிகளின்படி தங்கள் வாழ்நாளை ஒழுங்குபெற நடாத்திவர முயல வேண்டும் என்று வற்புறுத்தி இவ்வுரையை நிறுத்திக்கொள்வேன்.

வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர்

பாரத்துவாஜ ஆசிரமம்,
சேரமாதேவி,
திருநெல்வேலி ஜில்லா.
பங்குனி உ௯, துந்துபி.

முன்னுரை

எந்த நாட்டிலும் சுதந்திர தாகம் எழுப்ப விரும்புபவர் முதற்கண் செய்யவேண்டிய முக்கியமான வேலை தாய்மொழி வளர்த்தலே யாம். இவ்வுண்மை அயர்லாந்து, துருக்கி, சீனம் முதலிய நாடுகளின் சமீபகாலச் சரித்திரத்தை உற்று நோக்குவார்க்குத் தெள்ளிதில் விளங்கும். பழைய நூல்கள் பட்டொழியாமற் பாது காத்தல், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை மொழிபெயர்த்தல், இறவாத புகழுடைய புது நூல்கள் இயற்றல் என மொழியை வளர்க்க மூன்று வழிகள் உண்டு. இவைகளில் இரண் டாவது வழியான மொழிபெயர்த்தலின் மூலம் என்னுலியன்ற சிறு தொண்டைச் செய்ய வேண்டுமென்பது என் விருப்பம்.

ஆயிரத்து எழுநூறு ஆண்டுகட்கு முன் ரோமாபுரியில் அரசு செலுத்திய ராஜரிஷி மார்க்க ஔரேலியனுடைய மணிமொழிகளில் முக்கியமானவற்றைப் பொறுக்கி மொழி

பெயர்த்து இந்நூலின் முதற்பாகமாக அமைத்திருக்கிறேன்.

ஔரேலியன் போன்ற ஞானிகளின் வாக்கியங்கள், வாழ்க்கைப் பாதையில் வழுக்கி விழாமல் நமக்கு உதவக்கூடிய ஊற்றுக்கோல்கள். திருவள்ளுவர்,

‘ இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல் ’

என்று கூறியிருப்பது முற்றிலும் உண்மையாகும்.

போ. திருகூடசுந்தரன்.

மார்க்க ஒளரேலியன் சரித்திரம்

ஐரோப்பாக் கண்டத்தில் இத்தாலி என்று ஒரு தேசம் இருக்கிறது. அதில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து அரசுபுரிந்த சக்ரவர்த்திகளுடைய சாம்ராஜ்யம், இன்று நடைபெறும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் போல், மிக விசாலமானதாயும் பெரிதும் வலிமையுடையதாயும் இருந்தது. அதன் வட எல்லை உலாந்தா முதல் ஹங்காரியா உக்ரானியா வரையில் இருந்தது. கீழ் எல்லை பாரஸீகத்தையும், எகிப்தையும், அராபியாவையும் தொட்டது. எகிப்தினின்று மொராக்கோ வரையில் உள்ள வட ஆப்பிரிக்காப் பிரதேசங்களெல்லாம் அச்சாம்ராஜ்யத்தின் தெற்கு எல்லையாக விளங்கின. அதன் மேற்கெல்லை அத்லாந்திக் சமுத்திரமேயாகும். அதுமாத்திரமில்லை: இங்கிலாந்துகூட அந்த ஏகாதிபத்தியத்தில் ஒரு மாகாணமாகவே இருந்தது. மத்திய

தரைக் கடலை ரோமர்கள் தங்கள் வீட்டு ஏரி என்றே சொல்லிக்கொள்ளுவார்கள். அத்தனை விசாலம் அவர்களுடைய ஏகாதிபத்தியம்! அத்தனை செருக்கு அவர்களுடைய இதயத்தில்! ரோம ஜாதியார் வீரத்திலும் நீதியிலும் சிறந்திருந் தார்கள். அத்தகைய நாட்டாரோடு அக்காலத் தில் நம் பாண்டி நாட்டிலிருந்த மன்னர்கள் பலவிதத்தில் சிநேக பாவத்தோடு தொடர்பு கொண்டு வாழ்ந்து வந்தனர்.

அந்தச் சாம்ராஜ்யத்திற்குத் தலைநகர் ரோமாபுரி. அதில் செங்கோலோச்சிய சக்ர வர்த்திகளுள்ளே தலைசிறந்தவன் மார்க்க ஒளரேலியன். அவன் பல சமயங்களில் எழுதி வைத்திருந்த ஞாபகக் குறிப்புக்களை இப் பொழுது 'மணிமொழிகள்' என்னும் பெயரால் வழங்கிவருகின்றன. அந்த ஞான மலர்களில் சிலவற்றையே இந்நூலில் மொழிபெயர்த்து அமைத்திருக்கிறேன். அவைகளில் எத்தகைய உயர்ந்த ஞானமும், ஒழுக்க போதமும், ஆன்ம உறுதியும் நிறைந்திருக்கின்றன என்பதை வாசிப் போர் எளிதில் அறிந்துகொள்வர். சக்ரவர்த்தி மார்க்க ஒளரேலியன், உயர்ந்த ஞானத்தைச்

சிந்தித்ததோடு நில்லாது, அதன்படியே ஒழுகியும் வந்தவன். உலகில் பெரியோரின் உயர்ந்த ஒழுக்க நடை என்றும் நமக்கு உறுதி பயக்கும். அப்பெரியோரும் அரசராய், அளவற்ற செல்வமும், அகன்ற ராஜ்யமும், அவற்றால் உண்டாகும் சுகானுபவங்களும் தங்களுக்கிருந்தும் அவைகளில் பற்றின்றித் தாமரையிலைத் தண்ணீர் போல் வாழ்ந்திருப்பின், அத்தகையவரின் சரிதையால் நாம் பெறும் நன்மையை அளவிட முடியாது. ஆகையின், மார்க்க ஒளரேலிய சக்ரவர்த்தியின் மணிமொழிகள் நம்மால் பெரிதும் போற்றத் தக்கன.

ஒளரேலியன் ரோமாபுரியில் கிறிஸ்து பிறந்த பின் 121-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிறந்தான். அவன் தந்தை அன்னிய வேரஸ் என்பவர் அந்நகரின் தலைமை நீதிபதியாய் இருந்தார். மார்க்கன் பிறந்து மூன்று மாதத்திற்குள் அவன் தந்தை இறந்துவிட்டார். தந்தையின் சகோதரியின் கணவனான அந்தோனீன பியன் என்பவன் அப்பொழுது ரோம ராஜ்யத்திற்குச் சக்ரவர்த்தியாயிருந்தான். 'உலகத்தில் தோன்றிய சான்றோர்களில் இவனே பரிபூரணமானவன்'

என்று மாரிஸ் மாட்டர்லிங்க் என்னும் பேரறிஞர் புகழ்கிறார். இத்தகைய சக்ரவர்த்திக்கு இரண்டு அபிமான புத்திரர் இருந்தனர். அவர்களில் நம் மார்க்க ஔரேலியன் ஒருவன். ஆகையால் மார்க்கன் சிறந்த கல்வியும் அரசர்க்குரிய வித்தைகளும் கற்பிக்கப்பட்டான். மார்க்கன், தனக்குக் கடவுள் அருளால் வாய்த்த தந்தை, தாய், அபிமான பிதா, ஆசிரியர் அனைவரும் வெகு நல்லவர் என்றும், அவர்களால் தான் அடைந்த பயன் அளவற்றது என்றும், அதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துவதாகவும் கூறியுள்ளான். அவனுக்குக் கல்வி போதித்த ஆசிரியர்களெல்லோரும் அக்காலத்திய அறிஞர்களில் மிகச் சிறந்தவர்கள். அவர்களில் அவனால் பெரிதும் போற்றப்பட்டவன் ருஸ்திகன் என்பவன். அவன் மார்க்கன் சக்ரவர்த்தியான பின்னும் மார்க்கனுக்கு மதிமந்திரியாயிருந்தான். இவ்வளவு சிறந்த ஆசிரியர்களையும் இவ்வளவு சிறந்த மாணவனையும் காண்பது அரிது என மேனாட்டு அறிவாளிகள் கூறுகின்றனர்.

மார்க்கன் முதலில் கவி பாடவும், பிரசங்கம் செய்யவும் கற்றான். ஆனால், வயது பதினொன்று

வந்தவுடன், அவைகளில் வெறுப்புற்றுத் தத்துவ சாஸ்திரம் கற்பதில் நாட்டங் கொண்டான். தத்துவ சாஸ்திரிகளைப் போல சாதாரண உடை உடுத்தி, ஊண் மிகச் சுருக்கி, படிப்பில் அதிகச் சிரம மெடுத்துக்கொண்டான். அதனால் அவனுடைய தேக சுகமும் சிறிது குறைந்திருந்தது. பின்னர் அரசர்க்கு அவசியந் தெரியவேண்டிய சட்டக் கல்வியையும் ஆயுதப் பயிற்சியையும் மேற்கொண்டான்.

இருபத்தைந்தாவது வயதில் மார்க்கன் தன் மாமனும் அபிமான பிதாவுமான சக்ரவர்த்தி அந்தோனீன பியனின் புத்திரியாகிய பௌஸ்தீனு என்னும் அரசிளங் குமரியை மணந்தான். சக்ரவர்த்தி அவனுக்கு ரோம ராஜ்யத்தில் யுவராஜாவுக்கு வழக்கமாக வழங்கும் ஸீஸர் என்னும் நாமம் சூட்டி, ராஜ்ய நிர்வாகக் காரியங்களிற் பல்வற்றை அவனிடம் ஒப்புவித்தான். சக்ரவர்த்தியின் மரணகால பரியந்தம் இருவரும் மன ஒற்றுமை மாறாமல் நட்புடன் வாழ்ந்து வந்தனர்.

161-ஆம் வருஷத்தில் சக்ரவர்த்தி பியன் இறந்துவிடவே மந்திராலோசனை சபையார் மார்க்க

னைச் சக்ரவர்த்தி பதவியை ஏற்று ராஜ்யபாரத்தை நிர்வகிக்கும்படி கேட்டனர். ஆனால், முன் சொன்னபடி பியனுக்கு வேரன் என்று மற்றோர் அபிமான புத்திரன் இருந்தபடியால் அவனும் தன்னோடு கூடவே சிங்காதனம் ஏறவேண்டுமென்று மார்க்கன் வற்புறுத்தினான். கடைசியாக மந்திராலோசனை சபையாரைத் தனக்கு இணங்கும்படியும் செய்துவிட்டான். ஆகவே, இருவரும் சம உரிமையுடன் சக்ரவர்த்திகளாக இருந்துகொண்டு ராஜ்யத்தை ஆள ஆரம்பித்தனர். வேரன் போகாதுரனாகவும் பெருநோக்கற்றவனாகவும் இருந்தும், மார்க்கன் அவனுடைய குற்றங்களைப் பாராட்டாமல் அவனுடைய தவறுகளால் வரும் தீமைகளைப் பொறுமையோடும் சாமர்த்தியத்தோடும் விலக்கிக்கொண்டு, அவனோடுகூடச் சுமுகமாகவே இருந்துவந்தான். சுமார் எட்டு வருஷங்கள் இவ்வாறு நடந்துவந்தது. ஒன்பதாவது வருஷத்தில் வேரன் இறந்தான். அதன் பிறகு மார்க்கன் ஏகச் சக்ரவர்த்தியாக ஆட்சியை நடத்திவந்தான்.

161-ஆம் வருஷத்தில் ராஜ்யபாரம் வகிக்க ஆரம்பித்த நாள்முதல் அவனுடைய ஆயுள் இறுதி

வரை, மார்க்கன், தன் விருப்பத்துக்கு மாருக, தனது காலத்தை யுத்தங்களிலேயே கழிக்கும் படி நேர்ந்தது. 175-ம் வருஷத்தில் ஆவிதிய காஸ்ஸியன் என்னும் ரோம தளபதி ஒருவன் ஆசியாவில் சக்ரவர்த்திக்கு எதிராகக் கலகம் செய்தான். ஆனால் அவனைச் சக்ரவர்த்தியின் அதிகாரிகளில் சிலர் கொன்றுவிட்டனர். அதைக் கேட்டவுடன் மார்க்கன் மிகவும் துக்கித்தான். "அவனை மன்னிப்பதால் வரக்கூடிய ஆனந்தம் கைநழுவிப் போனமைபற்றி வருந்துகிறேன்!" என்று சொன்னான். இத்தகைய நல்லெண்ணத் தோடு மாத்திரம் நில்லாமல், மார்க்கன், அக் காஸ்ஸியனின் குடும்பத்தாரையும் நண்பரை யும் மிகப் பட்சமாகவே நடத்தி, தன் அருளுடை மையை விளக்கிச் சிறந்தான்.

175-ஆம் வருஷத்தில் போர் நிமித்தமாக வெளி யூருக்குச் சென்றிருந்த காலத்தில் மார்க்கன் தன் அருமை மனைவியை இழந்துவிட்டான். அவன் அவளிடம் அதிகமான அன்பு வைத் திருந்தான். "பணிவுடையாள், ஆடம்பரமற்ற வள், அன்புடையாள்" என்று அவளைப் புகழ்ந்

துரைக்கிருன். ஆகவே, அவள் பிரிவை ஆற்ருமல் மிகுந்த கிலேசமுற்ருன்.

தன் தந்தை பியன் தன்னை அரச நிர்வாகத்தில் சேர்த்துக்கொண்டது போல் தானும் மறு வருஷத்தில் தன் மகன் **கொம்மோதன்** என்பவனைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டான். மிகுந்த ஒழுக்க சீலனுன மார்க்கனுக்குப் பிறந்தும், அவனோடு சேர்ந்து வாழ்ந்தும், கொம்மோதன் தந்தை இறந்தபின் துன்மார்க்கனுய் விட்டான். ஆனுல், சிறுவயதில், அதாவது 19-ஆவது வயதில், தந்தையின் மரணத்தால் தனியே விடப்பட்டதனுல் அவன் அவ்விதம் துன்மார்க்க னுயிருக்கக்கூடும். மேலும் சன் மார்க்கருக்குத் துன்மார்க்கர் பிறப்பதை அநுபவத்தில் பார்த்திருக்கிருே மல்லவா ?

மார்க்க ஔரேலியன் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவன் அல்லன். அக்காலத்தில் ரோம ராஜ்யத்தில் பெரும்பான்மையோருடைய மதம் வேறு. அப்பொழுதுதான் கிறிஸ்தவ மதம் சிறிது சிறிதாய்ப் பரவிக்கொண்டிருந்தது. ஆனுல் பொதுஜனங்கள் அதை வெறுத்துக்

கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி வந்தனர். அரசரும் பிறரும் அவர்களால் உண்மை ஞானத்துக்கும், பொதுவாழ்வுக்கும், ராஜ்யத்துக்கும் பெருங் கேடே விளையுமென்று உண்மையாய் நம்பியிருந்தனர். இந்நிலைமையில் மார்க்கனும் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும்படி கட்டளையிட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், ஆசிரியர்களில் சிலர் அவன் அவ்விதம் செய்தனன் என்றும், சிலர் அவ்விதம் செய்யவில்லை என்றும் கூறுகின்றனர். இச்சிறு நூலில் அதைப்பற்றி விவரித்து நிர்ணயித் தெழுத வேண்டியதில்லை. ஒன்றுமட்டும் சொல்லலாம் : கிறிஸ்து நாதரின் ஹிதோபதேசம் முழுவதும் அவனுக்குத் தெரிந்திருந்தால், அவன் கிறிஸ்தவருக்கு யாதொரு கேடும் செய்ய ஒருப்பட்டிரான் என்பது நிச்சயம். ஏனெனில், பகைவரை மன்னித்தலையே தலைசிறந்த தர்மமெனக் கிறிஸ்து நாதர் கூறியது போல் இவனும் கூறி, அவ்விதமே நடந்தும் வந்தவன்.

மார்க்கன், கி. பி. 179-ஆம் வருஷத்தில், அதாவது தன் ஐம்பத்தொன்பதாவது வயதில், பாசறையிலே இறந்தான். அவன் இறக்கும்

சமயத்தில் அவனைச் சூழ்ந்து நின்ற மந்திரிகளும் சேனுபதிகளும் அவன் பிரிவை எண்ணி அளவில்லாத துக்க மேலீட்டால் கண்களில் நீர் பெருக நின்றனர். அதைக் கண்ணுற்ற மார்க்கன், "ஏன் அழுகின்றீர்கள்? சேனையைப் பற்றியே சிந்தியுங்கள். எனக்காக வருந்தாதீர். நீங்கள் பின்னுல் வருவீர்கள், நான் முன்னுல் போகிறேன். அவ்வளவுதானே! விடை தாருங்கள், போய் வருகிறேன்!" என்று கூறினன். அவனுடைய தேகம் ரோமாபுரிக்குக் கொண்டுவரப்பட்டு வெகு விமரிசையாக அடக்கஞ் செய்யப்பட்டது. கொம்மோதன் அவனுடைய ஞாபகார்த்தமாக ரோமாபுரியில் ஒரு கோபுரங் கட்டி அதன்மீது அவன் சிலையை நிறுத்திவைத்தான். பிரஜைகள் அனைவரும் அவனைத் தங்கள் கிரகதேவதைகளில் ஒன்ருக மதித்து வீடுகளில் அவனுடைய விக்கிரகமொன்றை வைத்துப் பூசித்து வரலாயினர்.

மார்க்க ஔரேலியனுடைய புகழைப் பாடாதார் இல்லை. ஒருவனை அவனோடு கூடவே இருந்தவர் புகழ்வதும், அவனுடைய பகைவர் புகழ்வதும் துர்லபம். ஆனுல் இவனை உடன் வாழ்ந்தவர் பகைவர் உள்படச் சகலரும் புகழ்ந்தனர் என்ருல் இவனுடைய மேன்மையை என்

னென்று சொல்வது! மேலும், உலகம் யாரையும் பரிபூரண புருஷன் என்று ஒப்புக்கொள்வதில்லை; ஒவ்வொருவன் மீதும் ஏதாவது ஒரு குற்றத்தை ஏற்றியே வைக்கிறது. அரசர்கள் ஜீவந்தர்களாக இருக்கும் வரையில் பிரஜைகள் அவர்களிடம் தேவபக்தி செலுத்துகிறார்கள். ஆனால், அவர்கள் இறந்தவுடன் அவர்களுடைய குற்றங்களைப்பற்றிக் கூசாமல் வாதிக்கிறார்கள். ஆயினும், உலகம் அன்று முதல் இன்று வரையில் மார்க்கனைக் கோதிலாப் பெருங் குணத்தானாகவே மதித்து வருகிறது. மார்க்கனுடைய விக்கிரகம் இங்கிலாந்து முதலான தூர தேசங்களிலும் வணங்கப் பட்டு வந்தது என்றால் மார்க்கனுடைய சிறப்பை எவ்வாறு அளவிடக்கூடும்?

அந்தப் பெருந்தகையின் உடல் வாழ்வு இத்தன்மையதாக, அவனுடைய ஆன்ம வாழ்வின் சௌந்தரியத்தைச் சிறிது கவனிப்போம். அவனுடைய ஆன்ம வாழ்வை அறிவதற்கு நமக்கு ஆதாரமாக உள்ளவை அவனுடைய மணிமொழிகளே. இம்மணிமொழிகள், தினந்தோறும் தனக்குத் தோன்றிய பொழுதும், ஆறுதல் வேண்டிய காலத்தும், அநேகமாகப் போருக்

று்ச் சென்றிருந்த காலத்தில் பாசறையில் வைத்தும் எழுதப்பட்டவை. எல்லாம் அவன் சொந்தப் பார்வைக்கென்றே எழுதப்பட்டவை. ஆதலால் அவைகளின் வாசக நடை சிறப்புற்றிருக்கவில்லை. ஆனால் அவைகளில் அவனுடைய அருளறம் பூண்ட நெஞ்சம் தெளிந்த நீர் போல் பிரகாசிக்கின்றது; அவைகளில் அவனுடைய கொள்கையையும், அதன்படி நடக்க அவன் பட்ட கஷ்டங்களையும், அக்கஷ்டங்களை அவன் நீக்கிக்கொண்ட வழிகளையும், பிறவற்றையும் நாம் பரக்கக் காணலாம்.

அவனுடைய மொழிகள் எவ்விதத்தில் நமக்கு நன்மை பயக்கும்? உலகில் எத்தனையோ பெரியோர்கள் நீதிநெறியைப் பல வழிகளில் விளக்கியிருக்கின்றனர். ஆனால் வெகு சிலருடைய மொழிகளே, கேட்பாரைப் பிணித்து, கேட்டவையின்படி செய்யத் தூண்டக் கூடியவைகளா யிருக்கின்றன. அத்தகைய குணமுடையன மார்க்க ஒளரேலியனுடைய மணிமொழிகள். ஆகையால், அனைவரும் அவற்றை வாசித்து, மனம் திருந்தி, நல்வாழ்வு பெறவேண்டு மென்பதே என் அவா.

மேனாட்டு ஞானமலர்கள்

I

மார்க்க ஒளரேலியன் எழுதியவை

காலையில் எழுந்தவுடன் கீழ்க்கண்டவாறு சிந்திப்பாய்: இன்று நான் நன்றி கொல்பவனையோ, அல்லது பொறாமையுடையவனையோ, அல்லது வஞ்சகம் செய்பவனையோ சந்திக்கக்கூடும். அவர்களுக்கு இக் குணங்கள் அமைவது எப்படி? நன்மை இது, தீமை இது என்னும் பகுத்தறிவு இன்மையேயாகும். ஆனால், நன்மை அழகுள்ளது, தீமை அழகற்றது, தீங்கிழைப்பவன் ரத்தத்தால் மட்டுமன்றி, அறிவினாலும், மக்களிடமுள்ள தெய்வாம்சத்தாலும் எனக்கு உறவினனென்று நான் அறிவேன். ஆகையால் ஒருவரும் எனக்குத் தீங்கிழைக்க முடியாது, நானும் என் உறவினர்களைக் கோபிக்கவும் முடியாது, பகைக்கவும் முடியாது. நாம் அனைவரும் தேகத்திலுள்ள கை கால்கள், கண்ணிமைகள் போல ஒத்துழைக்கவே உண்டாக்கப்பட்டிருக்கிறோம். ஒருவர்க்கொருவர் விரோதமாய் நடப்பது இயற்கைக்கு விரோதம். ஒருவரிடம் கோபப்படுதலும், அவரைவிட்டு அகலுதலும் ஒருவர்க்கொருவர் விரோதமாய் நடப்பதேயாகும். 1

* * *

நீ செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் அஜாக்ரதை, அறிவு காட்டும் வழியில் வெறுப்பு, அடைந்ததில் அதிருப்தி, வஞ்சகம், சுயநலம் முதலியவற்றை அறவே அகற்றி, அவ்வக்காரியத்தை உன் வாழ்நாளில் கடைசிக் காரியமாகப் பாவித்துச் செய்தால் உனக்கு யாதொரு துன்பமும் வராது. 2

* * *

மனிதனுக்கு நல்வாழ்வுக்கு வழி காட்டுவது எது? — தத்துவ சாஸ்திரம் ஒன்றுதான். தத்துவ சாஸ்திரம் என்பது மனச்சாட்சிக்கு மாறாக நடவாமலும், இன்ப துன்பங்களால் இடருறாமலும், செய்வதை லட்சிய மின்றியோ அல்லது பொய்யாகவோ அல்லது வஞ்சக மாகவோ செய்யாமலும், பிறர் இன்னது செய்யவேண் டும் அல்லது செய்யக்கூடாது என்று விரும்பாமலும், வருவதெல்லாம் தான் வந்த இடத்திலிருந்தே வருவ தாய் எண்ணியும், மரணத்தைப் பயமேது மின்றிச் சந்தோஷத்துடனே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதுமேயாகும். 3

* * *

நாம் அறநெறிக்கு வருவதற்குக் காலம் தாழ்த்தல் ஆகாது. ஏனெனில், தினந்தோறும் நமக்கு மரணம் சமீபித்துக்கொண்டே வருகிறது. அம்மட்டோ? மரணம் வருமுன்னதாகவே, நன்மை இது, தீமை இது

என்று அறியும் பகுத்தறிவை நாம் இழந்துவிடவும் கூடும். 4

* * *

இயற்கையில் உண்டாகும் பொருள்களிலிருந்து விளையும் மற்றப் பொருள்களும் மனத்திற்கு மகிழ்ச்சி தருவனவாய் இருக்கின்றன. வளைந்து தொங்கும் தானியக் கதிர்கள் – சிம்மத்தின் கண்ணிமைகள் – காடியின் வாய்நுரை – தனித் தனியே நோக்கும் பொழுது அழ கில்லாதனவாகக் காணப்பட்டாலும், அவை இயற்கையில் உண்டான பொருள்களின் விளைவுகளே ஆகையால் அழகாகவும் தோன்றுகின்றன, மனத்திற்கு மகிழ்ச்சியும் தருகின்றன. அதுபோல இயற்கையையும் இயற்கை விளைவுகளையும் உள்ளவாறு உணர்ந்தவனே முதியவர்களிடமும் ஒருவித அழகு உண்டென்று அறியக்கூடும்; இளையோரின் அழகையும் அவனே களங்கமற்ற இதயத்தோடு அநுபவிக்கக்கூடும். 5

* * *

பலி பீடத்தின்பேரில் பல சாம்பிராணித் துணுக்குகள் விழுந்துவிடுகின்றன. ஒன்று முன் விழும், ஒன்று பின் விழும். ஆனல் அவற்றுள் வித்தியாசம் என்ன இருக்கிறது? 6

* * *

மனச் சாந்தியோடு நின்று தேவ வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய சாதனங்கள் மிகமிகச் சிலவேயாகும். 7

* * *

பிறர் மனத்தகத்தே நிகழ்கின்றவற்றைத் தாம் அறியாமையால் துன்புறுபவரை யாம் கண்டதில்லை. ஆனால் தம் மனத்தகத்தே நிகழ்கின்றவற்றை உன்னிப் பாராதவர் என்றும் இன்பம் உறுதல் இலர். 8

* * *

வெகுஜனப் பிரயோசனமான காரியங்களில் பிரவர்த்தியாத காலத்து அயலாரைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே உன் வாழ்நாளை வீணாக்காதே. ஏனெனில் பிறர் என்ன நினைக்கிறார்கள், என்ன பேசுகிறார்கள், என்ன செய்கிறார்கள் என்று நீ நினைத்துப் பார்க்கும் நேரத்திலெல்லாம் உன்னாற் செய்யக் கூடியவற்றைச் செய்யா தொழிகிறாய். 9

* * *

மனத்திலே வியர்த்தமான எண்ணங்களும் எழாமல் நாம் காத்துக்கொள்ள வேண்டும். யாராவது திடீரென்று, "நீ இப்பொழுது என்ன எண்ணிக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டால், உடனே இன்னது என்று பயமின்றிப் பகிரங்கமாய்ச் சொல்லக்கூடிய விஷயங்களைப் பற்றி மட்டுமே எப்பொழுதும் மனத்தில் எண்ணும்படி நாம் பழகவேண்டும். 10

* * *

மனிதன் எல்லோருடைய அபிப்பிராயங்களையும் பின்பற்ற வேண்டியதில்லை. இயற்கையோடு இணங்கி நல்வழி நிற்பவரின் அபிப்பிராயத்தையே பின்பற்ற வேண்டும். 11

* * *

எப்பொழுதும் சந்தோஷமாக இரு. பிறரால் வரும் சாந்தியையாவது, பிறருடைய உதவியையாவது தேடாதே. மனிதன் தன் பலத்தைக் கொண்டே தானாகவே நிமிர்ந்து நிற்கவேண்டும். 12

* * *

தீய எண்ணங்களுக்கு ஒருபொழுதும் இடங் கொடாதே. எப்பொழுதாவது சிறிதேனும் இடங் கொடுத்துவிட்டால் பின் தடுமாற்றமின்றி நன்மையை நாடுதல் கஷ்டமாய்விடும். 13

* * *

மனிதர் ஏகாந்தமாயிருக்க விரும்பிக் கடற்கரைக்கும் மலைகளுக்கும் போகின்றனர். ஆனால் இது வெகு சாதாரணமான மனிதர் செயல். ஏனெனில் எவனும் விரும்பினால் தன்னுள்ளேயே ஏகாந்தமாயிருக்க முடியும். சாந்தி தரக்கூடிய எண்ணங்களைச் சிந்தையில் எழவிட்டால் அவ்வளவு அமைதியும் தனிமையும் வேறெங்கும் காண முடியாது. சாந்தி என்பது அந்தக் கரணத்தின் சீர்பாடேயன்றி வேறன்று என்பேன்.

ஆகையால் நீ இத்தகைய தனியிடத்திற்கே அடிக்கடி சென்று உன் வாழ்வைப் புதுப்பித்துக்கொள். 14

*　　　*　　　*

நீ உன் வாழ்க்கைக்குக் கட்டளைக் கல்லாக வைத்துக் கொண்டிருக்கிற தத்துவங்கள் சிலவாயும் மூலாதாரத் தத்துவங்களாயும் இருக்கட்டும். எங்ஙனமெனின், உனக்கு ஒரு விஷயம் அதிருப்தியை உண்டாக்குகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது நீ உன் தத்துவங்களைத் தியானித்த மாத்திரத்தில் உன் அறிவு நிர்மலமாகிச் சற்று நேரத்துக்கு முன் உனக்கு அதிருப்தியை உண்டாக்கின பொருள்களினிடத்து மலர்ச்சியோடு உன்னைச் செலுத்தவேண்டும். மனிதருடைய தீமையைக் கண்டு உன் மனது சஞ்சலமடைகிறதா? அப்பொழுது மனிதர் பரஸ்பர உதவிக்காகவேதான் ஜீவிக்கிறார்கள் என்றும், பொறுமையில்லாதவர் நீதிமான்களாயிருக்க முடியாது என்றும், மனிதர் இஷ்டத்தோடு தீங்கிழைக்கிறதில்லை என்றும் நினைத்துக் கொள். இரண்டு தத்துவங்களைச் சமய சஞ்சீவியான தத்துவங்களாகப் பாவித்து மனத்தில் அவைகளை எப்பொழுதும் நிறுத்திக்கொண்டிரு. அவைகளில் ஒன்று இதுவாகும்: அதாவது, உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் ஆன்மாவுக்குப் புறம்பானவை ஆதலால் எப்பொருளுக்கும் ஆன்மாவைப் பாதிக்கும் ஆற்றலில்லை; நம் மனச் சஞ்சலங்களெல்லாம் நம் மனத்தினுள் நின்று

எழும் தோற்றங்களினின்றே எழுகின்றன. மற்றத் தத்துவத்தை இதுவென்று கூறலாகும்: அதாவது நீ பார்க்கிற இவையெல்லாம் க்ஷண நேரத்தில் மாறுந் தன்மை உடையன. இத்தகைய மாறுதல்கள் இதற்கு முன் எத்தனை பார்த்திருக்கிறாய் என்பதை யோசித்துப் பார். உலகம் நிலையற்றது, என்றும் மாறுந் தன்மையது. வாழ்க்கை என்பது அறிவின் இயக்கமே யன்றி வேறில்லை. 15

* * *

அகங்கார மமகாரங்களை நீ நீக்கிவிட்டாயானால், "எனக்கு இன்னான் துன்பிழைத்துவிட்டான்" என்கிற எண்ணமே உனக்கு இல்லாமல் போய்விடும். "எனக்கு ஒருவன் துன்பிழைத்துவிட்டான்" என்கிற எண்ணம் இல்லாமற் போய்விட்டதானால் துன்பமே இல்லாது போய்விடும். 16

* * *

உனக்குத் தீமை செய்பவன் அதைப்பற்றி எவ்விதம் கருதுகிறானோ அதுபோலேனும், அல்லது நீ அதைப் பற்றி எவ்விதம் கருதவேண்டுமென்று அவன் விரும்புகிறானோ அதுபோலேனும் நீ கருதாதே. ஆனால், அது உண்மையில் எவ்விதம் இருக்குமோ அவ்விதமே நீ அதைப்பற்றிக் கருதுவாய். 17

* * *

எப்பொழுதும் உன் வாழ்வில் வழிகாட்டிகளாக இந்த இரண்டு விதிகளைத் தயாராய் வைத்திரு—ஒன்று,

உன்னை ஆள்வதும் உனக்கு உத்தரவு இடுவதுமான உன் மெய்யறிவு கூறுவதையே செய்வது. — மற்றொன்று, யாரேனும் உன் அபிப்பிராயம் தவறு என்று சொல்லித் திருத்தினால் உன் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வது — ஆனால், அபிப்பிராயத்தை மாற்றுவதால் சுகம் வரும் என்றோ புகழ் கிடைக்கும் என்றோ கருதாமல், நியாயமானது, பொதுநன்மைக் கேற்றது என்று கருதியே அபிப்பிராயத்தை மாற்றிக்கொள். 18

*　　*　　*

பதினாயிர வருஷகாலம் உயிரோடிருக்கப் போவதாக எண்ணி நடவாதே. மரணம் உனக்காக எப்பொழுதும் காத்துக்கொண்டிருக்கிறது. உடலில் உயிருள்ள பொழுதே நல்வினை செய். உயிர் போன பிறகு உனக்கு ஏதும் செய்யச் சாத்தியமிராது. 19

*　　*　　*

பிறர் நினைப்பதையும், சொல்வதையும், செய்வதையும் கருதாமல், தான் செய்வது நீதியும் நெறியும் பொருந்தியதா என்று மட்டும் கருதுபவனை விட்டகலும் துன்பங்கள் பல. பிறர் துன்மார்க்கத்தை லட்சியம் செய்யாதே. நீ மாத்திரம் நெறியினின்று ஒரு மயிரிழையேனும் பிறழாமல் நட. 20

*　　*　　*

"மன அமைதி வேண்டுமானால் உன் வேலைகள் மிகச் சிலவாக இருக்கட்டும்" என்று ஒரு ஞானி கூறு

கிறர். ஆனல் இது அதைவிட மேலான விதியா யிராதோ என்று யோசித்துப் பார்: அதாவது—"இன்றி யமையாத காரியங்களை, பொது நன்மையைக் கவனிப் பதே இயற்கையாகவுடைய உன் நல்லறிவு கூறும் காரி யங்களை மாத்திரம் அந்நல்லறிவு கூறும் முறையில் செய்வாய்".—இதனல் வேலைகள் குறைவதால் வரும் அமைதியோடு அவற்றை நன்ருய்ச் செய்வதால் வரும் அமைதியும் கிடைக்கும். அனுவசியமான செய்கை களைச் செய்யாமலிருப்பதோடு அனுவசியமான நினைவு களையும் நினைக்காமல் இருக்கவேண்டும். ஏனெனில் அப்பொழுதுதான் அவசியமற்ற செய்கைகள் நிகழா. 21

* * *

எவனேனும் உனக்குத் தீங்கிழைக்கிறனு? அவன் உண்மையில் உனக்குத் தீங்கிழைக்கவில்லை. தனக்கே தான் கேடு சூழ்ந்து கொள்கிறன். 22

* * *

பிறன் கையை எதிர்பார்ப்பவன்தான் ஏழை. தன் வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தையும் தன் ஆத்மாவினுள்ளே சேமித்து வையாதவன்தான் வறிஞன். 23

* * *

இப்பொழுது நிகழ்பவை இனி நிகழ்பவைகளுக்கு ஒருவிதத்தில் வித்தாகும். 24

* * *

"நீ ஒரு பிரேதத்தைச் சுமந்து செல்லும் சிறிய ஆவி"* என்று எபிக்டேத்தஸ் அடிக்கடி கூறுவான். 25

*   *   *

அலைகள் ஓயாமல் மோதும் கற்பாறை போன்று இரு. அது உறுதியாய் நின்று தன்னைச் சூழ்ந்துள்ள ஜலத்தின் வேகத்தை அடக்குகின்றது. 26

*   *   *

இந்தக் கஷ்டம் எனக்கு நிகழ்ந்துவிட்டதென்று துன்புறுகின்றேனா? இல்லை. இக்கஷ்டம் நிகழ்ந்தால் எனக்கென்ன? நிகழ்காலத்தில் என்னை நசுக்கக்கூடியது ஒன்றுமில்லை. வருங்காலத்தில் நான் பயப்படக்கூடியது ஒன்றுமில்லை. ஆதலின் எனக்குத் துன்பம் எது? 27

*   *   *

சஞ்சலம் ஏற்படும் போதெல்லாம், "இஃது ஒரு கஷ்டமன்று; மற்று இதைத் தீரத்தோடு சகிப்பது ஒரு

---

* உடலே நித்தியமானது என்று பேதைமையால் எண்ணியிருப்போருக்கு யாக்கை நிலையாமையை இதைவிடச் சிறந்த முறையில் தெளிவுபடுத்த இயலாது. உடலைத் தாங்கித் திரியும் ஆன்மா சவம் சுமக்கும் உயிராகக் கூறப்படுகிறது. ஆன்மா பிரியும் பொழுது தான் உடல் சவமாகிறது எனினும், உடலின் சிறுமைகளையும் அழிவின் நிச்சயத்தையும் கருதி, அது எப்பொழுதுமே பிரேதம் என்று கூறப்படுகிறது.

நல்லதிர்ஷ்டமேயாகும்" என்று ஞாபகப்படுத்திக் கொள். 28

* * *

உண்பதற்கும் குடிப்பதற்கும் இயற்கை ஓர் எல்லை வைத்திருக்கிறாள். ஆனால், நீ அதை மீறிவிடுகிறாய். வேண்டியதற்கு அதிகமாக உண்கிறாய், குடிக்கிறாய். ஆனால், வேலை செய்வதிலோ நீ இவ்வாறு அளவுக்கு மீறுவதைக் காணோம். அம்மட்டோ! உனக்குச் சாத்திய மான அளவுகூட நீ வேலை செய்வதில்லை. 29

* * *

ஒரு வேலையைச் செய்வதோ அல்லது ஒரு வார்த்தையைச் சொல்வதோ நல்லதாகுமானால், அப்படிச் செய்வதையும் சொல்வதையும் கௌரவத் தாழ்வாகக் கருதாதே. 30

* * *

மனிதர் வியக்கக்கூடிய கூரிய அறிவு உனக்கில்லை என்று உனக்குத் தோன்றுகிறது. அந்த அறிவு இல்லையானால் பாதகமென்ன? உண்மை, திருப்தி, பொறுமை போன்ற வேறு எத்தனையோ குணங்களைப்பற்றி, "இவை என் சுபாவத்தில் இல்லை, அக்குணங்கள் எனக்குக் கிட்டா" என்று நீ சொல்லிக்கொள்ள முடியாது. அவைகளை அடைதல் உனக்குச் சாத்தியமான காரியமே யாகும். 31

* * *

அயலான் ஒருவனுக்கு ஓர் உதவி செய்துவிட்டால் ஒருவகை மனிதன் அதைத் தான் செய்த ஒரு பெரும் புண்ணியம் எனக் கொண்டு, தான் ஒரு வள்ளல் போல நடந்துகொண்டுவிட்டதாக நினைத்துக்கொள்கிறான்.

மற்றொருவன் அவ்வளவு தூரம் போவதில்லை; ஆனால், உதவி பெற்றவனைத் தன் கடனாளியாகக் கருதுகிறான். தான் செய்துள்ள உபகாரத்தை அவன் மறக்கிறதே யில்லை.

மூன்றாவதொருவன் ஒரு விதத்தில் தான் செய்தது இன்னது என்றுகூட அறியான். பழத்தைக் கொடுத்து விட்டு அதற்காக யாதொரு கைம்மாறும் வேண்டாத திராட்சைக் கொடி போன்றவன் அவன். பந்தயம் ஓடி வென்ற குதிரை, "இதோ என் சாமர்த்தியத்தைப் பார்!" என்று சொல்வதில்லை. வேட்டையைப் பிடித்து விட்ட நாய், "என் சௌரியத்தைப் பார்!" என்று கூறுவதில்லை. தேன் கூட்டி வைத்துவிட்ட வண்டு, "என் சக்தியைப் பார்!" என்று பெருமை பேசிக் கொள்வதில்லை. அவைகளைப் போலவே, சால்புடைய ஒருவன் ஒரு நற்காரியம் செய்தவுடன் எல்லோரையும் அழைத்து, "நான் செய்த காரியத்தைப் பாருங்கள்!" என்று மார்பு தட்டிப் பேசமாட்டான். மற்று, ஒரு தடவை பழம் தந்துவிட்ட திராட்சைக் கொடியானது

வாய் பேசாமல் மறுபடியும் காலக்கிரமத்தில் பழங்களை உயிர்க்கும் காரியத்தில் இறங்குவது போல, அவனும் இன்னொரு புண்ணிய காரியத்தில் பிரவேசித்து விடுகிறான். 32

* * *

காரியங்களை அறநெறிப்படி செய்வதில் ஏதாவது ஒரு விஷயத்தில் தவறிப் போனால் அதற்காக வெறுப் பாவது, அதைரியமாவது, அதிருப்தியாவது அடைய வேண்டாம். அறநெறியினின்றும் ஒருகால் வழுவி விட்டாயானால் திரும்பவும் அவ் அறநெறிக்கு வந்து சேர்ந்துவிடு. நீ செய்யும் காரியங்களிற் பெரும்பாகம் மனித இயற்கைக்குப் பொருந்தியதா யிருந்தால் அதுவே பெரிய காரியம் என நினைத்துத் திருப்தியா யிரு. ஆனால் நீ மீண்டு வந்து சேரும் அறநெறியை மாத்திரம் மேலும் மேலும் விரும்பு. 33

* * *

இப்பொழுது மனத்தில் நான் எண்ணிக் கொண்டிருப் பது என்ன? இப்பொழுது என் மனத்தின் ஸ்வரூபம் என்ன? அது தற்பொழுது குழந்தையின் மனத்தைப் போன்றுளதா? அல்லது ஒரு யௌவன புருஷனுடைய மனத்தைப் போன்றுளதா? அல்லது ஒரு கொடுங் கோல் மன்னன் மனத்தைப் போன்றுளதா? அல்லது சாதாரணமான மிருகத்தின் மனத்தைப் போன்

றுளதா? அல்லது ஒரு கொடிய மிருகத்தின் மனத்தைப் போன்றுளதா? இவ்வாறு அப்போதைக்கப் போது நான் சிந்தித்துப் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். 34

*　　　*　　　*

உன் மனத்தில் வழக்கமாய் நிகழும் எண்ணங்கள் எத்தகையவோ, அத்தகையதே உன் மனத்தின் லட்சணமும்; ஏனெனில் எண்ணங்களின் சாயம் ஆன்மாவுக்கு ஏறுகின்றது. ஆகையால் எப்பொழுதும் ஆன்மாவை நல்லெண்ணங்களின் சாயத்தில் தோய்க்க வேண்டும். 35

*　　　*　　　*

ஒரு மனிதன் ஓர் இடத்தில் வாழ்தல் சாத்தியமானல் அவ்விடத்தில் யோக்கியமாக வாழவுங்கூடும். ஆனல் அரண்மனையில் வாழவேண்டி யிருக்கிறதே! அதற்கும் சொல்லுவேன், — அரண்மனையிலுங்கூட நீ யோக்கியமாக வாழக்கூடும். 36

*　　　*　　　*

அசாத்தியமானதை நாடுவது பைத்தியமாகும்; ஆனல், தீயோர் அவ்விதம் நாடாமல் இருக்க முடியாது. 37

*　　　*　　　*

ஒருவன் எவ்வளவு தாங்க முடியுமோ அவ்வளவுக்கு மேலான கஷ்டம் அவனுக்கு ஏற்படுவதில்லை. 38

* * *

ராஜ்யத்திற்கு எதனால் தீங்கு விளையாதோ அது தனிப் பிரஜை எவனுக்கும் கேடு செய்யாது. ராஜ்யத்திற்கும் யாரேனும் ஒருவனால் ஒரு தீங்கு செய்யப்பட்டால் அவன்மீது கோபம் கொள்ளாதே. அவன் செய்யும் தவறை அவனுக்கு எடுத்துக் காட்டு. 39

* * *

'அதிர்ஷ்டசாலி' என்றால் நல்லதிர்ஷ்டத்தைத் தேடிக்கொண்டவன் என்றே பொருள். 'அதிர்ஷ்டம்' என்பது நல்லெண்ணங்கள், நல்லுணர்ச்சிகள், நற்செய்கைகளேயாகும். 40

* * *

தீமை செய்தாரை ஒறுத்தற்குச் சிறந்த மார்க்கம் அவர் போல் நடவாதிருப்பதேயாகும். 41

* * *

ஒரு காரியத்தைச் செய்து முடிப்பது உனக்குக் கஷ்டமாயிருந்தால் அது அசாத்தியமென்று நினைத்து விடாதே. மனிதனால் செய்யக்கூடிய, மனித இயல்பிற்கு ஒத்த எதுவும் உனக்கும் சாத்தியமே என்று நினை. 42

* * *

என் எண்ணமோ அல்லது செய்கையோ தவறு என்று எனக்கு எவனாவது அறிவுறுத்துவானானால், நான் அத்தவறைச் சந்தோஷமாய்த் திருத்திக்கொள்வேன். ஏனெனில் நான் சத்தியத்தையே நாடுகிறேன். சத்தியம் யார்க்கும் எக்காலத்தும் துன்பம் தந்ததில்லை. குற்றத்திலும் அறியாமையிலும் வாழ்பவன்தான் உண்மையில் கஷ்டப்படுபவன். 43

* * *

என் கடமையை நான் செய்கிறேன், மற்றெதுவும் எனக்கு லட்சியமில்லை. 44

* * *

தேவர்களை வணங்கு, மனிதர்க்கு உதவி செய். வாழ்நாள் சொற்பம். உலக வாழ்வின் பயன் ஒன்றே: அதாவது பக்தி நிறைந்த மனமும் பொதுநன்மைக்குரிய செயலுமே. 45

* * *

அந்தோனீனன் என்ற நிலைமையில் என் ஊரும் தேசமும் ரோமாபுரி. மனிதன் என்ற முறையிலோ என் ஊரும் தேசமும் உலகமேயாகும். இவ்விரண்டு ஊர்களுக்கும் பயன் தருவதுதான் எனக்கும் பயன் தருவதாகும். 46

* * *

உலகில் பேர் பெற்றவர்களும், பேர் பிறர்க்குத் தெரியாதவர்களும் முடிவில் மண்ணாகிவிட்டனர். அதனால் அவர்க்கு நேர்ந்த கேடு யாது? உண்மையும் நீதியும் கடைப்பிடித்து, பொய்யரிடத்தும் அநியாயஸ்தரிடத்துங்கூட அன்பு பாராட்டி வாழ்வதே உலக வாழ்வில் உயர்ந்த பயன் தருவதாகும். 47

* * *

உனக்குச் சந்தோஷம் வேண்டுமென்று இருந்தால் உடனே உன்னுடன் வாழ்பவரின் குணநிசயங்களைப் பற்றி நினை. ஏனெனில் நம்முடன் வாழ்பவரிடம் நற்குணங்கள் அதிகமாய் விளங்குமாயின், அத்தகைய நற்குண உதாரணங்களைப் போல் நமக்கு மகிழ்ச்சி தருவது வேறொன்றுமில்லை. ஆகையால் அவர்களை நாம் எப்பொழுதும் இதயத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 48

* * *

தேனிக் கூட்டத்திற்கு நன்மை தராதது தேனிக்கும் நன்மை தராது. 49

* * *

மனிதர்களைச் சந்தோஷப்படுத்தி நம் அபிப்பிராயப்படி நடக்கச் செய்ய முயல்வோம். ஆனால் நீதி முறை அவர்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக நம்மை நடக்கச் சொன்னால், அப்படி அவர்களுக்கு

விரோதமாகவும் நடப்போம். ஆயினும், யாரேனும் பலாத்காரத்தால் நம் காரியத்துக்குத் தடைசெய்தால், சாந்தியும் திருப்தியுமுற்று, உடனே அத்தடையை வேறோர் நற்குணத்தை அனுஷ்டிப்பதற்கு உதவியாகச் செய்து கொள்வோம். நாம் செய்ய முடியாத காரியத்தைச் செய்ய விரும்பவில்லை, செய்யக்கூடிய காரியத்தையே செய்ய முயன்றோம் என்று ஞாபகத்திலும் வைத்துக்கொள்வோம். 50

* * *

புகழை விரும்புபவன் பிறருடைய தாளாண்மையைத் தனக்குத் தாயகமாகக் கருதுகிறான். இன்பத்தை விழைபவன் புலன் நுகர்ச்சியையே தன் நன்மையாகக் கருதுகிறான். ஆனால், அறிவுள்ளவனோ தன்னுடைய முயற்சியையே தனக்குத் தாயகமாகக் கருதுகிறான். 51

* * *

மக்கள் சிறப்பெல்லாம் அவர் விரும்பி நாடும் விஷயங்களின் சிறப்பளவே யாகும். 52

* * *

தீங்கிழைத்தவரிடத்திலும் அன்பு காட்டல் மனிதன் ஒருவனுக்குத்தான் சாத்தியமாகும். ஒருவன் நமக்குத் தீங்கிழைக்கும் பொழுது, அவன் நமக்குச் சகோதரன் தான் என்றும், அறியாமையால்தான் அவன் அவ்விதம்

செய்கிறுன் என்றும், அவனும் நாமும் வெகு சீக்கிரத்தில் இறந்து ஒழிவோம் என்றும், அவன் தீங்கிழைத்தும் நம் ஆன்மாவிற்கு யாதொரு பங்கமும் ஏற்படவில்லை என்றும் நாம் கருதினுல் உடனே அவன்பால் நமக்கு அன்பு பிறக்கும். 53

*   *   *

குற்றம் செய்யும்பொழுது குற்றம் செய்கிறேம் என்று உணரும் அறிவு போய்விட்டால், அதன்பின் உயிர் வாழ்வதால் என்ன பயன்? 54

*   *   *

ஒருவன் உனக்குத் தீங்கு செய்தால், உடனே தர்ம அதர்மத்தைப் பற்றி அவன் என்ன அபிப்பிராயம் வைத்துக்கொண்டு அத்தீங்கு செய்தான் என்று யோசித்துப் பார். அவ்வாறு யோசித்துப் பார்த்தால், உனக்கு ஆச்சரியமாவது கோபமாவது வராது; அவனிடம் உனக்கு இரக்கமே உண்டாகும். ஏனெனில் யோசித்துப் பார்க்கும்பொழுது அவன் செய்ததையோ அல்லது அதைப் போன்ற ஒன்றையோ நீயே நல்லதென்று கருதலாம்; அப்படியாஞல் அவனை மன்னிப்பது உன் கடன். அல்லது அவன் தர்மம் என்று நினைப்பதை நீ அதர்மமாகவும், அவன் அதர்மம் என்று நினைப்பதை நீ தர்மமாகவும் கருதலாம். அப்படியாஞல்

தர்ம அதர்மப் பகுத்தறிவு இல்லாத அவனைத் துவேஷிக்க மாட்டாய். 55

* * *

உன்னிடம் இருப்பவைகளைப்பற்றி நினைக்கும் அளவு உன்னிடம் இல்லாதவைகளைப்பற்றி நினையாதே. உன்னிடம் இருப்பவைகளிலும் சிறந்தவைகளைத் தேர்ந்து அவைகள் உன்னிடம் இல்லாவிட்டால் எவ்வளவு ஆவலுடன் அவைகளை நீ தேடுவாய் என்று சிந்தித்துப் பார். ஆயினும் அப்படிச் சந்தோஷப்படுத்திக்கொண்டு அவைகளை அளவுக்கு மிஞ்சி மதித்துவிடாதே; மதித்துவிட்டால் அவைகளை இழக்க நேரிடும்பொழுது மிகுந்த துயரம் அடைவாய். 56

* * *

உன்னுள்ளேயே தனித்திரு. நீதியானதைச் செய்வதில் திருப்தியடைவதும் அதனால் மனச்சாந்தி பெறுவதும் ஆன்மாவின் இயற்கையாகும். 57

* * *

உன் உள்ளே நோக்கி வருவாய். சகல நன்மைகளின் ஊற்றும் உன் உள்ளேயே இருக்கின்றது. அந்த ஊற்று தோண்டத் தோண்ட ஊறிப் பொங்கி வரும். 58

* * *

ஒருவன் பரமஹம்சஞ யிருப்பினும் அவனை மனிதர் அவ்வாறு மதியாதிருப்பது எப்பொழுதும் சாத்தியம் என்பதை உணர்வாய். 59

* * *

இன்ப வாழ்விற்கு அவசியமான பொருள்கள் மிக மிகச் சொற்பமே. 60

* * *

ஒவ்வொரு நாளும், "இது என் இறுதி நாளாகப் போய்விடலாம்" என நினைத்தே அதற்கேற்ப நடந்து கொண்டு, பரபரப்பும், சோம்பலும், வஞ்சகமும் இல்லாமல் ஒழுகுபவன்தான் ஒழுக்கம் பூரணமாய் நிறைந்தவஞவான். 61

* * *

இதைவிட ஹாஸ்யகரமான விஷயம் வேறென்ன? தன் தீக்குணத்தினின்று தப்பி ஓடுவது சாத்தியமாயிருக்க, ஒருவன் அதனின்று தப்பி ஓடப் பார்க்காமல், தப்பி ஓடுதல் அசாத்தியமாயிருக்கிற பிறனுடைய தீமையினின்றும் தப்பி ஓடப் பார்க்கிறுன். 62

* * *

நீ ஒருவனுக்கு ஒரு நன்மை செய்கிருய், அவன் அந்த நன்மையைப் பெறுகிருன். இவ்விரண்டு நன்மைகளும் போதாவோ? மூன்ருவது ஒன்றை என்

எதிர்பார்க்கிறாய்? மூடர்தான் புகழாவது கைம்மாறாவது எதிர்பார்ப்பர். 63

*　　　*　　　*

பயனுள்ளதைப் பெறுவதற்கு யாரும் சலிப்பதில்லை. இயற்கையின்படி நடப்பதுதான் பயன் தருவதாகும். ஆயின், பிறர்க்கு உபகாரம் செய்து அதனால் ஆன்ம லாபம் பெறுவதற்கு நீ சலியாதே. 64

*　　　*　　　*

பிறர் என்ன நினைப்பர் என்ற விசாரத்தை விட்டுவிடு. உன் மெய் இயல்பாகிய ஆன்மா கூறுவது போல் இனி வாழ்வதிலேயே திருப்தியுற்றிரு. ஆகையின் உன் ஆன்மா கூறுவதைக் கவனி; வேறொன்றிலும் உன் மனத்தைச் சிதற விடாதே.

இன்பத்தை எங்கு தேடி அலைந்தாலும் அதைத் தர்க்கத்திலும் காண முடியாது, புகழிலும் காண முடியாது, செல்வத்திலும் காணமுடியாது, உலகானுபவத்திலும் காண முடியாது. மனிதனுடைய மெய் இயல்பு கூறுவது போல் நடப்பதிலேயேதான் இன்பத்தைக் காண முடியும்.

அந்த மெய் இயல்பு கூறுவது என்ன? மனிதனை நீதிமானாகவும் ஆண்மையுடையவனாகவும் இச்சையடக்கமுள்ளவனாகவும் எது செய்கிறதோ அதுவே அவனுக்கு உறுதி பயப்பது என்பதாம். 65

*　　　*　　　*

படிக்க நேரமில்லை என்று கூறுகிறாய். இருக்கட்டும். ஆனால் அகந்தையை அடக்கவும், இன்ப துன்பங்களை அலட்சியம் செய்யவும், புகழை விரும்பாதிருக்கவும், மூடர்களையும் நன்றி கொல்பவர்களையும் வெறுக்காதிருக்கவும், அவர்களைக் காப்பாற்றவும் நேரமில்லை என்று நீ கூற முடியாது. 66

* * *

பச்சாத்தாபம் என்பது பயன் தருவதொன்றை அலட்சியம் செய்ததற்காகத் தன்னைத் தான் கடிந்து கொள்வதாகும். ஆனால் நல்ல காரியம்தான் பயன் தரும். முற்றிலும் நல்ல மனிதன் அதையே நாடுவான். அத்தகைய மனிதன் உடற் சுகத்தைத் தவிர்த்ததற்காக ஒருபொழுதும் பச்சாத்தாபப்படமாட்டான். ஆகையால் உடற் சுகம் நல்லதுமன்று, பயன் தருவதுமன்று. 67

* * *

குற்றத்தைக் குற்றமன்று என்று சாதிப்பதுதான் சுதந்திரம் என நினைக்கிறாய். ஆனால் உன் குற்றத்தை எடுத்துக்காட்டித் திருத்துபவன் சொல்வதை ஏற்றுக் கொண்டு உன் பழைய அபிப்பிராயத்தை விட்டு அவன் சொற்படி நடப்பதும் சுதந்திரத்திற்கு விரோதமன்று என்பதை மறவாதே. ஏனெனில் உன்னுடைய அறிவின்படி நிதானிக்கும் செயல் உன்னுடையதே யாகும். 68

* * *

மானிடச் செயல்களே மனிதனுக்குத் திருப்தி தரும். மனிதர்களுக்கு இதம் செய்வதும், புலன் நுகர்ச்சியை வெறுப்பதும், பொய்த் தோற்றத்தினுள்ளே புதைந்திருக்கும் உண்மையைக் காண்பதும், உலகத்தின் இயற்கையையும் அதனுள் நடக்கும் சம்பவங்களையும் ஆராய்ந்து அறிவதுமே மானிடச் செயல்களாகும். 69

*　　　*　　　*

துன்பமென்பது உடலுக்குக் கேடு தருவதாய் இருக்கலாம், அல்லது ஆன்மாவுக்குக் கேடு தருவதாய் இருக்கலாம். உடலுக்குக் கேடு தருவதை உடலே கவனித்துக்கொள்ளட்டும். ஆன்மாவுக்கோ துன்பத்தை ஒரு கேடென்று எண்ணுதிருக்கவும், எப்பொழுதும் சாந்தியோடிருக்கவும் சக்தியுண்டு. விருப்பும் வெறுப்பும் உடலையே சார்ந்தவை, அவை ஆன்மாவைத் தொடுவதில்லை. 70

*　　　*　　　*

உலகத்தில் சம்சார வாழ்க்கையில் திருப்தி பெறுமல் அதை விட்டு அகல்பவனும், அந்த வாழ்க்கைக்கு ஏலாதன செய்பவனும் உடலினின்றும் வெட்டி எறியப்பட்டதோர் உறுப்புப் போல்வான். ஜன சமூகத்தில் ஒரு பாகமான மனிதன் அதனை விட்டு விலகிவிட்டாலும் மறுபடியும் அதனுடன் சேர்ந்து ஒன்ருவதற்குரிய சக்தி அவனுக்கு உண்டு. இவ்விதம் பிரிந்து பின் சேர்ந்துகொள்வதற்கான சக்தியைக் கடவுள் மனித

னுக்குத் தவிர வேறெதற்கும் தரவில்லை. ஜன சமூக வாழ்விலிருந்து பிரியாமலே இருப்பதற்கும், பிரிந்தால் பின் சேர்ந்துகொள்வதற்கும் ஜீவ சிருஷ்டியில் வேறெதற்கும் தராத சக்தியை மனிதனுக்கு மட்டுமே தந்தருளும் கடவுளது கருணையின் திறம் என்னே! 71

* * *

மனிதனுடைய சுபாவத்தில் நியாயத்திற்கு விரோதமாக ஒரு நற்குணம் இருப்பதாக நான் மதிப்பதில்லை. ஆனால் போக விருப்பத்திற்கு விரோதமான குணமொன்று எனக்குத் தெரியும், அதுதான் இந்திரிய நிக்கிரகம் என்பது. 72

* * *

நீ என்னை எங்கேதான் கொண்டுபோய் விட்டாலும் சரி. என் அறிவு மட்டும் தன் இயற்கையின்படி உணரவும் நடக்கவும் கூடுமாயின், அங்கே நான் திருப்தியோடு, அதனால் ஏற்படும் மன அமைதியோடு வாழ்வேன், என் ஆன்மா சோர்ந்தும் பயந்தும் துயருழந்தும் இருப்பதற்கு இடமாற்றம் காரணமாகலாமோ? 73

* * *

மனித இயற்கைக்கு ஒத்ததே மனிதனுக்கு நிகழும், மாட்டின் இயற்கைக்கு ஒத்ததே மாட்டுக்கு நிகழும், திராட்சையின் இயற்கைக்கு ஒத்ததே திராட்சைக்கு நிகழும். அவ்விதமே ஒவ்வொன்றுக்கும் அதனதன் இயற்கைக்கு ஒத்ததே வழக்கமாக நிகழுமானால் நீ ஏன்

முறையிடுகின்றாய்? மனிதனாகிய உன்னால் பொறுக்க முடியாத தொன்றும் உலக இயற்கையில் நிகழாது. 74

*   *   *

உனக்கு வருத்தம் உண்டாக்கும் சம்பவங்கள் நிகழுங் காலத்தில் முதல் தோற்றம் உனக்கு என்ன அறிவிக்கிறதோ அதற்கு அதிகமாக ஒன்றும் நினைத்துக்கொள்ளாதே.

உதாரணமாக ஒருவன் உன்னை இழித்து உரைத்ததாக வேறொருவன் உன்னிடம் சொல்லுகிறான் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் அதிலிருந்து உனக்குத் தீங்கு விளைந்ததாக அவன் சொல்வதில்லை.

என் குழந்தை வியாதியா யிருக்கிறதைக் காண்கிறேன். ஆனால் அதற்கு அபாயமா யிருக்கிறது என்று என் பொறிகள் எங்கே எனக்கு அறிவிக்கின்றன?

ஆதலால் இத்தகைய சந்தர்ப்பங்களில் முதல் தோற்றத்தோடேயே எப்பொழுதும் நின்றுவிடு. உன் மனத்தில் எழுகிற எண்ணங்களில் எதையும் நீயாகக் கொண்டுபோய் அதனோடு சேர்க்காதே. அவ்விதம் சேர்க்காமல் இருந்தாயானால் உனக்கு ஒரு துன்பமும் ஏற்படாது. 75

*   *   *

பாகற்காய் கசக்கிறது; அதை எறிந்துவிடு. பாதையில் முட்செடிகள் உள; அவைகளை விட்டு விலகி நட. இது போதும். ஏன் இத்தகைய பொருள்கள்

உலகில் உண்டாக்கப்பட்டன என்று கேட்கப் புகாதே. 76

*　　*　　*

மனிதர் உன்னைக் கொல்லலாம், வெட்டலாம், சபிக்கலாம். ஆனால் உன் மனம் சுத்தமாகவும் அடக்கமாகவும், நீதியாகவும், அறிவுள்ளதாகவும் இருப்பதை அவர்கள் செய்கை எவ்வாறு தடுக்க முடியும்?

சுத்தமான தெளிந்த நீரையுடைய சுனையொன்றின் அருகே நின்று அதைச் சபித்தாலும் அது பருகத் தக்க நீரைத் தராது இருந்துவிடாது. அதனுள் அசுத்தங்களை எறிந்தாலுங்கூட அது அவற்றை வெளியே தள்ளி விட்டுத் தான் சுத்தமாகவே விளங்கி நிற்கும்.

நிரந்தரமாக ஆனந்தத்தைப் பெருக்கிக்கொண்டே வரக்கூடிய அருவி உன்னுள்ளே எவ்வாறு உண்டாகும்? அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, ஒவ்வொரு நிமிஷமும் உன்னிடத்தில் சுதந்திரமும், திருப்தியும், அடக்கமும் ஆடம்பரமின்மையும் உண்டாக்கிக் கொள்ளவேண்டும். 77

*　　*　　*

உலகம் இன்னது என்பதை அறியாதவனுக்கு உலகத்தில் அவனுடைய ஸ்தானம் இன்னது என்றும் தெரியாது. உலகம் எதற்காகத் தோன்றி இயங்குகிறது என்று அறியாதவனுக்குத் தான் யாவன் என்பதும்

உலகம் இத்தன்மையது என்பதும் தெரியாது. இவற்றில் ஒன்றேனும் அறியாதவனுக்குத் தான் எதற்காக வாழ்கிறான் என்பதைக்கூடச் சொல்லத் திறமிராது. அப்படியிருக்கத் தாங்கள் யாவர், உலகில் தங்கள் ஸ்தானம் என்ன என்று அறியாதவர்களுடைய புகழ்ச்சியை விரும்புபவனைப்பற்றி என்ன நினைப்பது? 78

*　　*　　*

பொதுவாக ஒரு மனிதனுடைய தீயொழுக்கத்தினால் உலகிற்கு யாதொரு கேடுமில்லை. முக்கியமாக ஒருவன் செய்யும் தீமை வேறொருவனைக் கெடுத்துவிடுவதில்லை. தான் செய்யாமல் நிறுத்திவிடக் கூடிய தீமையை எவன் நிறுத்தாமல் செய்கிறானோ அவனுக்குத் தான் அத்தீமை கேடு தருகின்றது. 79

*　　*　　*

மரணத்தை இகழாதே. இயற்கை அமைப்பில் நிகழும் காரியங்களில் அதுவும் ஒன்றென்று உணர்ந்துகொண்டு அதை ஏற்றுக்கொள். எப்படி இளமை, முதுமை, நரை, மக்கட்பேறு முதலியன இயற்கையின் நிகழ்ச்சிகளோ அப்படியே மரணமும் இயற்கையின் நிகழ்ச்சியேயாகும். ஆதலால், கருப் பையிலிருந்து குழந்தை வெளிவருவதற்கு எப்படிக் காத்திருக்கிறோமோ அப்படியே நம் உடம்பிலிருந்து உயிர் வெளியே போவதற்கும் காத்திருக்கவேண்டும். அப்படிக் காத்திருப்பது அறிவாளிக்கு அடுத்ததே. அறி

வாளிக்கு அடுக்காதது மரண சம்பந்தமாய் ஆத்திரப் படுதல், அல்லது அலட்சியமாயிருத்தல், அல்லது அதை இகழ்தல் இதுவேயாகும். 80

* * *

மனிதர் செயலைக் கண்டு கோபமடைதல் ஒழுங்கன்று. அவர்க்குத் தீங்கு வராமல் காத்து அவர் தீச்செயல் களைச் சாந்தமாய்ப் பொறுத்துக்கொள்ளுதலே கடன். 81

* * *

தீங்கிழைப்பவன் தனக்கே தீங்கிழைக்கிறான். அநீதி செய்பவன் அதனால் தன்னையே கெட்டவனாக்கிக் கொள்வதால் தனக்கே அநீதி செய்துகொள்கிறான். 82

* * *

ஒருவன் செய்யத் தக்கவைகளைச் செய்யாமையாலும் அநீதி செய்கிறான், செய்யத் தகாதவைகளைச் செய்வதாலும் அநீதி செய்கிறான். 83

* * *

உன்னுடைய தற்கால அபிப்பிராயம் அறிவை ஆதாரமாகக் கொண்டதாயும், உன்னுடைய நடத்தை சமூகத்தின் நன்மையை நாடியதாயும், உன்னுடைய மனப்பாங்கு எது நடந்தாலும் சமநிலைமையை விட்டு மாறாததாயும் இருப்பின் அதுவே போதும். 84

* * *

ஒரேவித குணமுடையவைகள் எல்லாம் தங்களைப் போலொத்த குணமுடையவைகளோடு சேர்வதே

இயற்கை. மண் மண்ணோடும், நீர் நீரோடும், காற்று காற்றோடும் சேர விரும்புகின்றன. அவைகளைப் பிரித்துவைக்க விரும்பினால் அதற்குப் பலாத்காரம் தேவை.

பதார்த்தங்களும் ஜந்துக்களும் எவ்வளவுக்கு உயர்ந்தவையா யிருக்கின்றனவோ அவ்வளவுக்குத் தங்களைப் போன்றவைகளோடு இயையும் தன்மையுள்ளனவா யிருக்கின்றன. கற்களைவிட மரங்களிலும், மரங்களைவிட மிருகங்களிலும், மிருகங்களைவிட மனிதர்களிலும் இத்தன்மை மிகுந்து விளங்குகின்றது. மிக உயர்ந்தவைகள் பிரிந்தே யிருந்தாலும் அவைகளிடத்தில் ஒற்றுமை இருக்கவே செய்கின்றது. ஆகையால் மனிதர்களிடம் இக்குணம் கட்புலனாகாவிடினும், அவர்கள் வேண்டுமென்று அக்குணத்தை ஒழிக்க முயன்றாலும், அக்குணம் அவர்களைப் பிணித்தே நிற்கின்றது. மக்கள் இயல்பு அவர்களிலும் வலிது. கவனித்துப் பார்த்தால் மண் மண்ணோடு சேராம லிருக்கலாம், ஆனால் மனிதன் மனிதனை விட்டு அறவே பிரிந்திருக்க முடியாது என்பது தெளிவாய் விளங்கும். 85

* * *

கூடுமானால், குற்றம் செய்பவரை உபதேச மூலமாக நன்னெறியில் உய்ப்பாய்.

உன்னால் கூடாதானால், பிறர் குற்றத்தைப் பொறுப்பதற்காகவே உனக்குத் தயை என்னும் குணம் கொடுக்கப்பெற்றிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்.

கடவுளரும் அத்தகையோர்க்குத் தயை காட்டுகின்றனர். சில காரணத்தையிட்டுத் தேகசுகம், செல்வம் முதலியன கிடைக்கும்படி உதவியும் செய்கின்றனர். அவர்கள் அவ்வளவு அன்புடன் இருக்கின்றனர். உனக்கும் அப்படியிருக்கச் சக்தியுண்டு, உன்னைத் தடுப்பவர் யார், சொல்வாய்? 86

*　　　*　　　*

இன்று துன்பத்தினின்று விலகிக் கொண்டேன் — அப்படியன்று — துன்பத்தை விலக்கிவிட்டேன். ஏனெனில் துன்பம் எனக்கு வெளியே இருக்கவில்லை. என் அபிப்பிராயங்களால் என்னகத்தேதான் உண்டாயிருந்தது. 87

*　　　*　　　*

நீ வேலை செய்யும்போது கதியற்றவன்போலச் செய்யாதே. பிறர் உன்மேல் இரங்கவேண்டுமென்றாவது, அல்லது உன்னைப் போற்றவேண்டுமென்றாவது செய்யாதே. பொது வாழ்விற்குத் தக்கதைச் செய்வதும் தகாததைச் செய்யாதிருப்பதுமே உன் மனத்தைச் செலுத்தவேண்டிய விஷயமாகும். 88

*　　　*　　　*

மனிதர்களுடைய மூலாதாரக் கொள்கைகளை ஆழ்ந்து நோக்கு. அப்பொழுது எத்தகைய நியாயாதிபதிகளுக்கு நீ பயப்படுகிறாய் என்பதையும், தங்களுக்கே அவர்கள் எத்தகைய நியாயாதிபதிகளாயிருக்கின்றனர் என்பதையும் எளிதில் அறிந்துகொள்வாய். 89

* * *

ஒருவன் குற்றம் செய்தால் அதனால் வரும் கேடு அவனுடையதே. ஒருவேளை அவன் குற்றமே செய்யாமலு மிருக்கலாம். 90

* * *

தேவர்களுக்குச் சக்தியுண்டா, இல்லையா? சக்தியில்லையானால் அவர்களை நோக்கி ஏன் பிரார்த்தனை செய்கிறாய்? சக்தி யிருக்குமானால் பயமும், ஆசையும், கிலேசமுமின்றி யிருக்கச் சக்தியளிக்கும்படி பிரார்த்தனை செய்வதை விட்டு, உனக்கு ஏதாவது வேண்டும் அல்லது வேண்டாம் என்று ஏன் பிரார்த்தனை செய்கிறாய்? 91

* * *

யாராவது ஒருவன் உனக்குக் கேடு செய்தால் அத்தகைய மனிதன் உலகில் இல்லாமலிருக்க முடியுமா என்று உடனே உன்னைக் கேட்டுக்கொள். முடியாது. ஆதலால் முடியாத காரியத்தை விரும்பாதே. அத்தகைய மனிதர் உலகில் இல்லாமலிருக்க முடியாது

என்று ஞாபகப்படுத்திக்கொண்ட அளவில், ஒவ்வொரு மனிதனிடமும் உனக்கு அன்பு உண்டாய்விடும்.

மேலும் பிறன் உனக்குச் செய்யக்கூடிய ஒவ்வொரு தீங்கையும் தாக்கி வெல்வதற்கு இயற்கை உனக்கு என்னென்ன நற்குணங்கள் அளித்திருக்கிறாள் என்பதையும் நினைத்துப் பார். அறியாதவனை வெல்வதற்குப் பொறுமை தந்திருக்கிறாள். இதே மாதிரி ஒவ்வொரு தீக்குணத்தையும் வெல்வதற்கு ஒவ்வோர் சக்தியைத் தந்து வைத்திருக்கிறாள்.

எந்தச் சந்தர்ப்பத்திலும், நெறிபிறழ்ந்து நடக்கும் மனிதனை உபதேசத்தால் திருத்த உன்னால் முடியும். ஏனெனில் குற்றம் செய்யும் ஒவ்வொரு மனிதனும் தன் லட்சியத்தை அடையாது நெறி தவறியவனே.

மேலும் உனக்கு என்னதான் தீங்கு விளைந்து விட்டது? குற்றம் செய்தவனுக்குக் கருதி நீ கோபப்படும் எவனும் உன் ஆன்மாவைக் கெடுக்கக்கூடிய தொன்றும் செய்துவிடவில்லை. தீங்கிற்கு ஆதாரம் உன் மனமே.

அறிவு இல்லாதவன் ஒருவன் அறிவு இல்லாதவன் செய்யக்கூடிய காரியத்தைச் செய்வதில் என்ன ஆச்சரியம்? அறிவு இல்லாதவன் அவ்விதந்தான் செய்வான் என்று முன்கூட்டித் தெரிந்துகொள்வதற்குரிய

அறிவு உனக்கு இருந்தும், அவன் அவ்விதம் செய்யாம லிருக்க எதிர்பார்த்தது உன் குற்றமன்ருே? 92

* * *

ஒருவனை நன்றி கெட்டவன் என்று சொல்வதற்கு முன், உன் இதயத்தையே சோதித்துப் பார். ஒரு வனுக்கு நன்மை செய்யும்பொழுது கைம்மாறு கருதா மல் செய்திருக்க வேண்டும். அல்லது நீ விரும்பும் சகல லாபமும் நீ செய்யும் காரியத்தாலேயே உனக்குக் கிடைக்கக்கூடிய முறையில் அதைச் செய்திருக்க வேண் டும். அவ்வாறில்லையாயின் குற்றம் உன்னுடையதே.

மேலும் ஒருவனுக்கு நீ ஒரு நன்மை செய்த பிறகு உனக்கு வேறென்ன வேண்டும்? மெய் இயல்புக்கு ஒத்த காரிய மொன்றைச் செய்துவிட்டோம் என்று உனக்குத் திருப்தி ஏற்படவில்லையா? கண் பார்ப்பதற் கும், கால் நடப்பதற்கும் கூலி விரும்பினுற் போல நீயும் அதற்குக் கூலியும் விரும்புகிருயோ? இந்த உறுப்புக் கள் எந்தக் காரியத்துக்காகச் சிருஷ்டிக்கப்பட் டனவோ அந்தக் காரியத்தைச் செய்வதிலேயே பல னடைகின்றன. அதுபோல் மனிதனும் பிறர்க்கென வாழவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிருன், பிறர்க்கென வாழ்வதிலேயே பலனடைகிருன். 93

* * *

ஒருவன் தவறு இழைத்தால் அவன் குற்றத்தை அவனுக்கு அன்புடன் உணர்த்து. உன்ஞல் முடியா

விட்டால் உன்னையே குறைகூறிக் கொள். அல்லது உன்னைக்கூடக் குறைகூறிக் கொள்ளாதே. 94

*   *   *

உலகில் சகல பொருள்களும் ஒன்று மற்றொன்றாய் மாறி வருகின்றது என்று இடைவிடாது சிந்தனை செய். அதனால் பெருந்தகைமை பிறக்கும். அவ்வாறு சிந்தித்து வரும் மனிதன் சரீர ஞாபகமே இல்லாமற் போய்விடுகிறான். தவிர, இவ்வுலகத்திலுள்ள மனிதரையும் பொருளையும் விட்டுவிட்டுத் தான் மரித்துப் போதல் திண்ணம் என்பதை உணர்ந்து அவன் பிரவர்த்தியில் நீதியை அனுசரித்தும், பிறவற்றில் இயற்கையைத் தழுவியும் நடப்பதிலேயே தன் வாழ்நாள் முழுவதையும் கழிப்பான். நீதியான நடையையும் நிகழ்வதில் திருப்தியையும் கைக்கொண்டதால், அவன், பிறர் என்ன நினைப்பர், என்ன சொல்வர், என்ன செய்வர் என்பதைக் கனவிலும் கருதான். கடவுள் நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவதைத் தவிர வேறொன்றும் விரும்பான். 95

*   *   *

ஆன்ம போதத்தை அனுசரித்து நடப்பவனுக்கு மன அமைதியுண்டு, சோம்பல் இல்லை; மகிழ்ச்சியுண்டு, மனக் கலக்கம் இல்லை. 96

*   *   *

நல்ல மனிதன் என்பவன் எப்படிப்பட்டவனுய் இருக்கவேண்டுமென்பதைப் பற்றி இனிப் பேசாதே. ஆனுல் நீ நல்ல மனிதனுய் இரு. 97

* * *

உண்மை நெறி அறிந்தவனுக்கு, துக்கத்தையும் அச்சத்தையும் ஒழித்து இருக்கவேண்டுமென்று ஞாபகமூட்ட வெகு சாதாரணமாயினும் ஒரு சிறு நீதிவாக்கியம் போதும். உதாரணமாக ஹோமர்* உரைத்த மொழியை உற்று நோக்குக:

" இலைகளைக் காற்று நிலத்திடை யுதிர்க்கும்;
அவ்விதமே மனிதரும்." 98

* * *

நோயற்ற கண் நோக்குவதற்கு உரிய அனைத்தையும் நோக்கவேண்டும். கேடற்ற காது கேட்பதற்கு உரிய அனைத்தையும் கேட்கவேண்டும். அதுபோல் செம்மையான அறிவு அறிதற்கு உரிய அனைத்தையும் அறியவேண்டும். அப்படிக்கன்றி, " என் அருமை மக்கள் நெடுங் காலம் வாழ்க, என்னை மனிதர் அனைவரும் புகழ்க " என்று வேண்டும் அறிவானது, " பசுமையான பொருள்களையே பார்ப்பேன் " என்னும் கண்ணையும்,

---

*ஹோமர் — கிரேக்கர்களின் ஆதிகவி. இலியாது என்றும் ஒதிஸ்ஸே என்றும் இரண்டு மகாகாவியங்கள் எழுதியிருக்கிறுர்.

" மிருதுவான பொருள்களை மட்டுமே மெல்லுவேன்" என்னும் பல்லையும் ஒக்கும். 99

*　　*　　*

ஒரு மரக்கொம்பு ஒரு கிளையினின்று வெட்டப்பட்டாலும், முழு மரத்தினின்றும் வெட்டப்பட்டதேயாகும். அதுபோல் ஒரு மனிதன் மற்றொரு மனிதனை விட்டுப் பிரிந்தாலும், ஜன சமூகத்தை விட்டுப் பிரிந்தவனே யாவான். ஆனால் மரக்கொம்பை மரக்கொம்பே வெட்டுவதில்லை; அதற்குப் புறம்பான மனிதன் ஒருவன் வெட்டுகிறான். மனிதனோ மற்றொருவனிடத்தினின்று தானாகவே அவனைப் பகைத்து வெறுப்பதன் மூலமாய்ப் பிரிந்துகொள்கிறான். எனினும் அவன் ஜன சமூகத்தையும் விட்டுத் தான் பிரிந்துவிட்டதாக உணர்வதில்லை. ஆயினும் எதனின்று பிரிகிறோமோ அதனோடு சேர்ந்து ஒன்றுவதற்குரிய சக்தியைக் கடவுள் நமக்கு அளித்திருக்கிறார். ஆனால், பிரிவதும் சேர்வதும் அடிக்கடி நிகழுமாயின் சேர்வது கஷ்டமான காரியமாய்விடும். மேலும், பிரியாதிருக்கும் கிளைக்கும் பிரிந்து சேர்ந்த கிளைக்கும் குணத்தில் வித்தியாசமுண்டு. மரத்தோடு ஒன்றுசேரினும் மன ஒற்றுமை இல்லை. 100

*　　*　　*

நீதி அல்லது நடுநிலைமையே சகல நற்குணங்களுக்கும் அஸ்திவாரம். நமக்குச் சஞ்சல புத்தியும், ஜாக்ரதைக் குறைவும், இதர விஷயங்களில் இச்சையும், எளிதில்

வமாறுந் தன்மையும் இருப்பின் நாம் எங்ஙனம் நீதியாய் நடக்க இயலும்? 101

*　　　*　　　*

ஒருவன் என்னை இகழ்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அதற்காக விசாரப்பட வேண்டியவன் அவனேயொழிய நானில்லை. என்னுடைய விசாரம் அனைத்தும் இகழத்தக்கது எதுவும் நான் சொல்லாமலும் செய்யாமலும் இருக்கவேண்டுமே என்று கண்ணுங் கருத்துமாய் இருக்கவேண்டுவ தொன்றுதான்.

ஒருவன் என்னைப் பகைக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அதற்காக விசாரப்பட வேண்டியவன் அவனேயன்றி நானில்லை. நான் மாத்திரம் ஒவ்வொரு மனிதனிடமும் அன்புடனும் அறத்துடனுமே நடந்து கொள்வேன். பகைத்தவனுக்குங்கூட அவன் தவறை எடுத்துக்காட்டத் தயாராயிருப்பேன். அப்படி எடுத்துக் காட்டுவதையும் பழிக்காமலும், நான் பொறுமையுடைய வன் என்று பெருமை காட்டாமலும், கண்ணியமாயும் பெருந்தன்மையாயுமே செய்வேன். 102

*　　　*　　　*

"நான் உனக்கு வஞ்சகம் செய்யேன்" என்று கூறு ப்வன் எவ்வளவு கபடஸ்தன்! சொல்வது உண்மை யானல் செயலில் விளங்கிவிடுமே. மொழிவது முகத் தில் விளங்கவேண்டும். காதலரின் மனத்தினில் தோன் றும் காதல் அவர்கள் கண்களில் தானாகவே தெரிந்து

விடுவது போல, ஒரு மனிதனுடைய தன்மையும் அவனுடைய கண்களில் உடனே தோன்றிவிடும். 103

*　　*　　*

ஒருவன் உனக்குத் தீங்கிழைத்தால் இவ்விதம் நினைத்துக் கொள்: நானும் எத்தனையோ தவறுகள் செய்கிறேன். மற்றவர்களைப் போல் நானும் ஒரு மனிதன். சில தவறுகளைச் செய்யாவிடினும் அவை களைச் செய்வதற்குரிய அவா இருக்கவே செய்கின்றது. அவைகளைச் செய்யாதிருப்பதற்கும் கோழைத்தனமோ, உலகத்தாரின் மதிப்பை இழக்கக் கூடாது என்ற எண்ணமோ அல்லது இவைபோன்ற இழிந்த நோக் கங்களோ — இவைதாம் காரணங்களாகும். 104

*　　*　　*

உண்மையாகவே உனக்கு நல்ல சிந்தை இருக்கு மாயின் உன்னை ஒருவரும் வெல்ல முடியாது. உனக்கு ஒருவன் தீமை செய்ய முயலும் சமயத்திலேயே நீ அவனிடம் அன்புகூர்ந்து, "குழந்தாய், அவ்விதம் செய் யாதே. நாம் வேறொன்றிற்காகச் சிருஷ்டிக்கப்பட் டிருக்கிறோம். உன்னால் எனக்குத் தீங்கு நிகழாது என்பது நிச்சயம். ஆனால் குழந்தாய், இச்செய்கையால் நீ உனக்கே தீங்கு விளைத்துக்கொள்கிறாயே!" என்று பட்சமாய்ப் புத்திகூறி அவன் தவறைத் திருத்துவா யானால் எவ்வளவு கெட்ட மனிதனும் உனக்குப் பணிந்துவிடுவான். ஆனால் இப்படிச் செய்வதை

வஞ்சகமாகவோ அல்லது நிந்தனையாகவோ அல்லது பிறர் மெச்சுவதற்காகவோ இல்லாமல், அன்புடனும் மனத்தில் துவேஷமில்லாமலும் செய்யவேண்டும். 105

* * *

கோபமுண்டாகும் பொழுது மனத்திற்கு இடங் கொடுத்துவிடுவது ஆண்மையன்று என்பதையும், அன்பும் சாந்தமுமே ஆண்மைக் குணங்கள் என்பதை யும் ஞாபகப்படுத்திக்கொள். இவ்விரண்டு குணங்களை யும் உடையவனே பலமும் மனோதைரியமும் உடைய வன். காமக் குரோதத்துக்கும் அதிருப்திக்கும் ஆளான வனிடம் பலமும் மனோதைரியமும் இரா. காமக் குரோதாதிகள் அற்ற தன்மையின் அளவேதான் மனித னுக்குப் பலமுண்டு. ஆற்றாமை மாத்திரமே பல வீனத்துக்கு லட்சணம் என்று சொல்லுவது தவறு. கோபமும் பலவீனத்துக்கு லட்சணமாகும். ஏனெனில் துன்பத்துக்கு இடங் கொடுப்பவன், கோபத்துக்கு இடங் கொடுப்பவன் இருவரும் நோவடைகின்றனர், இரு வரும் அடிமைப்பட்டுவிடுகின்றனர். 106

* * *

ஒருவன் தன்னிடத்தில் பயனில்லாத எண்ணங்கள், சமூக ஒற்றுமையை உடைக்கும் செயல்கள், மனம் வேறு சொல் வேறாயிருத்தல், எதற்காக வேனும் தன்னைக் கடிந்துகொள்ள வேண்டியிருத்தல் ஆகிய இந் நான்கும் நிகழாவண்ணம் ஜாக்கிரதையாய்ப் பார்த்

துக்கொள்ள வேண்டும். அவை நிகழுமாயின் அவைகளை உடனே அகற்றிவிட வேண்டும். மனத்தில் இல்லாததை மொழிவது நியாய விரோதமானது. எதற்கேனும் உன்னை நீயே கடிந்துகொள்ளவேண்டி வந்தால் உன் தெய்வாம்சமானது அழியுந் தன்மையுள்ள உன் ஆக்கைக்கும் அதன் சுகானுபவங்களுக்கும் அடிமைப்பட்டுப் போயிற்று என்று ஏற்படும். 107

* * *

முற்காலத்தில் அறநெறி வழுவாது நின்று வந்தவர்களில் யாரேனும் ஒருவரைப்பற்றி இடைவிடாது சிந்தித்துக்கொண்டிரு. 108

* * *

கழிந்த காலத்தைக் கருத்திற் கொள்ளாது, இனிமேல் நிகழப்போவதற்கு இறைவனை நம்பி, நிகழும் இந்நாளை நீதியிலும் பக்தியிலும் கழிப்பாயாக. 109

* * *

ஒவ்வொரு மனிதனும் பிறரைவிடத் தன்னையே அதிகமாக நேசித்தாலும், தன் அபிப்பிராயத்தை மாத்திரம் பிறர் அபிப்பிராயத்தைவிடக் குறைவாகவே ஏன் மதிக்கிறான் என்று எனக்கு விளங்கவில்லை. யாரேனும் ஒரு குரு வந்து ஒருவனை, "அப்பா, தோன்றிய மாத்திரத்திலேயே வெளியே சொல்ல விரும்பமுடியாத எண்ணம் எதையும் மனத்தினுள்ளே எண்ணாதே" என்று பணித்தால் அதை அவன்

ஒரு நாளைக்குக்கூடத் தாங்கான். தன்மதிப்பைவிட பிறருடைய மதிப்பை நாம் அம்மட்டுக்கு விரும்புகிறோம். 110

*　　*　　*

செய்வது எதையும் முன்யோசனை இன்றியும் குறி ஒன்று இன்றியும் செய்யாதே. மேலும் செய்வதையெல்லாம் பொதுநலம் ஒன்றையே கருதிச் செய். 111

*　　*　　*

நீ செய்யுங் காரியங்களில் யோசனையின்றியும் நீதி முறை பிறழ்ந்தும் நடவாதே. வெளியேயிருந்து உனக்கு ஏற்படும் துன்பங்களைப் பற்றியோ எனில், அவை தற்செயலாய் ஏற்படலாம், அல்லது தெய்வச் செயலாய் நிகழலாம். தற்செயலை நோதல் தவறாகும், தெய்வத்தைக் குறைகூறுதலும் பொருந்தாது. 112

*　　*　　*

ஏதேனும் ஒன்றைக் குறித்து நீ துக்கப்படும் பொழுது இவ் விஷயங்களை மறந்துவிடுகிறாய்: நிகழ்வன எல்லாம் இயற்கை முறைப்படியே நிகழ்கின்றன. பிறருடைய தீச்செயல் உன்னைப் பாதிக்காது. நிகழ்வன அனைத்தும் முன்னும் நிகழ்ந்துள, இனியும் நிகழும். மனித ஜாதி அனைத்தும் ஒரு சமஷ்டியானபடியால் ஒவ்வொரு மனிதனுக்கும் மனித ஜாதிக்கும் நெருங்கிய உறவுண்டு. அது இரத்தத்தாலாவது இந்திரியத்தினாலாவது ஏற்பட்ட உறவன்று, அறிவாலாகிற உறவேயாகும். ஒவ்வொரு ஆன்மாவும் கட

ளின் அம்சமாகும். பிரபஞ்சம் அனைத்துமோ கேவலம் சித்த விருத்தியே. எல்லாவற்றிற்கும் மேலே இதை மறந்துவிடுகிறாய்: மனிதனுக்கு நிகழ்காலந்தான் சொந்தம். அதைத்தான் அவன் இழந்துவிடுகிறான். 113

* * *

பெருமை நீத்ததாகப் பெருமை பேசிக்கொள்ளும் பெருமையே சகிக்கக் கூடாத பெருமையாகும். 114

* * *

"தேவர்களை வணங்குகிறாயே, தேவர்களை எங்கு கண்டாய்? தேவர்கள் உளர் என்பதை எங்ஙனம் அறிவாய்?" என்று கேட்பவர்க்கு நான் கூறும் மறுமொழி இது: தேவர்களைக் கண்ணாலுங்கூடக் காணலாம். என் ஆன்மாவைக் காணாதிருந்தும் அதை நான் மதிக்கவில்லையோ? அங்ஙனமே கடவுளரின் சக்தியை இடைவிடாது என் அநுபவத்தில் அறிவதால் அவர்கள் உளர் என்று உணர்ந்து அவர்களை வழிபடுகின்றேன். 115

* * *

ஒவ்வொன்றையும் நன்றாய் ஆராய்ந்து, அதன் உண்மை என்ன, சாரம் யாது, தோற்றம் யாது என்பதை அறிந்து, மன முழுவதையும் நீதி செய்வதிலும் உண்மை உரைப்பதிலும் செலுத்துவதே மனித வாழ்வின் க்ஷேமமாகும். ஒரு நற்செய்கைக்கும் இன்னொரு நற்செய்கைக்கும் இடையில் இறைகூட வீண் நேர

மின்றி இடைவிடாது நன்மை புரிந்து இன்புறுவதை விட வாழ்வுக்கு வேறென்ன வேண்டும்? 116

* * *

எப்படி அக்கினி தனக்குள் விழும் பொருள்களை உபயோகித்து அவற்றின் பலத்தைக்கொண்டு முன்னி லும் உயரமாகக் கிளம்புகிறதோ, அப்படியே ஆன்மாவும் தனக்குத் தடையாகவுள்ளவைகளையே தன் வளர்ச்சிக் குச் சாதனங்களாக்கிக் கொள்கிறது.

நடப்பதனைத்தும் அறிவின் வளர்ச்சிக்கன்றி வேறெதற்காகத்தான் நிகழ்கின்றன? ஆகையின் ஆரோக்கியமான வயிறு தனக்குள் பெய்யப்பட்ட வஸ்துக்களை உபயோகித்துப் பலமடைவது போலும், அக்கினி தனக்குள் விழுபவற்றை உபயோகித்து ஒளி வீசுவது போலும், நீயும் உனக்கு நேரும் அனைத்தை யும் உன்னுடையதாக்கிக்கொள்வதற்கு இடைவிடாது முயல்க. 117

* * *

சிற்றின்பம் வேண்டுவோர் சுகாநுபவங்களை நாடு வது போல், நீயும் செய்யும் காரியங்கள் அனைத்திலும் மனித இயல்பிற்கு ஒத்தவைகளையே நாடும்வரை உனக்குத் துன்பம் இருந்துகொண்டே யிருக்கும். ஏனெனில், மனிதன் தன் மெய் இயல்பிற்கு ஒத்தவை களை நாடுவதிலேயே இன்பம் விளையும் என்று கருத வேண்டும். அவ்விதம் நாடுவதும் அவனால் எங்கும் செய்யக் கூடியதே. 118

காலையில் எழுந்திருக்க மனமில்லாதிருந்தால் கீழ்க் கண்டவாறு நினைத்துக்கொள்: "நான் ஒரு மனிதன் செய்யவேண்டிய வேலையைச் செய்வதற்காக எழுகின்றேன். அப்படியிருக்க நான் எதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டேனோ அதையும், எதற்காக உயிர்வாழ்கின்றேனோ அதையும் செய்யத் தொடங்குவதில் எனக்கு ஏன் இந்த அதிருப்தி? அல்லது படுக்கையிலேயே படுத்துக்கொண்டு சுகமாய்த் தூங்குவதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டேனா?" சிலர் அவ்விதம் தூங்குவது சுகம் தரும் என்று சொல்லலாம். ஆனால் நீ வேலையொன்றும் செய்வதற்காகவன்றி சுகம் அநுபவிப்பதற்காகவா சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறாய்? செடிகளும், பறவைகளும், எறும்பும், ஈயும் அததற்கு ஏற்பட்ட வேலையைச் செய்யவில்லையா? நீ மட்டும் ஏன் உன் இயல்பிற்கொத்ததும் மனிதன் செய்யவேண்டியதுமான வேலையைச் செய்ய விரும்பாமல் பின்னடைகிறாய்? 119

*　　　*　　　*

என் தந்தையிடமிருந்து அடக்கமும் ஆண்மையும் அறிந்தேன்.

என் தாயிடமிருந்து பக்தி, பரோபகாரம், கெட்ட செயல்களும் கெட்ட எண்ணங்களும் நிகழாது காத்தல், செல்வருடைய வழக்கங்களை விட்டு ஆடம்பரமற்ற வாழ்வு வாழ்தல் முதலியன கற்றேன். 120

பாகம் - II

முன்னுரை

மனித வாழ்வு பெறுதல் அரியதோர் காரியம். ஆனால் பெறற்கரிய மக்கள் வாழ்வு பெற்று விட்டால் அவ்வாழ்வின் இலட்சியம் யாது? இன்பம் ஒன்றே என்று எல்லோரும் இயம்புவர். இதை யாரும் மறுக்க இயலாது. சகல மதங்களும் இதையே சாற்றும்.

இன்பம் இருவகைப்படும் — சிற்றின்பம் பேரின்பம் என. ஒன்று அழியுந்தன்மை உடையது, சீக்கிரம் தெவிட்டிப் போவது, இறுதியில் இன்னலில் கொண்டு சேர்ப்பது. பேரின்பமோ என்றும் நிலைபெற்றது, அந்தமில்லாதது, தெவிட்டாதது, ஒரு பொழுதும் துன்பமாய் மாறாதது. இவ்வாறு மாறுபட்டிருப்பினும் இரண்டையும் இன்பமென்றே உலகம் உரைக்கும். அதனால் எத்தகைய இன்பமானாலும் மனித வாழ்வின் லட்சியம் இன்பமே என்று கூறுவதில் இழுக்கில்லை.

இந்த லட்சியத்தை அடையும் வழி என்ன? மனிதன் உண்மையான இன்பத்தை விரும்பினால் ஒழுக்கத்தின் மூலமாகவே அதை உண்டாக்கிக்கொள்ள ஒண்ணும். இவ்வுண்மையை இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னதாகவே நமது தமிழ் மறை வகுத்த வள்ளுவர்,

'அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழு மில'

என்று வற்புறுத்தி அருளியிருக்கின்றார். அறநெறி நிற்பவரே ஆனந்தம் அடைவர்; அல்வழி சேர்ப்பது அல்லலிடமே.

சந்தோஷமாய் இருப்பதற்குரிய வழியை அறிந்துகொண்டோம்; அந்நிலை அடைய அவ்வழி செல்ல அவசியமான சாதனம் யாது? அறம் செய்யவேண்டுமானால் நமக்கு இருக்க வேண்டியது என்ன? எதைக் கொண்டு அறம் இயற்றலாம்? இக்கேள்விக்கும் வள்ளுவரே விடை பகர்வார்:

'ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.'

பொருள் ஒன்று தேடிவிட்டால் அதைக் கொண்டு அறம் இன்பம் இரண்டும் எளிதில் பெற்றுவிடலாம் என்பது அவருடைய கருத்து.

அறம் அடைவதற்குப் பொருள் தேவையாய் இருப்பது போலவே அறத்தின் சாரமாய் நிற்கும் அருளைப் பூண்டு ஆனந்தம் காண்பதற்கும் பொருள் தேவையாகும். அருள் மனத்திலேயே அரும்பவேண்டியதானலும் அதை வளர்த்துப் பயன் தரச் செய்வது பொருளாகும்.

'அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு.'

என்பது பொய்யா மொழி. ஆகவே இன்ப லட்சியம் அடையும் அற வழியில் நிற்க, அருள் சுரக்க, ஐஸ்வரியம் அத்யாவசியம் என்பது அறியலாகும்.

இனிப் பொருள் என்றல் என்ன? அதுவும் இருவகைப்படும். ஒன்று செல்வப் பொருள். மற்றொன்று கல்விப் பொருள். வாழ்விற்கு எப்

பொருள் தேவை? இரண்டுமே. ஒன்று மட்டும் இருந்தால் போதாது. செல்வம் உடலையும், கல்வி உயிரையும் ஒக்கும்.

உடல் இல்லையானால் உயிரால் ஒன்றும் உலகில் சாதித்துக்கொள்ள இயலாது. சுவரை வைத்தன்றோ சித்திரம் எழுதவேண்டும்? உயிர்க்குரிய சாதனம் உடல்; சாதனமின்றி ஒன்றைச் சாதிப்பார் தரணியில் கிடையார். உயிர் இல்லையானால் உடல் தரும் பயன் யாதுமுண்டோ? ஒன்றுமே கிடையாது. அம்மட்டோ? உயிரில்லா உடலால் உறுவது கேடேயாகும். அதனாலேயே அது பிணமென்று இகழ்ந்து உற்றார் உறவினராலும் உடனே அகற்றப்படுகின்றது. உயிரற்ற உடல் புதைக்கப்பட அல்லது எரிக்கப்படுதற்கே உரியது.

அவ்வாறே செல்வமில்லையானால் கல்வி எப்பயனும் காண இயலாது. செல்வம் போய்விடுமானால் அதனோடேயே சிறந்த கல்வியும் மாய்ந்துவிடும் என்று நாலடியார் நவில்கின்றது.

'எனைத்துணைய வேனும் இலம்பாட்டார் கல்வி
தினைத்துணையும் சீர்ப்பா டிலவாம்'

என்பது குமாரகுருபரர் கூற்று.

அதுபோல் கல்வி யில்லையானால் செல்வம் ஈட்டு தலும் இயலாது; உபயோகிக்கவும் ஒண்ணாது. அறிவில்லார் வசம் ஐஸ்வரியம் அடையுமானால் அது பேடி கையில் பிடித்த வாளை ஒக்கும். அது உடையவனுக்கும் பிறர்க்கும் தீமையே விளைவிக்கும். ஆகவே மனிதன் பொருளால் இன்பம் காணவேண்டுமானால் இருவகைப் பொருளேயும் தேடிக்கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

செல்வம் கல்வி இரண்டும் இன்றியமையாது வேண்டப்படுமாயினும் அவற்றுள் ஏற்றத் தாழ்வு இல்லாமல் இல்லை. செல்வத்தினும் கல்வியே சிறப்புடையது என்பதைச் சிறியாரும் அறிவர். செல்வம் அழிந்துபோகும், கல்வியோ அழியாதது. செல்வம் கொடுக்கக் குறைபடும்; அறிவோ அபரிமிதமாக அயலார்க்கு அளித்தாலும் அளவு குன்றாது அபிவிருத்தியே அடையும். தவிர ஐஸ்வரியம் தேடவும், உபயோகிக்கவும், காக்கவும் அத்யாவசியமாய் வேண்டிய சாதனம் அறிவேயாகும். அதனாலேயே அறிவே செல்வம் என்பர் அறிஞர்.

'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை'

என்பது குறள். ஒருவனுக்கு அழியாத உயர்ந்த பொருள் கல்வி; பிறவெல்லாம் பொருள் ஆகா. அதாவது அறிவு இருந்தால் போதும்; பிற பொருள் எல்லாம் தாமாகவே வந்து தங்கும் என்பதாம்.

இனி இப்பொருள் சம்பந்தமாய் இந்தியா வின் நிலைமை என்ன? ஒரே மொழியில் ஓவியம் தீட்டினது ஒப்ப உரைத்துவிடலாம். அவ் ஒரு மொழியே வறுமை என்பதாகும். இந்தியா வில் இருவகை ஏழைகளும் ஏராளம். நாளுக்கு நாள் தரித்திரம் அதிகம். கல்வியும் குறைந்து கொண்டே போகின்றது; எழுதப் படிக்கத் தெரிந்தவர் நூற்றுக்கு ஏழு பேரே. ஆகவே தாழ்ந்த சாதனப் பொருளாகிய செல்வமுமில்லை. உயர்ந்த செல்வமாகிய கல்வியுமில்லை.

ஆனால், மேனாட்டில் இவ்விரண்டும் அபரி மிதம். சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக ஸ்ரீ தேவியும், சரஸ்வதியும் மேனாட்டையே தங்கள்

வாசஸ்தலமாக்கிக்கொண்டுவிட்டனர். அங்கே தினசரி சராசரியாக இரண்டு ரூபாய்க்குக் குறைந்த வருமானம் பெறுபவர் கிடையாது; நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு அதிகமாகவே எழுத்து வாசனை உண்டு. அதனால் அங்குள்ள ஐரோப்பிய பாஷைகளில் காணப்படும் நூல்கள் அளவிறந்தன. அவை மிக உயர்ந்த தன்மை உடையனவும் ஆகும். உண்மையில் அவை தேடற்கரிய கேடறியா விழுச் செல்வமே என்பதில் சந்தேகமில்லை.

இத்தகைய கல்வி அறிவுப் பெருக்கம் அங்கே காணப்படுவதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய ஆள்வினையே காரணம். திரைகடலோடியும் திரவியம் தேடுவதில் சலிப்படைவதிலர். ஆங்கிலேயரைப் பற்றி பிளேக் என்னும் கவி கூறியது போல,

'ஆகாரம் தேடி ஆகாயம் முழுவதும் அலையும் கழுகு
போல் அவர்கள்
ஐஸ்வரியம் தேடி அவனி முழுவதும் திரிவர்.'

உலகிலுள்ள பொருள் எல்லாம் தங்களுடையதே என்பது அவர்கள் நம்பிக்கை.

'எங்கே கண்டாலும் சரி என்னுடையதை
எடுத்துக் கொள்வேன்'

என்று மார்மெண்டல் துரை கூறும் மொழிகள் ஐரோப்பியர் செல்வம் தேடும் முறையைத் தெள்ளிதில் விளக்கும்.

தரணியில் கண்டதெல்லாம் தங்களுடையது என்னும் கொள்கை செல்வ விஷயத்தில் தவறுனதே. ஆனால் அக்கொள்கை அறிவு விஷயத்தில் தவறுகாது. செல்வம் தனிப்பட்டவர்க்குச் சொந்தமா யிருக்கும்; ஆனல் கல்வி எல்லோர்க்கும் பொது உடைமையாகும். உலகில் ஒரு நூல் உண்டாக்கப்படுமானல் அது யாருக்குச் சொந்தம் என்று ஒரு எல்லைக் குட்படுத்திவிட இயலாது. அதை அறியக்கூடியவர் அனைவர்க்கும் அது சொந்தமேயாகும்.

அதனுல் அறிவு எங்கு இருப்பினும் அதை அடைய முயலுதல் கடன். அயலார் அறிவு என்று அலட்சியம் செய்தலாகாது. இதுவே மேனுட்டார் கொள்கையும் கையாளும் முறையும். ஆங்கில நாட்டுப் பேராசிரியர்களில் ஒருவராகிய பேக்கன் என்பவர்,

'அறிவு அனைத்தையும் என் தேசமாகக் கொள்வேன்'

என்று கூறியுள்ளதைக் கவனிக்க. அறிவு விஷயத்தில் உலக முழுவதும் ஒரே குலம்.

'உண்மை ஒருவருக்கு மட்டுமே சொந்தமான
பொருளன்று ;
மனிதர் அனைவருக்கும் சொந்தமான மாண்பெரும்
பொக்கிஷ மாகும்'

என்பது அமெரிக்க நாட்டு மகாத்மா எமர்ஸன் வாய்மொழி.

அதனாலேயே நாம் அவனியிலுள்ள சகல நாட்டு நூல்களையும் கையாளுதல் அவசியம்.

'நூல்களே எனக்கு நண்பர் ;
அவர்கள் எல்லா நாடுகளிலும் உண்டு'

என்று இத்தாலிய நாட்டுப் பெரிய கவிகளில் ஒருவராகிய பெட்ராார்க் என்பவர் கூறுகின்றார்.

இவ்வாறு மேனாட்டார் எங்கும் சென்று கல்விச் செல்வத்தைக் கை கொண்ட மட்டும் கொண்டுவந்து தமது நூல்களில் நிரப்பிவைத்து

வருவதாலேயே கேடில் விழுச் செல்வம் அங்கே அதிகமாகக் காணப்படுகின்றது. அவ்வாறு நாமும் செய்தால் என்ன? நம்மவர் தம்முடைய நூல்களே தரணியில் தலை சிறந்தவை என்று வீண் தர்க்கம் செய்வதிலேயே கருத்து வைத்து நிற்கின்றனர். அவர்கள்,

'எல்லாப் பொருளு மிதன்பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையால்'

என்று தங்கள் நூல்களைப் பற்றிக் கூறித் தமக்குத் தாமே மகிழ்ந்து கொள்வர். அவ்வளவே. ஆனால் உண்மையான புகழ் எனில் அது பிற நாட்டாரிட மிருந்தன்றோ வர வேண்டும்?

நாம் செய்யவேண்டியது என்ன? சலிப்பின்றித் தேனீ சகல இடங்களுக்கும் சென்று மலர்களில் மதுவெடுத்துத் தேன் திரட்டுவது போல் நாம் இடைவிடாது சகல மொழிகளிலும் காணப்படும் நூல்களை யெல்லாம் ஆராய்ந்து அவற்றின்கண் மிளிரும் அரும் பெறல் மணிகளை எல்லாம் அடைந்துகொள்ளல் வேண்டும்.

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்,
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்,
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை'

என்று பாரதியார் விரும்புவதே நாமும் விரும்பத் தக்கதாகும்.

ஆகையால் நான் மேனாட்டுச் சோலைகளில் புகுந்து சில மலர்களும் கனிகளும், மலைகளில் ஏறி மருந்து வகைகளும் வாசனைத் திரவியங் களும், கழனிகளில் சென்று தானியமும் தவச மும் சேர்த்துத் தமிழ் மக்களுக்குத் தர விரும்பு கிறேன்.

ஆனால் நான் ஏதேனும் சில மேனாட்டு அறி ஞரின் நூல்களை மொழிபெயர்க்கப் புறப்பட வில்லை. நான் மொழிபெயர்த்து இங்கே தர விரும்புவதெல்லாம் மேனாட்டு விழுச் செல்வப் பொக்கிஷத்தில் பொலிந்து விளங்கும் சில கண் கவர் பொறுக்கு மணிகளையே. மேனாட்டுப் பெரியோர்களுடைய விழுமிய உபதேசங்களை

மட்டுமே தமிழில் தருவேன். அவ் அற வுரைகள், ஆங்கில ராஜதந்திரிகளில் சிறந்த வரும் அரும் புலவருமான மார்லி துரை கூறியவாறு,

'ஆதவன் கதிர்கள் ஒருமுகப்படுத்தப்பட்டால் அதிக ஒளி தருவது போல் அறிவு ஒருமுகப்படுத்தப்பட்டு அதிக அழகும் ஆற்றலும் உடையனவாகும்.'

அவைகள்,

அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டிய தொப்பச் சில மொழிகளால் ஆக்கப்பட்டுப் பொருளாழம் உடையனவாயிருக்கும். அதனால் ஐரோப்பியப் பேராசிரியர்களில் ஒருவராகிய கதே என்பவர் கூறியபடி,

'அவை தம் கூரிய கொடுக்கினால் நம் இதயத்தில் ஒட்டிக்கொள்ளும்.'

ஒரு முறை படித்து அறிந்து உணர்ந்துவிட் டால் ஒரு நாளும் அவை நம்மை விட்டு அகலா. அத்தகைய ஆற்றல் உடையன அவை.

ஆயினும் அவற்றைப் படிக்கும் பொழுது எச்சரிக்கையாக இருத்தல் அவசியம். நான்

மொழிபெயர்த்துத் தருபவைகளில் சில நமக்குச் சர்வ சாதாரணமாய்த் தெரிந்த உண்மைகளாகவே தோன்றும். ஆனாலும் அவற்றின் உரு புதியதாகையால் அவை புதியவை என்றே கொள்ளத்தகும். தவிர நமக்குத் தெரிந்தவையே யானாலும் அவ்வுண்மைகள் பிறர் வாயினின்று எழும் பொழுது, எமர்ஸன் கூறுவது போல், புதியதோர் ஆற்றல் பெற்றே நம்மிடம் வந்து சேரும்.

சில உண்மைகள் மிக்க அழகுடையனவாயிருக்கும். எளிதில் அறிந்துகொள்ள இயலாது போகும். அவைகளை அறியவேண்டுமானால் நாமே அவற்றை மறுபடியும் கண்டுபிடிக்க முயலல் வேண்டும். இன்றேல் அறிவதற்குப் போதிய அநுபவமாவது நம்மிடம் இருத்தல் வேண்டும் என்று ஸாண்டர்ஸ் கூறுவதைக் கவனிக்க.

சில உரைகளில் காணப்படும் உண்மை முழுவதும் உண்மையே என்று கொள்ளற்க. அதற்குப் பல நிபந்தனைகளும் வரம்புகளும் இருக்கும்.

'நோய் வந்தபின் தீர்ப்பதிலும் நோய் வாராமல்
தடுப்பதே சிறந்தது'

என்பது ஒரு பழமொழி. அது கூறுவதில் உண்மை உண்டு. ஆனால் சில சமயங்களில் நோய் வராமல் தடுக்க முயல்வதிலும் நோய் வரக் காத்திருந்து தீர்ப்பதே சுலபமாக இருக்கு மல்லவா? ஆகையால் எதையும் உண்மை என்று ஏற்றுக்கொள்ளாமல் எச்சரிக்கையாயிருந்து ஆராய்ந்து அறிவதே கடன்.


மொழிபெயர்ப்பைப் பற்றி ஒரு வார்த்தை. இரு பாஷைகளிலும் எனக்குப் பாண்டித்யம் உண்டு என்று உரைக்க முடியாது. ஆனாலும் தவறின் றிக் கருத்து முழுதும் தமிழில் வரும்படி முயன்றிருக்கின்றேன். தவிர இரு மொழிகளும் தம் அமைப்பில் மிக்க வேறுபாடு உடையன. ஆதலால் மேனாட்டுப் பெரியார் கருத்தை மட்டுமே கவனித்தேன்; அவர்கள் மொழி யழகையும் வன்மையையும் அப்படியே தமிழில் அமைக்க இயலவில்லை. என்னால் இயன்ற மட்டும் முயன்றுளேன் என்று மட்டுமே உறுதி கூற முடியும்.

ஆகையால் படித்தவுடன் ஏதேனும் பொருள் விளங்காவிடில் என் மொழிபெயர்ப்பு தவறு என்று எண்ணிவிட வேண்டாம். வாசக நண்

பர் படிக்கும் உரை புதிய உண்மையைப் புகலக் கூடும், அல்லது அவர் கருத்துக்கு மாறுபட்ட உண்மையை உரைக்கலாம், அல்லது மிக ஆழ மான கருத்தை உடையதாக இருக்கலாம். இக் காரணங்களால் எளிதில் பொருள் விளங்கா திருக்கக்கூடும். அதனால் நண்பர்கள் திரும்பத் திரும்ப வாசித்துப் பொருளை மனத்தில் பதித்துக் கொள்ள முயலுதல் கடன். அங்ஙனம் பன் முறை பயில்வார்க்கே நூல் நயம் அறியக் கிடைக்கும் என்று வள்ளுவர் கூறியுள்ளதை மறவற்க.

'மனிதன் எதை அறிகின்றானோ
அதுவே அவனுக்குச் சொந்தம்.'

—கதே



1. அன்பு

1. உலகத்தில் மக்களிடம் அன்பு கொள்பவனே உண்மையில் வாழ்பவன் ஆவான்.

அந்தோனி

2. துன்புறுவோர்க்கு இரங்குக. துன்புறுவோர்க்கு இன்புறுவோர் செலுத்தவேண்டிய கடன் அதுவே.

போப்

3. அன்பு மூலமே எதையும் அறிய இயலும். அன்பின்றிப் பார்ப்பவன் இருளில் கண்களை இடுக்கிக் கஷ்டப்பட்டுப் பார்க்க முயலுகிறவன்.

மேட்டர்லிங்க்

4. வியப்பு புகழும், அன்பு ஊமையா யிருக்கும்.

போர்ன்

5. உண்மையான மனிதன் யாரையும் துவேஷிப்பதில்லை.

நெப்போலியன்

6. அன்பு செய்பவர், பேருண்மைகளை உணர்ந்து உரைப்பவர் இவர்கள் அனைவரும் கவிஞர்களாவர். உண்மைகளில் எல்லாம் தலைசிறந்த உண்மை அன்பேயாகும்.

பெய்லி

7. இதயமே - அன்பே - பெரிய எண்ணங்களின் பிறப்பிடம்.

வாவனார்கூஸ்

8. அறிவை விலைக்கு வாங்க முடியும்: ஆனால், உணர்ச்சி - அன்பு - ஒரு நாளும் சந்தைக்கு வருவதில்லை.

ஜே. ஆர். லவல்

9. மாறுதல் கண்டவுடன் மாறும் அன்பு அன்பாகாது.

ஷேக்ஸ்பியர்

10. அன்பும் நம்பிக்கையுமே ஆன்மாவின் தாய்ப் பால். அன்பும் நம்பிக்கையும் பெறாவிடில் ஆற்றல் முழுவதும் அழிந்துபோகும்.

ரஸ்கின்

11. பெருந்தகைமையைக் காண்பதிலோ, பிறர்க்கு அன்பு செய்வதிலோ ஆனந்தம் காண்பதே கருணையின் பூரண லட்சணம்.

ரஸ்கின்

12. ஆன்மாவின் பெருந்தன்மை என்பது எத்தனை சந்தர்ப்பங்களில் நாம் இரக்கம் காட்டுகிறோம் என்ற அளவைப் பொறுத்ததே.

பேக்கன்

13. அன்பு முக்கியமாக வளர்வது ஈகையிலேயே. நன்மை செய்யவோ, இன்பம் அளிக்கவோ உள்ள

ஆசையே அதன் சாரம் என்பது மட்டும் நிச்சயம்.

ரஸ்கின்

14. அன்புண்டு இரக்கமில்லை என்று பாசாங்கு செய்ய முடியுமா? அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்.

ட்ரைடன்

15. மனித வாழ்வின் புனித பாகம் மறந்துபோன அருள் நிறைந்த சிறு செயல்களாகும்.

வோர்ட்ஸ்வொர்த்

16. ஜனங்களிடை இரக்கமும் சகோதர அனுதாபமுமே மனித வாழ்வில் பெறுவதற்காக முயலவேண்டிய பேருணர்ச்சிகளாம்.

மார்லி

17. அடக்கமும் அன்பும் துன்பத்தால் கற்றுக் கொள்ளப்படும்.

ஜார்ஜ் எலியட்

18. நாம் அறியாதவரிடம் காட்டும் அன்பு, அறிந்தவரிடம் காட்டும் அன்பைப் போலவே, ஓர் அழியாத உணர்ச்சியாகும்.

செஸ்டர்டன்

19. பட்சமாயிருத்தல் என்பது எந்தக் காலத்தும் பழிவாங்குதலினும் பெருந்தகைமை உடையதே.

ஷேக்ஸ்பியர்

20. தெரிந்தே தவறு செய்தாலும் உன் சகோதர மனுஷனின் தவறுகளை அன்போடு ஆராய்வாய்.

அதனிலும் அதிக அன்போடு உன் சகோதரி மனுஷி யின் தவறுகளை ஆராய்வாய். நெறி பிறழ்வது மனித இயல்பே.

பர்ன்ஸ்

21. அன்பு செய்தும் அன்பு பெறுதிருப்பது துக்க கரமானதே. ஆனால், அன்பு செய்ய இயலாதிருப்பது அதனிலும் அதிகத் துக்ககரமானது.

மேட்டர்லிங்க்

22. கண்டிக்க அறியாதவன் கருணை காட்டவும் முடியாது.

கார்லைல்

23. யாருக்கு நன்மை செய்கிறோமோ அவரை நேசிக்கிறோம். யாருக்குத் தீமை செய்கிறோமோ அவரை வெறுக்கிறோம்.

டால்ஸ்டாய்

24. கும்பல் சங்கமன்று. அன்பில்லாத இடத்தில் முகங்கள் வெறும் படங்கள்தான்; பேச்சு வெறும் கிண்கிணி ஓசைதான்.

பேக்கன்

25. 'அன்பு' என்பதைப் போல் பொய்யும் புலையும் நிறைந்த மொழி வேறெதுவும் கிடையாது.

இப்ஸன்

26. பிறர் நலம் கண்டு மகிழார், பிறர் துயர் கண்டு இளகார்! — இவர் எல்லோரும் இறந்து படுக.

போப்

2. அறம்

27. அறத்தின் வழி நில்! அஞ்சவேண்டாம்! உன் லட்சியமெல்லாம் உன் தேசத்தை - உன் கடவுளை - உண்மையைப் பற்றியதாகவே இருக்கட்டும். அங்ஙனமாயின் நீ வீழ்ந்துவிட்டாலும் பாக்கியம் பெற்றுத் தியாகியாகவே வீழ்வாய்.

ஷேக்ஸ்பியர்

28. அறத்தின் இலட்சணம் அறியாதவரே, 'அறம் செய்தோம், கூலி எங்கே?' என்று இரைந்துகொண்டிருப்பர்.

மேட்டர்லிங்க்

29. அதர்மம் அணியும் ஆடை ஐஸ்வரியம்; தர்மம் தரிப்பது தரித்திரம்.

டியோக்னீஸ்

30. பிறர்க்கு நன்மை செய்பவன் தனக்கும் நன்மை தேடிக்கொள்கிறான்.

ஸெனீக்கா

31. குளிர் மிகுதிதான், கந்தை உடைதான்! ஆனால், என் ஒழுக்கம் எனக்கு உஷ்ணம் தரும்.

ட்ரைடன்

32. அறமே ஆற்றல் என்பதை நம்புவோமாக. அந்த நம்பிக்கையில் நாம் அறிந்த கடமையைச் செய்யத் துணிவோமாக.

ஆப்ரஹாம் லிங்கன்

33. அறிவு மட்டும் கூறும் வழியில் செல்லற்க. ஆன்மா முழுவதும் ஆணையிடும் வழியில் செல்க.

டால்ஸ்டாய்

34. அறத்திற்குத் தலைசிறந்த வெகுமதி அதனிடத்திலேயே கிடைக்கும்; மறத்திற்குத் தலைசிறந்த தண்டனையும் அதனிடத்திலேயே கிடைக்கும்.

பழமொழி

35. அறம் தன்னில் தானே அடையும் வெகுமதியை விட அதிகமான வெகுமதியை வெளியில் பெற முடியாது. அது போல் மறமும் தன்னில் தானே அடையும் தண்டனையைவிட அதிகமான தண்டனையை வெளியில் பெற முடியாது.

பேகன்

36. பேரின்ப வீட்டை அடையும் நெறி துறவறம் அன்று; அனவாதமும் அறச் செயல் ஆற்றுவதே யாகும்.

ஸ்வீடன்பர்க்

37. நன்மை செய்ய முயலுதல் — நன்மை இது வென்று காண முயலுதல் — இரண்டில் கடினமானது எது?

மார்லி

38. மனிதர் கவனமாய் வடித்து எடுப்பின், தீமையிலும் நன்மை தெளியலாம்.

ஷேக்ஸ்பியர்

39 ஒருபொழுதும் துன்பமாக மாறாத பொருள் ஒன்று உண்டு — நாம் செய்யும் நற்செயலே அது.

மேட்டர்லிங்க்.

40. நல்ல விஷயங்கள் தீய விஷயங்கள் என்று பிரிக்க முடியாது. நாம் அவற்றின் வசப்படாமல், அவை நம் வசம் வந்துவிட்டால் எல்லாம் நல்ல விஷயங்களே.

எட்வர்டு கார்ப்பென்டர்

41. அற வாழ்வில் ஆசையுள்ளவன் சத்தியத்தைச் சார்ந்து நிற்கும் பொழுதுதான் அவன் துக்கம் தொலைகிறது; அதற்கு முன்னால் அன்று.

ப்ளேட்டோ

42. என்ன செய்யலாம் என்று வக்கீல் கூறுவது விஷயம் அன்று; என்ன செய்யவேண்டும் என்று அறிவும், அறமும், அன்பும் கூறுவதே விஷயம்.

பர்க்

43. அற வாழ்வின் அளவுகோல் விசேஷ முயற்சிகள் அல்ல, தினசரி வாழ்க்கையே யாகும்.

பாஸ்கல்

44. மனத்தைத் தவிர குறையுள்ளது இயற்கையில் வேறு கிடையாது. அன்பில்லாதவரே அங்கவீனர். அறமே அழகு. அழகான மறம் மூலாம் பூசிய சூனியப் பேழையாகும்.

ஷேக்ஸ்பியர்

45. விரும்ப வேண்டியவற்றை விரும்பவும், வெறுக்கத் தகுந்தவற்றை வெறுக்கவும் செய்யுமாறு நன்னெறியில் செலுத்தப்படும் அன்பே அறமாகும்.

ஸெயிஸ்ட் அகஸ்டைன்

46. நாம் அறநெறியில் நிற்கும் ஒவ்வொரு சமயத்திலும் ஏதேனும் இன்பம் அதிகரியாவிட்டால், ஏதேனும் துன்பம் குறைந்திருக்கும் என்பது உறுதி.

பென்தம்

47. நம்மை நாம் வெல்லாதவரை அறம் எதுவும் இல்லை. உழைப்பு வேண்டாத செயல் எதுவும் மதித்தற்கு உரியதன்று.

டி' மெஸ்டர்

48. கடவுள் ஆன்மாவைப் புழுதியில் புதைத்திருப்பதெல்லாம் அது தன் மூலம் தவறாடு உண்மைக்கும், குற்றத்தூடு அறத்திற்கும், துன்பத்தூடு இன்பத்திற்கும் வழி திறந்து செல்வதற்காகவே யாகும்.

எங்கல்

49. தீய நெறியில் செல்லாதிருக்க எப்பொழுதும் எச்சரிக்கையா யிருப்பதை விட, நல்ல விஷயங்களில் மனத்தை ஈடுபடுத்தி அதன் மூலம் தீய நெறியின் நினைவே எழாதிருக்கச் செய்வதே நலம்.

பித்தாகோரஸ்

50. அறம் இதுவென்று அறியாமலும், விரும்பியதைச் செய்ய முடியாமலும் இருந்தாலும், அறத்தில்

ஆசை கொள்ளுவதால் தீமையை எதிர்க்கும் தெய்வீக சக்தியில் நாமும் ஓர் அம்ச மாவோம்.

ஜார்ஜ் எலியட்

51. நமது உணர்ச்சியின் தன்மை விசாலம் ஆகிய இரண்டின் அளவே நமது ஒழுக்கமாகும்.

ஜார்ஜ் எலியட்

52. ஹிருதயத்தைப் பெருக்கி அலங்கரித்துக் காலியாக வைத்திருப்பது என்பது நாம் விரும்பினாலும் கூட முடியாத காரியம். நாம் தயாராக்குவது நன்மை குடிபுகவா, தீமை குடிபுகவா என்பதே கேள்வி.

கிப்பன்

53. நம்மில் உயர்ந்தோரிடமும் எவ்வளவோ தீமை இருக்கின்றது ; நம்மில் தாழ்ந்தோரிடமும் எவ்வளவோ நன்மை இருக்கின்றது. ஆகையால் பிறரைப் பற்றிப் பேச நம்மில் எவர்க்கும் தகுதி இருப்பது அரிது.

ராக்பெல்லர்க்கு உகந்த கவி

54. நன்மை ஒரு நல்ல வைத்தியன் : ஆனால் தீமை சில சமயங்களில் அதைவிட மிக நல்ல வைத்தியன்.

எமர்ஸன்

55. எல்லா நல்ல காரியமும் பேச்சும் பணம் பெறாமல் செய்யப்படவேண்டும் என்பதே இறைவன் திருவுளம் என்பது தெளிவு.

ரஸ்கின்

56. நமது நன்மையை அடையத் தவறிவிட்டாலும் பிறர் நன்மை இருக்கவே செய்கின்றது. அதற்காக முயலுதல் தக்கதே.

ஜார்ஜ் எலியட்

57. மனிதனால் இயல்வதெல்லாம் இயற்றத் துணிவேன்; அதற்கு அதிகம் செய்யத் துணிபவன் மனிதன் அல்லன்.

ஷேக்ஸ்பியர்

58. ஒருவனுக்கு ஆகாரம் அளிப்பதை விட அதை அவனே தேடிக்கொள்ள வழி காட்டுவதே முக்கியம். ஒருவனுக்கு உதவி செய்வதை விட அவன் பிறர்க்கு உதவி செய்யக் கற்றுக்கொடுப்பதே நலம்.

ஆவ்பரி

59. பல துன்பங்களுக்குப் பிறப்பிட மென்று நான் நகரத்தின் களியாட்டிடங்களை விட்டுவிட்டாலும், இன்னும் என்னை விட்டுவிட மட்டும் கற்றுக்கொள்ளவில்லை.

செயின்ட் பேஸில்

60. ஒரு புல் முளைத்த இடத்தில் இரண்டு புல் முளைக்கவும், ஒரு கதிர் விளைந்த இடத்தில் இரண்டு கதிர் விளையவும் செய்பவனே இராஜீயவாதிகள் அனைவரிலும் தேசத்திற்கு அதிக உபயோகமான

ஊழியம் செய்தவ னுவான். அவனே மனித வர்க்கத்தால் அதிகமாகப் போற்றப்படத் தகுந்தவனு மாவான்.

ஸ்விட்

61. தான் அறத்தில் நிற்பதால் பிறர் அடையும் சாந்தியும் சந்தோஷமும் இவ்வளவென்று கணித்தல் அநேகமாக இயலாத காரியமாகும்.

அக்கம்பிஸ்

62. நன்னெறி அதிகக் காடு முரடென்ருவது, அதிகக் கஷ்டமென்ருவது கூறப்படக் காணேம். கூறப்பட்டிருப்பதெல்லாம் அது குறுகியது என்றும், கண்டு பிடிக்கக் கடினமானது என்றுமே.

ஆவ்பரீ

63. நமது செயலின் விளைவுகளை நாம் ஏற்றுக் கொள்ளும் முறையே நமது ஆன்மாவின் உயர்வை அளக்குங் கோலாகும்.

மார்லி

64. குற்றமான காரியம் செய்யக் கூசவேண்டியது அவசியமே; ஆனல், பிறர் குறை கூறுவரோ என்று அளவு கடந்த ஜாக்கிரதை அமைத்துக்கொள்பவன் அன்புடையவனுக இருக்கலாம்; உயர்ந்தோனுக மட்டும் இருக்க முடியாது.

ப்ளூடார்க்

65. நன்றாய் எழுதப்பட்ட ஜீவிய சரிதம் நன்றாய் வாழப்பட்ட ஜீவியத்தைப் போலவே அரியதாகும்.

கார்லைல்

66. மனிதனைப் பூரணமாக்க வேண்டிய குணங்கள் எவை? கலங்காத அறிவு, அன்பு நிறைந்த நெஞ்சு, நீதியான தீர்மானம், ஆரோக்கிய உடல். கலங்காத அறிவு இல்லாவிடில் அவசரமாய் முடிவு செய்துவிடுவோம். அன்பு நிறைந்த நெஞ்சு இல்லாவிடில் சுயநலமுள்ளவரா யிருப்போம். நல்ல எண்ணம் இருப்பினும் நீதியான தீர்மானம் இல்லாவிடில் நன்மை உண்டாவதினும் தீமையே உண்டாகும். உடற் சுகம் இல்லாவிடில் ஒன்றும் செய்ய முடியாது.

ஆவ்பரி

67. நான் எனக்காக மட்டுமே உள்ள ஆசைகளை வைத்துக்கொள்ளாதிருக்க முயலுகின்றேன். ஏனெனில், அவை பிறருக்கு நன்மை பயவா திருக்கலாம். தவிர இப்பொழுதே அவை என்னிடம் அதிகமாக இருக்கின்றன.

ஜார்ஜ் எலியட்

3. மறம்

68. வாழ்வாகிய வஸ்திரத்தில் எப்பொழுதும் இரு வகை நூல் இருக்கும். நன்மை தீமையே அவை.

ஷேக்ஸ்பியர்

69. மருந்து பல சமயங்களில் பலிக்காமல் இருக்கக் கூடும். ஆனால், விஷமோ ஒருபோதும் பலிக்காமல் போகாது.

ரஸ்கின்

70. பாவம் செய்பவன் மனிதன்; பாவத்துக்காக வருந்துபவன் ஞானி; பாவத்துக்காகப் பெருமை கொள்பவன் சாத்தான்.

புல்லர்

71. சாத்தானுடைய பந்துக்களில் ஒருவரை வீட்டுக்குக் கூட்டிச் சென்றால் போதும்: அவன் குடும்பம் முழுவதுமே குடிபுகுந்துவிடும்.

ஆவ்பரி

72. ஒருவன் தன் ஒளியில் தான் நிற்கும் பொழுது உண்டாக்கும் நிழலே அவன் வாழ்வில் அதிக இருள் உடையதாகும்.

ஆவ்பரி

73. மனிதன் பிறர்க்குக் கேடு சூழ்வதில் தனக்கே கேடு சூழ்ந்துகொள்கிறான்.

ஹேஸியாட்

74. அறத்திற்குப் போலவே மறத்திற்கும் பிராணத் தியாகிகள் உண்டு.

கோல்டன்

75. தீய செயல் குறித்துத் தெய்வத்தின் முன் நாணுமல், மனிதன் முன் நாணக் கற்றுக்கொள், அப்பொழுதே விமோசனம் ஆரம்பமாகும்.

ரஸ்கின்

76. ஓடைகள் சேர்ந்து நதிகள், நதிகள் சேர்ந்து கடல். அது போலவே தீய வழக்கங்கள் அறியா அளவாகக் கூடி வளர்ந்துவிடும்.

ட்ரைடன்

77. நல்ல சேவை செய்வதற்கு உரிய ஆற்றலைக் கெட்ட மனிதனிடம் ஒருநாளும் காண முடியாது.

பர்க்

78. உடல் துன்பம், மனச்சான்றின் பச்சாத்தாபம் இவ்விரண்டும் தவிர இதர துன்பங்கள் எல்லாம் வெறுங் கற்பனைகளே, உண்மையானவை அல்ல.

ரூஸோ

79. மனிதன் செய்யக்கூடிய தீய செயல்களில் எல்லாம் முற்றிலும் தீயதும், சற்றும் மன்னிக்க முடியாததும் களவு ஒன்றே.

ரஸ்கின்

80. தீச் செயல் நம்மைத் துன்புறுத்துவது செய்த காலத்தில் அன்று. வெகு காலம் சென்று அது ஞாபகத்திற்கு வரும் பொழுதுதான். அதற்குக் காரணம் அதன் ஞாபகத்தை ஒருபொழுதும் அகற்ற முடியாததே.

ரூஸோ

81. தீயொழுக்கத்திற்குக் கட்டுப்பாடில்லை என்று நினைப்பது தவறு. தீயவனே எஜமானர்கள் அனைவரிலும் கொடிய எஜமானனுக்கு அடிமையாயிருக்கின்றான். அக் கொடிய எஜமானன் யார்? அவனுடைய சொந்தத் தீய உணர்ச்சிகளே.

ஆவ்பரி

82. அநேகர் தங்கள் காலத்தில் பெரும் பாகத்தைப் பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர்.

லாபுருயர்

83. கயவர் முட்டாள்களின் நாட்டில் பட்டினியாய் இருப்பதில்லை.

சர்ச்சில்

4. உண்மை

84. உண்மையே ஞானத்தின் உறைவிடம்.

பழமொழி

85. உண்மை உரைத்துச் சாத்தானை நாணமடையச் செய்க.

ராபிலே

86. கடவுள் சிருஷ்டிகளில் தலைசிறந்தது சத்திய வந்தனே.

போப்

87. உயர்ந்த உண்மை மலர்வது ஆழ்ந்த அன்பிலேயே.

ஹீன்

88. உண்மையை நாம் அறிவினுல் மட்டும் காண்பதில்லை, அன்பினுலும் காண்கிறோம்.

பாஸ்கல்

89. உலோபியைப் போல், உள்ளம் நிறைந்த உண்மையும் ஓலைக் குடிசையிலேயே வாழ்கின்றது.

ஷேக்ஸ்பியர்

90. உண்மையின் முகம் அவ்வளவு அழகு! தோற்றம் அவ்வளவு கம்பீரம்!—அதைப் பார்த்தால் போதும், நேசியாமல் இருக்க முடியாது.

டிரைடன்

91. உலகத்தார் நாடும் பெருமைகள் வேண்டேன். உண்மை அறிவதொன்றே என் விருப்பம்.

சாக்ரடீஸ்

92. உண்மையை நேசி, ஆனால் பிழையை மன்னித்துவிடு.

வால்டேர்

93. அன்பு சில குறைகளையும், அறிவு சில பிழைகளையும் பொருட்படுத்தா. ஆனால் உண்மை எந்த அவமானத்தையும் மன்னிக்காது, எந்தக் குறையையும் பொறுக்காது.

ரஸ்கின்

94. உண்மை நாடவே நமக்கு உரிமை, ஆண்டவனுக்கே அது உடைமை யாகும்.

மான்டெய்ன்

95. உண்மையை அடைய விரும்பினால் உண்மைக்குரிய வழியில் சிறுகச் சிறுக முன்னேறிச் செல்க.

டாலர்

96. உண்மை பேசல் அழகாய் எழுதுவதை ஒக்கும். பழகப் பழகவே கைகூடும். ஆசையைவிடப் பழக்கத்தையே பொறுத்ததாகும்.

ரஸ்கின்

97. கடவுள் வலது கையில் முழு உண்மையையும், இடது கையில் உண்மையைத் தேடுவதில் அழியா

ஆசையையும் வைத்துக்கொண்டு, எது வேண்டும் என்று என்னைக் கேட்டால் - இடது கையில் உள்ளதை விரும்பினால் என்றும் இருட்டிலேயே இருக்க வேண்டியிருப்பினும் - நான் இடது கை முன் தலையைத் தாழ்த்தி, 'தந்தையே, தாரும்; உண்மை உமக்கே உரியது' என்று கூறுவேன். ஏனெனில் மனிதன் உண்மையை அடைவதாலன்றி உண்மையைத் தேடுவதாலேயே பரிபூரணத்துவத்லைதத் தன்னிடம் இடைவிடாது வளர்த்துக் கொள்வதற்குரிய தன் சக்திகளை விருத்தி செய்துகொள்கிறான்.

லெஸ்ஸிங்

98. உண்மையைக்கண்டுபிடிப்பதே மனிதனுடைய மகோன்னதமான லட்சியம். உண்மையைத் தேடுவதே புருஷோத்தமமான தொழில். அது அவனுடைய கடமையும் ஆகும்.

எட்வர்ட் போர்ப்ஸ்

99. மனிதன் பிறந்துள்ளது உண்மையைத் தேடவே. ஆனால் அதை அடையும் பாக்கியம் வேறொரு பெரிய சக்திக்கே உண்டு.

மான்டெய்ன்

100. நம் பக்கம் உண்மையிருப்பது வேறு - நாம் உண்மையின் பக்கத்தில் இருக்க விரும்புவது வேறு.

விட்லா

101. எல்லா அம்சங்களிலும் உண்மையான உபதேச மொழிகள் சிலவே.

வாவனார்கூஸ்

102. ஒன்றே உள்ளது. பல மாறி மறையும்.
விண்ணின் வெளிச்சம் என்றும் ஒளி தரும்.
மண்ணின் நிழல்கள் பறந்தோடிவிடும்.

ஷெல்லி

103. பொருள் சேர்ப்பதில் மட்டுமன்று, புகழ் தேடுவதிலுங்கூட நாம் மரிக்கும் மனிதரே.

ஆனால் உண்மையை நாடுவதில் நாம் அமரர். அழிவுக்கும் மாறுதலுக்கும் அஞ்சவேண்டுவதில்லை.

தோரோ

104. பெரிய விஷயங்களைப் போலவே சிறிய விஷயங்களையும் கவனிக்கக் கூடிய மனமே உண்மையும் உரமும் பொருந்திய மனமாகும்.

டாக்டர் ஜான்ஸன்

105. ஒவ்வொன்றிலும் நன்மையைக் காணவும் போற்றவும் அறிவதே உண்மையிடம் ஆசை உண்டு என்பதற்கு அடையாளம்.

கதே

106. உண்மை மனிதனுக்குச் சொந்தம்; பிழை அவனுடைய காலத்துக்குச் சொந்தம்.

கதே

107. உண்மை ஒரு பெரிய நிவர்த்தி. அருகில் செல்லப் பயந்து கண்களைச் சிமிட்டிக்கொண்டே அதைக் கடந்து செல்கிறோம்.

கதே

108. தரையோடு தரையாய் நசுக்கப்பட்டாலும், சத்தியம் மறுபடியும் எழுந்து நிற்கவே செய்யும். ஆண்டவனுடைய அந்தமில்லா ஆண்டுகள் அதற்கும் உண்டு.

பிரையண்ட்

109. ஏன் உண்மையாய் நடக்க வேண்டும்?— இந்தக் கேள்வி மூலமே இகழ் தேடிவிட்டாய்— 'மனிதனு யிருப்பதால்' என்பதே அதற்கு மறுமொழி.

ரஸ்கின்

110. சத்திய நெஞ்சுக்குள்ள ஒரே ஓர் அசௌகரியம் யாதெனில், எளிதாய் நம்பிக்கொள்ளும் தன்மையே.

ஸர் பிலிப் ஸிட்னி

111. எப்பொழுதும் சமர்க்களத்தில் அல்லது ஜெயக் கொண்டாட்டத்தில் இருப்பவன் சத்தியத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருத்தல் துர்லபம்.

கௌவி

112. நமக்கு ஆனந்தம் அளிக்கக் காரணமாய் இருப்பது எதையும் மாயை என்று கூற நியாயமே கிடையாது.

கதே

113. உண்மையே தெய்விகம் பொருந்தியது. சுதந்திரம் இரண்டாவது ஸ்தானம் பெறும். உண்மை உணர்வதற்குச் சுதந்திரம் அவசியமானுலும் சுதந்திரத் தோடு உண்மை சேராவிடில், சுதந்திரத்தால் ஒரு பயனும் உண்டாகாது.

மார்லி

114. முரணில்லாதிருக்க முயல்க. உண்மையாயிருக்க மட்டுமே உழைத்திடுக.

ஹோம்ஸ்

115. உண்மை உரைப்பதற்குச் சாத்தியமான ஒரே வழி கலைதான், அதுதான் கலையின் புகழும் நன்மையும் ஆகும்.

ராபர்ட் பிரௌணிங்

116. அதிகமான ஜனங்கள் நம்புகிறுர்களா? அப்படியானுல் அவ்வளவுக் கவ்வளவு அதிக ஜாக்கிரதையாக அந்த விஷயத்தை ஆராய்தல் அவசியம்.

டால்ஸ்டாய்

117. ஏதேனும் ஓர் உண்மையைத் தள்ளி மிதித்து விட்டால், அது சமாதான மொழியா யிருப்பதற்குப் பதிலாகச் சமர் தொடுக்கும் வாளாய் மாறிவிடும்.

ஹென்றி ஜார்ஜ்

118. 'சடங்கு'—அதன் அடியார் குழாங்கள் உப யோகமற்ற நிழல்களுக்காக உயிர் துறக்க எப்பொழு தும் தயார். 'உண்மை'—அழியா விஷயங்களின் அன்னை. ஆயினும் அதற்கு ஒரு நண்பனைக் காண்பது அரிது.

கூப்பர்

119. உண்மையாக இருக்கத் துணிக. ஒன்றிற்கும் பொய் வேண்டியதில்லை. பொய்யை விரும்பும் குற்றம் அதனாலேயே இரண்டு குற்றமாய்விடும்.

ஹெர்பர்ட்

120. சுருதிக்காக அறிவை அகற்றுபவன் இரண் டின் ஒளியையும் அவிப்பவனாவான். அவன் செயல் கண்ணுக்கு எட்டா நட்சத்திரத்தைத் தூர திருஷ்டிக் கண்ணாடி வழியாய்த் தெளிவாய்ப் பார்ப்பதற்கு என்று கண்களை அவித்துக்கொண்டது போலாகும்.

லாக்

121. மனிதனுடைய முதல் மொழி 'ஆம்'; இரண்டாவது 'அன்று'; மூன்றாவதும் இறுதியான தும் 'ஆம்'. பலர் முதலாவதோடு நின்றுவிடுவர்; வெகு சிலரே இறுதி மொழிவரை செல்வர்.

பழமொழி

122. தவறு ஒன்றுதான் சர்க்கார் தயவை வேண் டும். உண்மைக்கு அது வேண்டியதில்லை.

தாமஸ் ஜெவ்வர்ஸன்

123. முதலில் தூசியைக் கிளப்பி விடுகிறோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிறோம்.

பிஷப் பார்க்லி

124. மெய்யும் பொய்யும் கை கலக்கட்டும். பகிரங்கமாகக் கை கலந்து போர் புரியின், என்றேனும் மெய் தோல்வி யடைந்ததைக் கண்டவர் உளரோ?

மில்டன்

125. பாவத்திற்குப் பல கருவிகள் உண்டு. ஆனால் அவற்றிற் கெல்லாம் பொருத்தமான கைபிடி பொய்.

ஹோம்ஸ்

126. உயிரளிக்கும் உண்மையினின்று நம்மைப் பிறழச் செய்யும் சமூகப் பொய்கள் நாசமாய் ஒழிக!

டெனிஸன்

127. பொய்யானவற்றால் கவரப்படும் மனம் நல்ல விஷயங்களில் சுவை காணாது.

ஹொரேஸ்

128. எந்தப் பொய்யும் வயோதிகம் அடையும்வரை வாழ்வதில்லை.

ஸோபோகிள்ஸ்

129. முதலில் ஒரு குற்றம் செய்தவன் அதை மறைக்கப் பொய்புரைக்கும் பொழுது இரண்டு குற்றங்கள் செய்தவனுகிருன்.

வாட்ஸ்

130. பிழை செய்தால் பிறர் கண்டுகொள்ள முடியும். ஆனல் பொய் கூறினல் பிறர் கண்டுகொள்ள முடியாது.

கதே

131. முதலில் பொய்யாய்த் தோன்றுவது எல்லாம் பொய்யாய்விடா.

ஸதே

132. பலவீனத்தின் அளவே பொய்மையின் அளவும். பலம் நேரிய வழியில் செல்லும். குழிகள் அல்லது துளேகள் உள்ள ஒவ்வொரு பீரங்கிக் குண்டும் கோணியே செல்லும். பலமற்றவர் பொய் சொல்லியே தீரவேண்டும்.

ரிக்டர்

133. முழுப் பொய்யோடு முழு வல்லமையுடன் போர் புரிய முடியும்; ஆனல் மெய் கலந்த பொய்யோடு போர்புரிதல் கஷ்டமான காரியம்.

டெனிஸன்

134. மெய் கலந்த தவறுகளே அபாயகரமானவை. மெய்க் கலப்பாலேயே அவைகள் எங்கும் பரவச் சாத்திய மாகின்றது.

விட்னி ஸ்மித்

135. சுத்தப் பொய்யால் ஒரு நாளும் தொந்தரவு உண்டாவதில்லை.

விட்னி ஸ்மித்

5. கடவுள்

136. கடவுளைத் தன்னில் காணாதவனுக்குக் கடவுள் இல்லை.

டால்ஸ்டாய்

137. மக்களிடையிலேயே கடவுளை நாடுக.

நோவாலிஸ்

138. நானில்லையானால் கடவுளும் இருக்க முடியாது.

எக்ஹார்ட்

139. கோவிலில் வைத்துக் கும்பிடும் கடவுளை மனிதனே சிருஷ்டித்தான். அதனால் மனிதன் தன்னைப் போலவே கடவுளையும் படைத்திருக்கிறான்.

ஹெர்மீஸ்

140. கடவுள் கோவில் கட்டும் இடத்தில் எல்லாம் சாத்தானும் ஒரு கோவில் கட்டிவிடுகிறான். அது மட்டுமா? அவன் கோவிலுக்கே அடியார்களும் அதிகம்.

டிபோ

141. மனிதனுக்கு எத்தனைப் பைத்தியம்! ஒரு புழுவைச் சிருஷ்டிக்க முடியாது. ஆயினும் கணக்கில்

லாத கடவுளரைச் சிருஷ்டித்துக்கொண்டேயிருக்கிறான்.

மான்டெய்ன்

142. கடவுள் தகுதியுடையவர்க்குத் தாட்சண்யம் காட்டுவர், தகுதியற்றவர்களே நியாயத்தை மட்டும் வழங்குவர்.

புளாட்டஸ்

143. பரிபூரண நிலையில் ஆன்மாவுக்கு ஏற்படும் சொற்ப அவாவை வைத்தே கடவுள் இருப்பதைக் கணித சாஸ்திர முறையைக் காட்டிலும் அதிகமாய் நிரூபித்துக் காட்டலாம்.

ஹெம்ஸ்டர் ஹூஸ்

144. 'அவன்' என்னும் மொழி 'அவனை'க் குறைத்துவிடுகிறது.

டால்ஸ்டாய்

145. தெய்வபக்தி லட்சியமன்று, சாதனமே. அந்தச் சாதனத்தால் ஆன்ம விருத்தி அடையலாம். வேஷதாரிகளே தெய்வ பக்தியை லட்சியமாகச் செய்து கொள்வர்.

கதே

146. ஆண்டவன் இலன் எனினும் அறநெறி நிற்போம் என்பவரே அவன் அடியராவர்.

ராபர்ட் பிரௌனிங்

147. ஒருவன் கடவுள் பக்கல் இருப்பின், அவன் ஒருவனே பெரும்பான்மைக் கட்சி ஆகிவிடுவான்.

வென்டெல் பிலிப்ஸ்

148. ஆன்மாவுக்கு வெளியே கடவுளைத் தேடினுல் கடவுளின் விக்கிரகங்களை மட்டுமே காண்பாய். ஆன்மாவை ஆராய்ந்தால் அங்குள்ள உணர்ச்சிகளும் எண்ணங்களும் ஆண்டவனை அறிவிக்கும்.

149. அயலார்க்கு நன்மை செய்யும்பொழுதுதான் ஆண்டவனைத் துதிப்பதாகக் கூற முடியும்.

ஸவனரோலா

150. பரிபூரணமே தேவரை அளக்கும் கோல். பரிபூரணத்தில் பற்றே மனிதரை அளக்கும் கோல்.

கதே

151. தேவைகள் குறையும் அளவுக்கே தெய்வத் தன்மை அடைவோம்.

ஸாக்ரடீஸ்

152. ஆன்ம எளிமை கண்டே ஆண்டவன் மகிழ் கிறுன். எளிமைக் குணத்தைக் கண்டுதான் (மகிழ்கி றுன்); இறக்கும் குணத்தைக் கண்டன்று.

கதே

153. குழந்தை இயல்புடையவர் - அதாவது எளி தில் மகிழ்பவர், அன்பு செய்பவர், பிறர்க்கு மகிழ்வூட்டுப வர் - இவர்க்கே கடவுள் ராஜ்யம்.

ஆர். எல். ஸ்டீவன்ஸன்

154. கடவுள் பார்ப்பதைப் போல் எண்ணி மனித ரோடு வாழ்க; மனிதர் கேட்பதைப் போல் எண்ணிக் கடவுளோடு பேசுக.

ஸெனீகா

155. மனிதர் அறிய விரும்பாதது எதையும் கடவு ளிடம் கேட்காதே. கடவுள் அறிய நீ விரும்பாதது எதையும் மனிதனிடம் கேட்காதே.

ஸெனீகா

156. வட்டத்தில் எந்தவிடத்திருந்தும் மத்திக்குச் செல்ல வழியுண்டு. எவ்வளவு பெருந் தவறானாலும் இறைவனிடம் செல்ல வழியுண்டு.

ருக்கர்ட்

157. கடவுளை அறிந்துவிடுவோமென்று எதிர் பார்க்க இயலாது. ஆனால் கடவுளை அறியாமல் வேறு எதையும் அறியவும் எதிர்பார்க்க இயலாது.

பூடின்

158. மனிதர்க்குப் பேருணர்ச்சி தந்து போருக்கு நடத்திச் செல்லும் மூன்று மொழிகள் கடவுள், நித்யத் வம், கடமை என்பன. முதல் விஷயம் அறிவுக்கு அப்

பார்ப்பட்டது ; இரண்டாவது நம்ப முடியாதது ; மூன்றாவது ஒருகாலும் அலட்சியம் செய்ய முடியாதது.

மையர்ஸ்

159. கடவுளை அறிதல் - கடவுளிடம் அன்பு செலுத்துதல் இரண்டிற்கும் இடையிலுள்ள தூரம் எவராலும் இவ்வளவு என்று சொல்ல முடியாது.

பாஸ்கல்

160. ஏதேனும் பழுதிலாத ஒன்றை இயற்ற முயல்வதைப் போல் ஆன்மாவைப் புனிதமாக்குவதும் சமய வாழ்வு வாழச் செய்வதுமானது வேறெதுவும் இல்லை. ஏனெனில் பரிபூரணமே கடவுள், அதனால் பூரணத்தை நாடி முயல்பவன் கடவுள் - தன்மையை நாடுபவனுவான்.

மைக்கேல் எஞ்சலோ

161. கடவுளின் நீதி மெதுவாகத்தான் நகரும். ஆனால் ஒருபொழுதும் வழியில் தங்குவதில்லை. தவறு செய்தவனைச் சேர்ந்தேவிடும்.

ராபர்ட் பிரௌனிங்

6. நிரீச்வர வாதம்

162. தத்துவ ஞானம் சிறிதே பெற்றால் நிரீச்வர வாதியாக்கும்; ஆழ்ந்ததாகப் பெற்றால் ஈச்வரவாதியாக்கும்.

பேக்கன்

163. கடவுள் தன்னை நிரூபிக்க ஒருநாளும் அற்புதங்கள் காட்டுவதில்லை. அவருடைய சாதாரண சிருஷ்டிகளே போதும்.

பேக்கன்

164. நிரீச்வர வாதம் தத்துவ சாஸ்திரியின் தவறேயன்றி மனித இயல்பின் தவறன்று.

பான்கிராப்ட்

165. நல்லோர் வருந்தல் - தீயோர் வாழ்தல் - இவையே நிரீச்வர வாதத்துக்குக் காரணம்.

ட்ரைடன்

166. நிரீச்வர வாதம் எந்தப் பெரிய உண்மைகளை மறுக்கிறதோ அவற்றையெல்லாம் பெறுவதற்கு வேண்டிய நம்பிக்கையைப் பார்க்கிலும் மிக அதிகமான நம்பிக்கை வேண்டும் ஒருவன் நிரீச்வரவாதியா யிருப்பதற்கு.

அடிஸன்

7. பிரார்த்தனை

167. ஒவ்வொரு புனிதமான ஆசையும் கடவுள் பிரார்த்தனையே ஆகும்.

ஹூக்கர்

168. கடவுளை நோக்கி நிற்கும் ஆசையே பிரார்த்தனையின் தெளிவான லட்சியம் ஆகும்.

பிலிப்ஸ் புரூக்ஸ்

169. நாம் அறியாமலே நம் எண்ணங்களில் சில கடவுள் பிரார்த்தனையாக இருப்பதுண்டு.

விக்டர் ஹியூகோ

170. மனிதனுடைய இதயம் ஊமையாய் இருந்தா லன்றிக் கடவுள் ஒருநாளும் செவிடாய் இருப்பதில்லை.

குவார்ல்ஸ்

171. கடவுளிடம் மக்கள் பிரார்த்திப்பது எல்லாம் இரண்டும் இரண்டும் நான்கு ஆகாமலிருக்க வேண்டும் என்பதே.

ருஷியப் பழமொழி

172. நாம் கடவுளிடம் எதை வேண்டுகிறோமோ அதையே கடவுள் நம்மிடம் வேண்டுகிறார்.

ஜெரிமி டெய்லர்

173. நமக்குத் தேவையானதை எல்லாம் கடவுளிடம் வேண்டலாம். ஆனால், வேண்டுவதற்கெல்லாம் நாம் கவனமாய் உழைத்தல் அவசியம்.

ஜெரிமி டெய்லர்

174. ‘கடவுளே! தைரியம் அருளும்!’ என்று பிரார்த்தித்தால், துன்பத் தீயில் தள்ளுவதே அவர் அருளும் வழி.

ஸெளி

175. கடவுளிடம், ‘இது வேண்டும்’ என்று குறிப்பிடாமல் பொதுவாகப் பிரார்த்திப்பதே முறை. நமக்கு நன்மை எது என்பதைக் கடவுள் நன்கு அறிவார்.

ஸாக்ரடீஸ்

176. என் பிரார்த்தனைகளுக்கு எல்லாம் கடவுள் அருளவில்லை என்பதற்காக அவருக்கு வந்தனம் அளிக்குமாறு வாழ்ந்துவிட்டேன்.

ஜீன் இன்ஜெலோ

177. சுவர்க்கம்தான் கேட்காமலே கிடைக்கும், கடவுளோ கேட்டால்தான் கிட்டுவர்.

லவல்

178. கடவுளிடம் பிரார்த்திக்கவேண்டிய மூன்று வரங்கள்: முதலாவதாக நல்ல மனச்சான்று; இரண்

டாவதாக மன ஆரோக்கியம்; மூன்றாவதாகத் தேக ஆரோக்கியம்.

லெவிகா

179. பிரார்த்தித்தால் கேட்டதைப் பெறுவோம், அல்லது கேட்டிருக்கவேண்டியதைப் பெறுவோம்.

லெய்ட்டன்

8. சுவர்க்கம்

180. சுவர்க்கத்தின் ஆசை ஒருவனைச் சுவர்க்க மயமாய் ஆக்கிவிடும்.

ஷேக்ஸ்பியர்

181. அன்பும் அறமும் எவ்வளவு
சுவர்க்கமும் அவ்வளவே.

பார்க்கர்

182. அறம் விரும்பு; அதுவே வீடு.

மில்டன்

183. மனிதனுடைய மனம் அன்பில் இயங்குமானால் - உண்மையில் சுழலுமானால் - கடவுளிடம் ஒய்வு காணுமானால் - அப்பொழுது சுவர்க்கத்தை இப்பூமியிலேயே கண்டுவிடலாம்.

பேக்கன்

184. நான் சுவர்க்கத்தில் இருக்கவேண்டுமானால், முதலில் சுவர்க்கம் என்னிடம் காணப்படவேண்டும்.

ஸ்டான்போர்டு

185. ஆன்மாவுக்கு விமோசனம் சுவர்க்கத்திலேயே என்று நடப்பவன் விமோசனம் பெறுவதில்லை.

ஆனால், அன்பு நெறியில் நிற்பவனை ஆண்டவன் தானே தன் சன்னிதானத்திற்கு அழைத்துச் செல்வான்.

வான் டைக்

186. சுவர்க்கத்துக்கு வெகு தூரத்தில் உள்ளது பூமி—பூமிக்கு வெகு சமீபத்தில் உள்ளது சுவர்க்கம்.

ஹேர்

187. வாழ்வில் கற்கவேண்டிய கடின பாடங்களில் ஒன்றுண்டு. அதைப் பெரும்பாலோர் கற்பதில்லை. இங்கேயே நம்மைச் சூழ்ந்தே சுவர்க்கம் உளது என்பதே அந்தப் பாடம்.

ஜான் பரோஸ்

188. அறநெறி பற்றிப் பேசுவதன்று, அறநெறியில் நடப்பதுவே சுவர்க்கத்தில் கொண்டு சேர்க்கும்.

எம் ஹென்றி

189. உயிரோடு இருக்கும்பொழுது தன் இதயத்தை சுவர்க்கத்துக்கு அனுப்பாதவன், உயிர் போனபின் சுவர்க்கத்துக்குப் போக முடியாது.

பிஷப் வில்ஸன்

190. எப்பொழுதும் நியாயம் வழங்கும் வள்ளல்கள்' எப்பொழுதும் வண்மை உடைய நீதிமான்கள்-இவர்கள்

முன்கூட்டி அறிவியாமலே கடவுள் சன்னிதானத்துக்குப் போகலாம்.

பழமொழி

191. சுவர்க்கத்தை நன்கு போற்ற வேண்டுமானுல் பதினைந்து நிமிஷமாவது நரக அநுபவம் தேவை.

கார்ல்டன்

9. நரகம்

192. நரகம் என்பது வேறெங்குமில்லை. நன்றாய் ஆராய்ந்தால், அது பாவமே யாகும். கடவுளினின்று பிரிந்திருப்பதே நரகம்.

பாஸட்

193. நரகம் என்பது யாது? காலங் கடந்து கண்ட உண்மை; பருவம் கடந்து செய்த கடமை.

எட்வார்ட்ஸ்

194. நரகத்திற்குள்ள வழி எளிது, கண்களை மூடிக்கொண்டே போகலாம்.

பியன்

195. நரகத்திற்குச் செல்ல மனிதர் எவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்கின்றனர்! — அதில் நேர் பாதி போதுமே சுவர்க்கத்திற்குச் செல்ல — அதை நல்வழியில் எடுத்துக்கொள்ளும் துணிவு மட்டுமே தேவை.

பென் ஜான்ஸன்

196. நான் நரகம் உண்டென்று நம்ப மட்டும் செய்யவில்லை. நரகம் உண்டென்று அறியவும் செய்வேன். அது மட்டுமா? நரகத்துக்கு அஞ்சி அறநெறி

நிற்பவர் யாவரும் நரகத்தில் கால் வைத்துவிட்டவரோ என்பதையும் அறிவேன்.

ரஸ்கின்

197. சாஸ்திரிகளும் சாவோரும் நரகத்தைப்பற்றிப் பேசட்டும். ஆனால் நரக வேதனைகள் எல்லாம் என் இதயத்திலேயே உள்ளவை.

ஷேக்ஸ்பியர்

10. மதம்

198. நூறு விதமாய்க் கூறினாலும் மதம் ஒன்று தான் உண்டு.

பெர்னார்ட் ஷா

199. அவனியிலுள்ள சமயங்களில் அறத்தாறு உய்ப்பது ஒன்றே உண்மைச் சமயம்.

ஸவனரோலா

200. நம்மிடம் பகைப்பதற்குப் போதுமான சமய உணர்ச்சி உளது. ஆனால் அன்பு செய்வதற்குப் போது மான அளவு இல்லை.

ஸ்விப்ட்

201. மனிதர் அனைவருக்கும் மதமாகிய கடிவாளம் தேவை. 'மரணத்திற்குப் பின் யாதோ?' என்னும் பயமே மதம்.

ஜார்ஜ் எலியட்

202. உலகமே என் தேசம், நன்மை செய்வதே என் சமயம்.

தாமஸ் பெய்ன்

203. ஞானிகள் அனைவர்க்கும் ஒரே மதமே, அவர்கள் தத்தம் மதத்தை வெளியே கூறுவதில்லை.

லார்ட் ஷாப்ட்ஸ்பரி

204. எல்லாச் சமயங்களுக்கும் ஒரே நோக்கம்தான். விலக்க முடியாததை ஏற்றுக்கொள்ளச் செய்வதே அந்த நோக்கம்.

கதே

205. எந்தக் காலமும் எனக்குத் துணையாய் நிற்க இறைவனிடம் ஏற்பதா யிருந்தால், முதலில் வேண்டுவது சமய சாந்தி, இரண்டாவது கல்வியில் சுவை.

ஹெர்ஷல்

206. சமய அநுஷ்டானத்துக்கு இன்றியமையாது வேண்டப்படுவது மனித ஜாதியிடம் அன்பும் மரியாதையும் செய்தலே.

அனடோல் பிரான்ஸ்

207. சமயத்தைப் பற்றிச் சிந்தியாதவன் தான் பிறந்த சமயமே உண்மைச் சமயம் என்று எண்ணிக் கொள்கிறான்.

டால்ஸ்டாய்

208. சமயம் மாறுபவன் தலை போன பின் இன்னதெனத் திரும்பிப் பார்க்கும் ஈயை ஒப்பான்.

பட்லர்

209. மனிதர், இம்மைக்காக மறுமையையும், மறுமைக்காக இம்மையையும், ஒருபொழுதும் முழுவதும் வேண்டாம் என்று விட்டுவிட மாட்டார்கள்.

ஸாமுவேல் பட்லர்

210. அற உணர்ச்சி அளிக்காத சடங்குகள் அனைத்தும் அழிக்கத் தக்கவைகளே.

ஸவனரோலா

211. கிறிஸ்து மத நூல் எதுவும் எழுதவில்லை. நன்மையான காரியங்களைச் செய்வதிலேயே கருத்தாயிருந்தார்.

ஹொரேஸ் மான்

212. கிறிஸ்து தர்க்க சாஸ்திரம் எதுவும் தந்து போகவில்லை. அவர் தந்திருப்பது சில எளிய உண்மைகளே.

ஹேடன்

213. கிறிஸ்தவ மதம் அயலானுக்கு அன்பு செய்யப் போதிக்கும், ஆனால் தற்கால சமூகமோ அயலான் ஒருவன் உண்டு என்பதையே ஒப்புக்கொள்வதில்லை.

டிஸ்ரேலி

214. தன் மதம் அடிமைத்தனம் என்று உணர்பவன் அதை இன்னும் அறிய ஆரம்பியாதவன்.

ஜே. ஈ. ஹாலண்டு

215. சரியாக அறியாத சமயமே நம்மை அழகுக்கு அந்நியமாக்கும். சமயம் அழகைக் கண்டு ஆனந்திக்கும்

படி செய்யுமானல், அப்பொழுது சமயம் உண்மை; சரியாக அறிந்திருக்கிறோம் என்று தெரிந்துகொள்ளலாம்.

லெஸ்ஸிங்

216. அறிவில்லாத சமயவாதிகள் சமயக் கொள்கைகளுக்காகச் சண்டையிடட்டும். ஆனல் தர்ம வழியில் நடப்பவன் ஒரு நாளும் தவறியவனுகான்.

போப்

217. நட்பு விஷயத்திற் போலவே மத விஷயத்திலும், யார் அதிகப் பற்றுடையவர்களாகக் கூறிக்கொள்கிறர்களோ, அவர்களே அந்த அளவிற்கு உண்மை நம்பிக்கையில் குறைந்தவர்களாவர்.

ஷெரிடன்

218. தொல்லை யில்லாமல் இருப்பதற்காகவே ஜனங்கள், 'நாங்கள் எல்லோரும் ஒரே மதத்தினர்' என்று கூறிக்கொள்ளுகின்றனர். ஆனல் விஷயத்தை நன்கு ஆராய்ந்தால், எல்லா விஷயங்களிலும் ஒரே மதத்தையுடைய மூன்று பேரைக்கூட எங்கும் காண முடியாது.

ஸெல்டன்

219. பண விஷயமாய் நம்பத் துணியாத இடத்தில் ஆன்ம விஷயமாய் நம்பத் துணிவது எவ்வளவு விபரீதம்! மதாசாரியர் காலணு கொடுத்தால் அது செல்லுமோ

செல்லாதோ என்று சந்தேகிப்போம். ஆனால் அவர்கள் கூறும் மதத்தை ஆராயாது சரி என்று அங்கீகரித்து விடுகிறோம். என்னே மனிதர் மடமை!

பென்

220. மதப் பிடிவாதமுடையவர் அவர்கள் வாழ் நாளில் மட்டுமே மதியுடையவராய் மதிக்கப்படுவர்.

தாமஸ் வில்ஸன்

221. ஜனங்கள் சமயத்திற்காகச் சண்டையிடுவர், வாதம் புரிவர், வசை பகர்வர், அயலாரைத் துன்புறுத் துவர், அனலிலும் இடுவர், உயிரைத் துறக்கவும் செய் வர் — சமயத்திற்காக எல்லாம் செய்வர். ஆனால், சமய வாழ்வு வாழமட்டும் செய்யார். சிலரேனும் வாழ முயல வாவது வேண்டாமோ? அதுகூடக் கிடையாது.

பிரிஸ்வெல்

222. புனிதமான விஷயங்களை உணர்ச்சியின்றிக் கையாளும் வேஷதாரிகளே பெரிய நாஸ்திகர். அவர் களுக்கு இறுதியில் சூடு போடுதல் அவசியம்.

பேக்கன்

223. நாம் உண்மை என்று நம்புவதை ஒப்புக் கொள்ள மறுப்பவரை நாஸ்திகர் என்று கருதுவது பெருந் தவறு. இழிவான நோக்கங் கொண்டு உண்மைக்

குச் செவி சாய்க்க மறப்பவரே நாஸ்திகர். சமயக் கோட்பாடுகளை எல்லாம் நம்புவதாய்க் கூறிக்கொண்டு சமய ஒழுக்கம் இல்லாதவன் நாஸ்திகரில் நாஸ்திகன்.

ஹெச். ஏ.

224. விக்கிரகங்கள் சந்தேகத்திற்கு இடமாயும் வணங்குவோர் இதயத்திற்கு (எல்லாவித நல்லுணர்ச்சி யும் தரச் சக்தியற்ற) சர்வ சூனியமாயும் ஆகும்பொழுது தான் விக்கிரக ஆராதனை தவறாகும்.

கார்லைல்

225. மதப் பிடிவாதி, ஆப்பிரிக்க எருமை போல், இருப்பவன். நேரேதான் பார்ப்பான் — பக்கங்களில் திரும்பான்.

பாஸ்டர்

226. மதப் பிடிவாதியின் மனம் கண்ணை ஒக்கும். அதிக ஒளி பட்டால் அதிகமாக இடுங்கும்.

ஹோம்ஸ்

227. மதப் பிடிவாதம், மதத்தைக் கொன்று, அதன் ஆவியைக் காட்டி மூடர்களைப் பயமுறுத்தும்.

கோல்டன்

228. மதப் பிடிவாதத்துக்கு மூளையில்லை, அதனால் யோசிக்க முடியாது; இதயமில்லை, அதனால் உணர முடியாது.

ஒகானல்

11. தத்துவ ஞானம்

229. வாழும் முறையைக் கற்பிக்கும் வித்தையே தத்துவ ஞானம் தரும்.

ப்ளுடார்க்

230. உண்மையைக் காண்பதும் நல்வழியில் நடப்பதுமே தத்துவ ஞானத்தின் இரண்டு முக்கிய லட்சியங்கள் ஆகும்.

வால்டேர்

231. உண்மையான தத்துவ ஞானம், இல்லாததைச் சிருஷ்டிக்காது, உள்ளதையே நிரூபித்து உறுதி செய்யும்.

கஸின்

232. நுண்ணிய கருத்துக்கள் உடைமை மட்டுமே தத்துவ ஞானம் ஆகிவிடாது. அறிவு கூறும் வழி நிற்க ஆசை உடைமையே அதன் இலட்சணம்.

தோரோ

233. தவறான அபிப்பிராயத்தை ஒழிப்பதும், அறிவைத் தூய்மை செய்வதும், நமது அறியாமையின் ஆழத்தை உறுதி செய்வதுமே தத்துவ ஞானத்தின் தொழில்.

ஹாமில்டன்

234. அறிவின் உதவியின்றி உணர்ச்சி மூலம் நம்பப் படுபவைகளுக்குத் தவறான காரணம் கண்டுபிடிப்பதே தத்துவ சாஸ்திரம். ஆனால் அக்காரணம் காண்பதும் ஓர் உணர்ச்சியே.

ப்ராட்லி

235. தத்துவ ஞானத்தின் லட்சியம் அறம்.

பீட்டர் பெயின்

236. தத்துவ ஞானத்தை 'அறிவை அறியும் அறிவு' என்பர். ஆனால் உண்மையில் அது அறியாமையை அறியும் அறிவே ஆகும்; அல்லது காண்ட் கூறுவதுபோல் அது அறிவின் எல்லையை அறியும் அறிவே ஆகும்.

மாக்ஸ்முல்லர்

237. தத்துவ ஞானம் கற்பது 'தான்' சாகத் தயாராக்குவதே யன்றி வேறன்று.

ஸிஸரோ

238. தத்துவஞானி போல் பேசுவதும் எழுதுவதும் எளிது; ஆனால் அறிவோடு நடப்பது—அங்குதான் கஷ்டம்!

ரைவரோல்

239. தத்துவ ஞானம் எல்லாம் ஆச்சரியத்தில் ஆரம்பித்து, ஆச்சரியத்தில் முடிவடையும். முதல் ஆச்சரியம் அறியாமையின் குழந்தை; மற்ற ஆச்சரியம் வணக்கத்

தின் தாய். முன்னது நமது அறிவின் பிரசவக் கஷ்டம்; இறுதியானது அதன் சுக மரணம்.

கோல்ரிட்ஜ்

240. தத்துவஞானிக்குப் பிறர் யோசனைகளைக் கேட்க விருப்பமும், ஆனால், தானே ஆராய்ந்து முடிவு கட்ட மன உறுதியும் வேண்டும். உழைப்பும் இருந்து விட்டால் இயற்கையின் ஆலயத்திலுள்ள இரசிகப மண்டபத்தினுள் நுழையவும் எதிர்பார்க்கலாம்.

பாரடே

241. தத்துவ சாஸ்திரிகள் உலக விவகாரங்களைப் பற்றித் தர்க்கித்துக்கொண்டிருப்பர். ஆனால் அதற்கிடையில் உலகை நடத்திச் செல்வன பசியும் காதலுமே யாம்.

ஷில்லர்

242. நமது தத்துவ சாஸ்திரத்தில் நாம் கனவு கண்டும் அறியாத பல விஷயங்கள் விண்ணிலும் மண்ணிலும் உண்டு.

ஷேக்ஸ்பியர்

243. ஒருவன் யாரிடம் பேசுகின்றானோ அவனுக்குப் பொருள் விளங்காமலும், பேசுகின்ற தனக்குப் பொருள் விளங்காமலும் இருந்தால், பேசுவது தத்துவ சாஸ்திரமாகும்!

வால்டேர்

12. ஆன்மா

244. உடல் — அது மண்ணேயன்றி வேறன்று; ஆன்மா — அது நித்தியத்தின் முகை ஆகும்.

கல்வெர்வெல்

245. அறிவு கண்ணில் விளங்கும் — அன்பு முகத்தில் விளங்கும் — ஆனல் ஆன்மா விளங்குவது மனத்தில் கேட்கும் அந்தச் சிறு குரலிலேயே.

லாங்பெலோ

246. மனத்தில் உயர்ந்த எண்ணங்களும் இலட்சியங்களும் இருக்குமானல், ஆன்மா உடம்பில் இருக்கும் பொழுதே ஆண்டவன் சன்னிதானத்தில் இருப்பதாகும்.

ஸெனீகா

247. உழைப்பை மட்டுமே விற்கலாம், ஒருநாளும் ஆன்மாவை விற்றலாகாது.

ரஸ்கின்

248. ஆன்மாவின் செல்வம் அது எவ்வளவு அதிகமாக உணரும் என்பதைக் கொண்டு அறியப்படும்; ஆன்மாவின் வறுமை எவ்வளவு குறைவாக உணரும் என்பதைக் கொண்டு அறியப்படும்.

ஆல்ஜர்

249. ஆன்மா சூரியனை ஒக்கும். இரவில் அஸ்தமித்துவிட்டது, கண்ணுக்குப் புலனகவில்லை. ஆனல்

வேறிடத்தில் வெளிச்சம் பரப்புவதற்காகவே சென்றுளது என்பதே உண்மை.

கதே

250. ஆன்மா ஆளவில்லையானல், அது சோழனுயிருக்க முடியாது. அது ஆளவேண்டும், அல்லது அடிமையா யிருக்கவேண்டும் — அவ்வளவே. வேறெதுவாயும் இருக்க முடியாது.

ஜெரிமி டெய்லர்

251. ஆன்மாவைப் பற்றிய முக்கிய பிரச்னை அது எங்கிருந்து வந்தது என்பதன்று, அது எங்கே போகிறது என்பது ஆகும். — அதை அறிய வாழ் நாள் முழுவதும் தேவை.

ஸதே

252. மனிதனையும் அவன் செயல்களையும் அடக்கியாள்வது ஜட சக்தி அன்று, ஆன்ம சக்தியே யாகும்.

கார்லைல்

253. ஆன்மாவின் கதவை ஒரு விருந்தாளிக்கு ஒரு முறை திறந்துவிட்டால், பின் யாரெல்லாம் உள்ளே வந்து புகுவர் என்று கூறிவிட முடியாது.

ஹோம்ஸ்

254. நாகரிக முன்னேற்றத்திற்கு வகுக்கப்பட்டுள்ள கருவிகளில் எந்தக் காலத்திலும் சான்றோரின் ஆன்ம சக்தியே தலைசிறந்ததாகும்.

ஹாரிஸன்

255. ஆன்ம அபிவிருத்தி — மனிதனைப் பரிபூரண

மாக்குவதே அதன் லட்சியம். அதனால் அது சரீர வாழ்வை யெல்லாம் சாதனமாகத் தாழ்த்திவிடும்.

எமர்ஸன்

13. இலட்சியம்

256. இலட்சியம் இல்லாத மனிதன் திசையறி கருவி இல்லாத கப்பலை யொப்பான்.

ஆவ்பரி

257. மேல் நோக்காதவன் கீழேயே நோக்குவான். உயரப் பறக்கத் துணியாத ஆன்மா ஒருவேளை தரையில் புரளவே விதிக்கப்பட்டிருக்கும்.

பிக்கன்ஸ்பீல்டு

258. தாழ்ந்த லட்சியத்தில் ஜயம் பெறுவதைவிட உயர்ந்த லட்சியத்தில் தோல்வியுறுவதே சிலாக்கியம்.

ராபர்ட் பிரௌனிங்

259. எவ்விதம் இறந்தான் என்பதன்று கேள்வி — எவ்விதம் வாழ்ந்தான் என்பதே கேள்வி.

டாக்டர் ஜான்ஸன்

260. தன் சக்திகளிலிருந்து சாத்தியமான அளவு சாறு பிழியவே ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கை லட்சியமா யிருத்தல் அவசியம்.

ரிக்டர்

261. ஒருவனுடைய லட்சியம் இதுவென்று அறிந்து விட்டால், பின் அவனைப் பற்றி அறிந்துகொள்ளுதல் கஷ்டமான காரியம் அன்று.

ஹோம்ஸ்

262. எந்த மனிதனையும் முற்றச் சோதிப்பது, 'இவனுக்கு எது பிரியம்?' என்னும் கேள்வியே.

ரஸ்கின்

263. ஆட்டு மந்தை போல் நடவாமையே அனைத்தி லும் முக்கியமான விஷயம். பிறர் போகும் இடத்தை விட்டு நாம் போகவேண்டிய இடத்தை அறிவதே கடன்.

ஸெனிகா

264. வாழ்வின் லட்சியத்தை அடைய முயல்வோ னுடைய வாழ்வே நீண்டதாகும்.

யங்

265. இறுதியில் லட்சியத்தை அடைவிக்கும் காரியங்களைச் செய்தால் மட்டும் போதாது. செய்யும் ஒவ்வொரு காரியமுமே ஒரு லட்சியமா யிருத்தல் வேண்டும்.

கதே

266. முடிவில் பிரதானமானது நாம் எண்ணுவது எது, அறிவது எது, நம்புவது எது என்பதல்ல. நாம் செய்வது எது என்பதொன்றே பிரதானமானதாகும்.

ரஸ்கின்

267. மனிதனுடைய உயர்ந்த விஷயங்கள் அவன் அருகிலேயே உள; அவன் பாதங்களின் அடியிலேயே அமையும்.

ஹாட்டன் பிரபு

268. இன்பங்களைப் பெற முயல்வதினும் இலட்சி யங்களைப் பெருக்க முயல்வதே நலம்.

ஆவ்பரி

269. லௌகிக வாழ்வினின்று விடுதலை பெற

இரண்டு வழிகள் உள. ஒன்று இலட்சிய வாழ்விலும், மற்றொன்று மரணத்திலும் சேர்க்கும்.

ஷில்லர்

270. ஒருவன் பிறர் லட்சியத்திற்காக இறக்க முடியும். ஆனால் அவன் வாழ்வதானால் தன் லட்சியத்திற்காகவே வாழ வேண்டும்.

இப்ஸன்

271. தன் சக்தி எவ்வளவு உயர்ந்ததாயும் எவ்வளவு அளவொத்ததாயும் அபிவிருத்தியடைய முடியுமோ அவ்வளவு அபிவிருத்தியும் அடைவதே ஒவ்வொருவருடைய லட்சியமா யிருக்கவேண்டும்.

ஹம்போல்ட்

272. இவ்வுலகத்தை நன்கு பயன்படுத்தியே அவ்வுலகத்தை அடைதல் இயலும். நம் இயல்பைப் பூரணமாக்கும் வழி அதை அழித்துவிடுவதன்று. அதற்கு அதிகமாக அதோடு சேர்ப்பதும், அதன் லட்சியத்திலும் உயர்ந்த லட்சியத்தை நாடச் செய்வதுமே.

நியூமன்

273. வாழ்வில் ஏற்படும் கஷ்டங்களைக் குறைக்க ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வதற் கன்றி வேறெதற்காக நாம் உயிர் வாழ்கின்றோம்?

ஜார்ஜ் எலியட்

274. மனிதர் அவசியம் கவனிக்க வேண்டிய உண்மையான, நியாயமான, கௌரவமான விஷயம்

தங்களைச் சுற்றியுள்ளவர், தங்களுக்குப் பின் வாழப் போகிறவர் — இவர்களுடைய நன்மையை நாடுவதே.

ஹாரியட் மார்ட்டினோ

275. நீண்ட காலம் வாழவேண்டு மென்பது அநேகமாக ஒவ்வொருவருடைய ஆசையுமாகும். ஆனால் நன்றாய் வாழ விரும்புபவர் வெகு சிலரே.

ஹீஜிஸ்

276. உழைப்பு, துக்கம், மகிழ்ச்சி — இம்மூன்றையும் மனிதன் அநுபவிக்கப் பிறந்தவன். இந்த மூன்றுமில்லாத வாழ்வு சரியான வாழ்வாகாது.

277. மானிட உள்ளத்தின் தலைசிறந்த சிருஷ்டிகள் கூடப் பரிபூரணத்தில் மிகக் குறைந்தவை என்பது முற்றிலும் நியாயம்.

வாவனார் கூஸ்

278. நாளுக்கு நாள் ஏற்றம் பெற்றுவரும் லட்சியம் ஒன்று ஊழிகளை ஊடுருவி ஓடுகின்றதென்பதும், வருஷங்கள் ஆக ஆக மனிதர் கருத்துக்களும் விரிவடைகின்றன என்பதும் மெய்.

டெனிஸன்

14. நன்மை—தீமை

279. நன்மை யென்றும் தீமை யென்றும் இல்லை; அவ்விதம் ஆக்குவது மனமே.

ஷேக்ஸ்பியர்

280. 'நன்மை', 'தீமை' — நம் அறியாமையால் எழும் இரு பெயர்கள்.

நம் மனத்திற்கு உகந்ததை 'நன்மை' என்கிறோம், பிறர் மனத்திற்கு உகந்ததைத் 'தீமை' என்கிறோம்.

'தீமை' — நமக்குத் தீங்கிழைப்பது. 'நன்மை'— அநேகமாய்ப் பிறர்க்குத் தீங்கிழைப்பது.

பால் ரிச்சர்டு

281. நேர் வழியில் அடைய முடியாததை ஒரு நாளும் நேரல்லாத வழியில் அடைந்துவிட முடியாது.

கதே

282. அற்ப விஷயங்கள் மனத்தைக் கலக்கினால் அதிர்ஷ்டசாலி என்று அர்த்தம். துரதிர்ஷ்ட காலத்தில் அற்ப விஷயங்கள் உணர்ச்சிக்கு எட்டுவதில்லை.

ஷோப்பனர்

283. நன்மை தீமையினின்று பிறவாவிடினும் அது தீமையை எதிர்ப்பதிலேயே அடையக்கூடிய அபிவிருத்தி அனைத்தையும் அடையும்.

ரஸ்கின்

284. செல்வர் வறிஞர் காரியத்தில் சிரத்தை காட்டும் பொழுது, அது தர்மம் எனப்படும்.

வறிஞர் செல்வர் காரியத்தில் சிரத்தை காட்டும் பொழுது, அது ஒழுங்கீனம் எனப்படும்.

பால் ரிச்சர்டு

285. தண்டனை பெறுவதைவிட வெகுமதி பெறுவது இழிவில் குறைந்தது அன்று.

உன் நற்செய்கைகளுக்காக உனக்குக் கடவுள் வெகுமதி அளிப்பாரென்று நீ எதிர்பார்க்கும் பொழுது, அவைகளுக்காகச் சாத்தான் உன்னைத் தண்டிக்கக் கூடும் என்பதை மறவாதே. ஆயினும் நற்செய்கைகளையே செய்வாயாக.

அநேக ஜனங்கள் நன்மை செய்வதை விட்டுத் தீமை செய்வதன் காரணம், கடவுள் தண்டித்தாலும் தண்டிக்கட்டும், சாத்தான் தண்டனையை மட்டும் தாங்க முடியாதென்று கருதுவதே என்பதற்குச் சந்தேகமில்லை.

பால் ரிச்சர்டு

286. ஒளி நிறைந்த இடத்தில் நிழல் இருண்டிருக்கும்.

கதே

287. எப்பொழுதும் நமது சூரிய ஒளியில் ஒரு கறுப்புப் புள்ளி உண்டு ; நமது நிழலே அது.

கார்லைல்

288. ஐயோ! பேயை அடக்குவதினும் எழுப்புவது எளிது.

காரிக்

289. தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போதுமான அறிவில்லாத மூடர் செயல்.

பிராங்க்லின்

290. அதைரியப்படாதே. ஒன்றுதான் அச்சம் அளிப்பது; பாபமே அது.

ஸெயிண்ட் கிறிஸாஸ்டம்

291. தீமை செய்வதினும் தீமை பெறுதலே நலம்.

ஸிஸரோ

292. ரோஜா முள்ளின்றி மலர்வதில்லை,—உண்மையே. ஆனால் மலர் இறக்க முள் இருக்கலாகாதன்றோ?

ரிக்டர்

293. அழுகிய பழங்களில் அது கொள்வோம் இது தள்ளுவோம் என்று தேர்வது எப்படி?

ஷேக்ஸ்பியர்

294. அநேக சந்தர்ப்பங்களில் நாம் தீமை யென்று கூறுவது, தவறியோ அல்லது மிதமிஞ்சியோ ஏற்பட்ட நன்மையாகும். மனோ தைரியம் மிதமிஞ்சினால் மடமையாகும். பட்சம் மிதமிஞ்சினால் பலவீனமாகும். சிக்கனம் மிஞ்சினால் லோபமாகும்.

ஆவ்பரி

295. மனிதர் தற்சமய நிலைமையில் காணும் தீமைகளுக்காக வருந்தும் பொழுது, வேண்டுமென்று விரும்பும் நிலைமையில் ஏற்படக்கூடிய தீமைகளைப் பற்றிச் சிறிதும் சிந்திப்பதில்லை.

பிராங்க்லின்

296. பாத்திரம் நிறைந்திருப்பின் வெளியே ஊற்றாமல் உள்ளே ஊற்ற முடியாது.

ஆர்னல்ட் பென்னெட்

297. பையில் துவாரமிருந்தால் அதில் பணத்தை நிரப்பிப் பலனில்லை.

ஜார்ஜ் எலியட்

15. அறிவு

298. 'அறிவு' — ஆம், அது நாம் வானுலகு ஏறு தற்குரிய வன் சிறகு.

ஷேக்ஸ்பியர்

299. கடவுள் ஆலோசிப்பவன் ஒருவனை உலகிற்கு அனுப்பினால், ஜாக்கிரதை! அப்பொழுது அனைத்தும் அபாய நிலை அடையும்!

எமர்ஸன்

300. எல்லா உடைமைகளிலும் ஞானமே அழியாத தாகும்.

ஸாக்ரடீஸ்

301. சாத்தானுக்குச் சிந்தனை செய்பவனைப் போன்ற கொடிய சத்துரு கிடையான்.

கார்லைல்

302. நூலறிவு பேசும் — மெய்யறிவு கேட்கும்.

ஹோம்ஸ்

303. நூலறிவு அதிகம் கற்றுவிட்டதாக அகத்தில் கர்வம் கொள்ளும். மெய்ஞ்ஞானம் இன்னும் அறிய வேண்டியது அதிகம் என்று தாழ்ச்சி சொல்லும்.

கௌப்பர்

304. ஞானத்தின் முதல் வேலை தன்னை அறிதல்; அன்பின் முதல் வேலை தனக்குத் தான் போதுமானதா யிருத்தல்.

ரஸ்கின்

305. நுண்ணறிவு அன்புடன் சேர்ந்துவிட்டால் அதனால் அடைய முடியாதது எதுவும் அவனியில் கிடையாது.

கதே

306. அறிவின் முதல் பாடம் ஐச்வரியத்தை வெறுப்பது; அன்பின் முதல் பாடம் ஐச்வரியத்தை அனைவருக்குமாகச் செய்வது.

ரஸ்கின்

307. உண்மை அறிவு அன்பில் கொண்டு சேர்க்கும்.

வோர்ட்ஸ்வொர்த்

308. வாழ்வு யோசிப்பவனுக்கு இன்ப நாடகம்; உணர்பவனுக்குத் துன்ப நாடகம்.

வால்ப்போல்

309. நீ எண்ணுவது எல்லோர்க்கும் சொந்தம், நீ உணர்வதே உனக்குச் சொந்தம்.

ஷில்லர்

310. உண்மை ஞானம் கண் முன் இருப்பதைக் காண்பதன்று, பின் வருவதை முன் அறிவதாகும்.

டெரன்ஸ்

311. எதை நாம் அறியவில்லையோ அது நம்முடையதன்று.

கதே

312. ஒரு விஷயத்தைப் பல வாயிலாகப் பார்க்க முடியாத புத்தி குறுகியதாகும்.

ஜார்ஜ் எலியட்

313. தான் தானாகவே இருக்க அறிவதே உலகில் பெரிய விஷயம்.

மான்டெய்ன்

314. மனிதனுடைய உடைமையா யிருக்கக்கூடியது அறிவு ஒன்றே. ஆகையால் அறிவை விருத்தி செய்வதே ஆசைப்பட்டு அடைய முயலத்தக்க ஒரே வெற்றியாகும்.

பழமொழி

315. மனோ விகாரங்களே வாழ்வாகிய கப்பலைச் செலுத்தும் காற்று. அறிவே அதை நடத்தும் சுக்கான். காற்றின்றேல் கப்பல் நின்றுவிடும். சுக்கானின்றேல் தரை தட்டிவிடும்.

ஷாவல்ஜ்

316. உண்மையில் பெருங் கடல் நம்மால் அறியப் படாமல் பரந்து கிடக்கின்றது. நாமோ, கடற்கரையில் விளையாடி, அங்குமிங்கும் ஓடி, அழகான ஒரு சிப்பியை யும் மெல்லிய ஒரு கடற் பாசியையும் கண்டு மகிழ்ந்து நிற்கும் சிறு குழந்தைகளைப் போல் இருக்கிறோம்.

ஆவ்பரி

317. குறைந்த பட்சத் தீமையும், கூடிய பட்ச நன்மையும் விளையும்படி வாழ்வதே உலகில் தலை சிறந்த ஞானமாகும்.

ரொமெய்ன் ரோலண்டு

318. கூடிய மட்டும் துன்பம் விளையாமல் தடுத்துக்

கொள்வதும், தடுக்க முடியாத துன்பத்தைக் கூடிய மட்டும் பயன்படுத்திக்கொள்வதுமே அறிவு ஆகும்.

ரஸ்கின்

319. என்னை நகைக்கச் செய்வன நம் அறியாமைகள் அல்ல — நம் அறிவுகளேயாகும்.

மான்டெய்ன்

320. ஜீவனத்துக்கான சாதனமாக மட்டுமன்று - ஜீவிதத்துக்கான சாதனமாகவும் மனிதனுக்கு அறிவு தேவை.

ஆவ்பரி

321. நூலறிவு பெற்றவன் குளத்தை யொப்பான்; மெய்யறிவு உடையவன் சுனையை யொப்பான்.

ஆல்ஜெர்

322. வாழ்விடமிருந்தோ மக்களிடமிருந்தோ அதிகமாக எதிர்பாராதிருத்தலே மெய்யறிவின் ஜீவ அம்சமாகும்.

மார்லி

323. நூலறிவு வந்துவிடும்: மெய்ஞ்ஞானம் வரத் தயங்குகின்றது.

டெனிஸன்

324. தன்னலமின்மையும் நாணமுமே மெய்ஞ்ஞானத்தின் இலட்சணம்.

ரஸ்கின்

325. அறிவாளி தன்னை மட்டும் உடையவனு யிருந்

தால் போதும், அவன் ஒருபொழுதும் எதையும் இழப்ப தில்லை.

மான்டெய்ன்

326. தெரியாது என்று உணர்வது அறிவு அடைவ தற்குப் பெரிய வழி.

டிஸ்ரேலி

327. கற்றதை எல்லாம் முழுதும் மறக்க முடிந்த பொழுதே நாம் உண்மையில் அறிய ஆரம்பிக்கிறோம்.

தோரோ

328. பகுத்தறிவு என்பது உண்மையை அறியக் கடவுள் நமக்குத் தந்துள்ள ஒரே புனிதமான சாதனம். நம் அனைவரையும் ஒன்றாய் இயக்கத்தக்கது அதுவே. ஆனால், ஐயோ, நாம் அதைத்தான் நம்புவதில்லையே!

டால்ஸ்டாய்

329. தன்னைப் பூரணமாய் அறியாதவன் ஒருநாளும் பிறரைச் சரியாக அறிய முடியாது.

நோவாலிஸ்

330. பயபக்தி யில்லாத அறிவு அறிவாகாது. அது மூளை அபிவிருத்தியா யிருக்கலாம், அல்லது கைத் தொழில் அறிவா யிருக்கலாம். ஆனால் ஆன்ம அபிவிருத்தி யாக மட்டும் இருக்காது.

கார்லைல்

331. அறிஞர் பகைவரிடமிருந்தும் பல விஷயங் களைக் கற்றுக்கொள்வர்.

அரிஸ்டோபீன்ஸ்

332. பக்தர் 'தன்'னைத் துறத்தல் போலவே அறிஞ ரும் 'தன்'னைத் துறத்தல் அவசியமானதே.

எமர்ஸன்

333. ஆறாத மரத்தை வேலைக்கு அதிகமாக உப யோகிக்கக் கூடாது — அது போல்தான் பண்படாத அறிவையும்.

ஹோம்ஸ்

334. அறிய முடியாததையும் அறிய முடியும் என்று நம்புவதை ஒருநாளும் கைவிடற்க. இன்றேல் அதைத் தேடப் போவதில்லை.

கதே

335. நாம் அறிவதின் அளவு சுருங்குவதே நாம் அறிவில் முன்னேற்றம் அடைவதைக் காட்டும் — இப்ப டிக் கூறுவது முரணாகத் தோன்றலாம், ஆனால் உண் மையே ஆகும்.

ஹாமில்டன்

336. அறிவு பெற ஆற்றலுடைய ஒருவன் அறி விலியா யிருப்பதைப் போன்ற துக்ககர்மான விஷயம் வேறு எதுவுமில்லை.

கார்லைல்

337. அறிவிலிகள் அறிவாளிகள் மூலம் பயன் பெறுவதைக் காட்டிலும் அறிவாளிகள் அறிவிலிகள் மூலம் அதிகப் பயன் பெறுவர்.

கேடோ

338. முடியுமானால் பிறரை விட அறிவாளியா யிரு. ஆனால் அதை அவர்களிடம் கூருதே.

செஸ்டர்பீல்டு

339. வித்தையில் விருப்பமுடையவன், தன்னை முழுவதும் அதற்குத் தத்தம் செய்யவும், அதிலேயே தன் வெகுமதியைக் காணவும் திருப்தியுடையவனு யிருக்க வேண்டும்.

டிக்கன்ஸ்

340. பிறர் அறியாததை வைத்து அவர்களை மதித்தல் ஆகாது. அறிந்துள்ளதை எவ்வாறு அறிந்திருக்கின்றனர் என்பதை வைத்தே அவர்களை மதிக்க வேண்டும்.

பிரெஞ்சுப் பழமொழி

341. ஒரு பிராணி வாழ்வதைக் கண்டு நீ ஆனந்திக்கும் அளவே நீ அதை அறிய முடியும். வேறு வழியில் முடியாது.

ரஸ்கின்

342. ஜலக் குமிழி தங்கக் கட்டிக்குச் சமானமாகுமானால் உயர்ந்த மூளையும் உண்மையான உள்ளத்திற்குச் சமானமாகும்.

ஹோம்ஸ்

343. மெய்ஞ்ஞானம் கடவுளிடம் அடக்கத்தையும், ஜீவர்களிடம் அன்பையும், தன்னிடம் அறிவையும் உண்டாக்கும்.

ரஸ்கின்

344. அறிவுள்ள பிராணியா யிருப்பதில் அதிக சௌகரியமே : அதைக் கொண்டு விரும்பியது எதற்கும் காரணம் சிருஷ்டித்துவிடலாம் அல்லவா ?

பிராங்க்லின்

345. சாக்கடை நீரில் குப்பையைக் காண்பதா, அல்லது வானத்தைக் காண்பதா ? — உன் இஷ்டம்.

ரஸ்கின்

346. அறிவின் முன்னணியில் போர் புரிவோர்க்குப் பெரும்பான்மையோர் ஆதரவு ஒரு நாளும் கிடைப்பதில்லை.

இப்ஸன்

347. யோசனை செய்யாதிருக்கக்கூடிய இடம் மரண சயனம் ஒன்றே. ஆனால் யோசனை செய்வதை அந்த இடத்திற்காக ஒருபொழுதும் விட்டுவைக்கக் கூடாது.

ரஸ்கின்

348. சாஸ்திரிகளைப் போல் சாமர்த்தியமாய் அஞ்ஞானம் பேசுவதை விட, சான்றோர்களைப் போல் சாமர்த்தியமின்றி ஞானம் பேசுதலே சாலச் சிறந்ததாகும்.

செஸ்டர்டன்

349. ஒன்றும் அறியாதவன் தான் கற்றுக்கொண்டதைப் பிறர்க்குக் கற்றுக் கொடுப்பதாய் நம்பிக்கொள்கிறான். அதிகம் அறிந்தவன் தான் கூறுவது பிறர் அறிந்திருக்க முடியாது என்று நினைப்பதில்லை.

லா புருயர்

350. தீயவன் ஒருநாளும் மெய்யறிவு பெற்றதில்லை. ஆம், ஒரு நாளும் மெய்யறிவு பெற்றதில்லை. இது மூக்காலும் உண்மை.

போப்

351. குறுகிய புத்தியுள்ள மனிதர் குறுகிய கழுத்துள்ள பாட்டில்களை ஒப்பர். அகத்தில் அற்பமாயிருந்தால் புறத்தில் வாற்றும் பொழுது அதிகச் சப்தம் செய்யும்.

ஸ்விப்ட்

352. தன் உபயோகத்திற்கும் அவசியத்திற்கும் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களை அறிந்து கொள்ளாதவன் வேறு எவற்றை அறிந்திருந்தாலும் அறிவில்லாதவனே ஆவான்.

டிலட்ஸன்

353. ஒருவனுடைய அறிவை அபகரித்துவிட்டால் அவனைச் சிசு நிலைமையில் வைப்பதாகாது: விலங்கு நிலைமையில் — அதுவும் விலங்குகளில் எல்லாம் அதிகத் துஷ்டத்தனமான விலங்கின் நிலைமையில்—வைப்பதே யாகும்.

ஆர்னால்டு

354. 'அறியாமை'யால் நமக்குச் சௌகரியங்கள் கிடையாமல் போகும் என்பது மட்டுமன்று — நமது கேட்டிற்கு நம்மையே வேலை செய்யத் தூண்டுவதும் அதுவே. அது அறிவு 'இன்மை' என்பது மட்டும்

அன்று — சதா காலமும் துன்பம் தந்துகொண்டிருக்கும் தவறுகளின் ' நிறைவு'ம் ஆகும்.

ஸாமுவேல் பெய்லி

355. ' பார்க்க மாட்டோம் ' என்று சாதிக்கும் அளவுக்குக் குருடாயுள்ளவர் உலகில் கிடையார்.

ஸ்விப்ட்

356. ஒருவனுக்கு அறிவிருந்தும் ஆற்றல் இல்லையாகில் அவன் வாழ்வு பாழே.

ஷாம்பர்ட்

357. கண் குருடு என்று இரங்குவது போலவே அறிவு சூனியம் என்பதற்கும் இரங்க வேண்டும்.

செஸ்டர்பீல்டு

358. மூளையின் முன்புறம் (அறிவு) பின்புறத்தை (உணர்ச்சியை) உறிஞ்சி உலர்த்திவிடுமானல் கேடே. அறிவினல் மட்டுமே நன்மை பெற்றுவிட முடியாது. விசாலமான நெற்றிக்கே எப்பொழுதும் இறுதியில் வெற்றி. ஆனல் வெற்றி கிடைப்பது தலையின் பின் புறம் மிகப் பருமனுயுள்ள பொழுதே.

ஜே. ஆர். லவல்

359. அறிஞனுக்கு அனைத்துலகும் தாய்நாடே. சாந்தமான மனத்திற்கு எந்த இடமும் அரண்மனையே.

வில்லி

360. அறிவிலி இடத்தையும் காலத்தையும் குறுக்க

விரும்புகிறான். அறிஞனே அவற்றை நீட்டவே விரும்புகிறான்.

ரஸ்கின்

361. அறிவை எதிர்ப்பவர் நெருப்பைக் கிளறுபவர் ஆவார். நெருப்புப் பொறி பறந்து எரிக்க வேண்டாதவற்றையும் எரித்துவிடும்.

கதே

362. தனக்குத் தானே வழிகாட்டி என்னும் வண்ணம் போதுமான அறிவுடையார் யாருமிலர்.

அக்கெம்பிஸ்

363. அறியாமை ஆண்டவன் சாபம். அறிவு தேவர் உலகத்திற்குக் கொண்டு செல்லும் சிறகு.

ஷேக்ஸ்பியர்

364. ஏறிக்கொள்ள அசுரனுடைய தோள்கள் கிடைக்குமானால் குள்ளன் அசுரனைவிட அதிகத் தூரம் பார்க்க முடியும்.

கோல்ரிட்ஜ்

365. ஷேக்ஸ்பியர் என்னைவிட அதிக உயரமுள்ளவரே. எனினும் நான் அவரைவிட அதிகத் தூரம் பார்க்க முடியும். நான் அவருடைய தோள்களின் மேல் அல்லவோ நிற்கின்றேன்!

பெர்னார்டு ஷா

366. ஒன்றுமே அறியாதவன் வாழ்பவன் ஆகமாட்டான்.

கிரேஸியன்

367. அற்ப அறிவு அபாயகரம் என்றால், அபாயம் நேராத அளவு அதிக அறிவு அடைந்துள்ளவன் எவன்?

ஹக்ஸ்லி

368. பிறர் வாசித்திருந்த அளவு நானும் வாசித்திருந்தால் அவர்களைப் போலவே நானும் அறிவில்லாதவனு யிருப்பேன்.

ஹாப்ஸ்

16. அறிவீனம்

369. மூடன் தன்னை அறிவாளி என்று மதித்துக் கொள்கிறான். ஆனால் அறிவாளியோ தன்னை முட்டாள் என்று அறிவான்.

ஷேக்ஸ்பியர்

370. தேவர்கள் செல்ல அஞ்சும் இடத்திற்கு மூடர்கள் பாய்ந்துவிடுவர்.

போப்

371. ஒவ்வொருவனும் பிழை செய்யக் கூடியவனே. ஆனால் மூடனைத் தவிர வேறு யாரும் பிழையை விடாமல் பிடித்துக்கொள்ளார்.

ஸிஸரோ

372. உண்டென்றோ அல்லது இல்லை யென்றோ பகுத்தறியாது பகர்வோரே மூடர்கள், அனைவரிலும் தாழ்ந்தவர்.

தாந்தே

373. மூடன் பிறரைக் குறை கூறுவான்; அரை குறை அறிவாளி தன்னைக் குறைகூறிக் கொள்வான். அறிவு முற்றியவன் தன்னையும் குறைகூறுன், பிறரையும் குறைகூறுன்.

ஹொர்டர்

374. முட்டாள்கள் தவறு செய்தால் அதனால் அவர்க்கு விளையும் தீமையினின்று அவர்களைக் காப்

பாற்றிவிட்டால், உலகத்தை முட்டாள்களால் நிரப்பிய வர்களாவோம்.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்

375. தங்கள் அபிப்பிராயத்தை ஒரு பொழுதும் மாற்றிக்கொள்ளாதவர் மூடரும் இறந்தவருமே.

லவல்

376. போக்கிரி என்பவன் தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் முட்டாள்.

கோல்ரிட்ஜ்

377. தவறு — அதில் எவ்வளவு உண்மையுளதோ அவ்வளவு அது அபாயகரமானதாகும்.

அமீல்

378. தன் திருப்தியை நாடாது, உலகத்தின் மதிப்பை நாடி, தன் விருப்பத்திற்கு மாருகப் பொருளும் புகழும் தேடச் சிரமம் எடுத்துக்கொள்பவன் என் அபிப்பிராயத்தில் முழு மூடன் ஆவான்.

கதே

379. பிறர் நம்மை அறிந்துகொள்ள முடியாத படி நடந்துகொள்வது நம் வழக்கம். அதன் முடிவு யாதெனில் — நாமே நம்மை அறிந்துகொள்ள முடியாத படி நடக்கப் பயின்று விடுகிறோம் என்பதே.

பிரெஞ்சுப் பழமொழி

380. மாந்தர் மூடராக வாழலாம், ஆனல் மூட ராக இறக்க முடியாது.

யங்

17. மூட நம்பிக்கை

381. மூட நம்பிக்கை மனித அமைப்பிலேயே ஓர் அம்சம். அதை ஓட்டிவிட்டோம் என்று மனோராஜ்யம் செய்யும் பொழுது அது நம் மனத்தில் ஒரு மூலையில் பதுங்கி யிருக்கும். தனக்கு அபாயம் வராது என்ற நிலைமையில் திடீரென்று வெளியேறும்.

கதே

382. மூட நம்பிக்கை பயந்து பதுங்கும்; அதனிடம் அதர்ம நினைவே அதிகம்; கடவுளிடம் நம்பிக்கை கிடையாது; துர்த் தேவதைகளை அஞ்சி நடுங்கும்.

நியூமன்

18. கடமை

383. கடமையைச் செய்துவிட்டேன்; அதற்காகக் கடவுளைத் துதிக்கிறேன்.

நெல்ஸன்

384. உன் கடமையைச் செய்ய முயல்க; அப்பொழுது உன் தகுதியை உடனே அறிந்துகொள்வாய்.

கதே

385. கடமையை நிறைவேற்ற அன்பு, தைரியம் என்ற இரண்டு வழிகாட்டிகள் உள. இரண்டும் ஒன்று கூடிவிட்டால் ஒரு நாளும் வழி தவறுவதில்லை.

அனடோல் பிரான்ஸ்

386. சாந்தம், குதூகலம் — இவையே அறங்களின் முன்னணியில் நிற்பன, இவையே பரிபூரணமான கடமைகள் ஆவன.

ஆர். எல். ஸ்டீவன்ஸன்

367. ஒருபொழுதும் தவறு செய்யாதவன் ஒன்றும் செய்யமாட்டான்.

ஆவ்பரி

388. செய்ய இயலாததில் சினங்கொள்வது என்? செய்ய இயன்றதைச் செய்வோமாக.

ரொமெய்ன் ரோலண்டு

389. பிறர்க்கு நான் செய்யவேண்டிய கடமை யாது? அவரை நல்லவராக்குவதா? நான் ஒருவனைத் தான் நல்லவனாக்கவேண்டும். அவன் நானே. பிறர்க்குச்

சந்தோஷம் அளிப்பதே அவர்க்கு நான் செய்யக்கூடிய கடமையாகும்.

ஆர். எல். ஸ்டீவன்ஸன்

390. உலக அரங்கில், 'இன்ன வேஷதாரியாகத் தான் நடிப்போம்' என்று கூற இயலாது. கொடுத்த வேலையைத் திறம்படச் செய்து முடிப்பதே நமது கடன்.

எபிக்டெட்டஸ்

391. அறமே ஆற்றல் என்று நம்புவோமாக. அந்த நம்பிக்கையுடன் நாம் அறிந்த கடமையை ஆற்றத் துணிவோமாக.

ஆப்ரகாம் லிங்கன்

392. இன்று உன்னால் கூடியமட்டும் நன்றாய்ச் செய். நாளை அதனிலும் நன்றாய்ச் செய்யும் ஆற்றல் நீ பெறக்கூடும்.

நியூட்டன்

393. செய்ய வேண்டியதைச் செய்ய முயல்க; முயன்றால் செய்யவேண்டியது இது என்பதில் சந்தேகம் ஏற்படாது.

ஆவ்பரி

394. உன் கடமையைத் தைரியமாய்ச் செய்து விட்டால் நீ அடையும் பலன் யாது? அதைச் செய்ததையே பலனாய் அடைவாய். செயலே பலனாகும்.

ஸெனிக்கா

395. கெட்ட காலம் வந்தால் எப்படிச் சகிப்பது

என்பது குறித்து நல்ல காலத்தில் சிந்தனை செய்வது மாந்தர் கடன்.

டெரன்ஸ்

396. சுயநலத்திலுள்ள நன்மை யாது? மனிதர் கடமையைக் கடனாகவும், உரிமையை வரவாகவும் ஆக்கி விட்டனர்; வியாபாரம் என்றும் வியாபாரமே!

கடனின்றி வாழ விரும்பினால் உரிமைகளைத் துறக்கவேண்டும்.

பால் ரிச்சர்டு

397. நல்லவனும் ஞானியும் சில சமயங்களில் உலகத்தைக் கோபிக்கலாம், சில சமயங்களில் அதற்காக வருந்தலாம். ஆனால் உலகில் தன் கடமையைச் செய்பவன் எவனும் அதனிடம் ஒருபொழுதும் அதிருப்தி கொள்வதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

ஸதே

398. ஒன்றும் செய்யாது காத்திருப்பவரும் ஊழியம் செய்பவரே.

மில்டன்

399. உனக்குத் தெரிந்தவற்றை யெல்லாம் நன்றாக அனுஷ்டிக்க முயல்க. அங்ஙனம் செய்தால் நீ அறிய விரும்பும் மறைபொருள்களையெல்லாம் சரியான காலத்தில் தெரிந்துகொள்வாய்.

ரெம்பிராண்ட்

400. தானே செய்யக்கூடியது எதையும் பிறர் செய்ய விடலாகாது.

இப்ஸன்

19. துறவு

401. இந்த உலகில் மூன்று விதத் துறவுகள் அறிவையும் இன்பத்தையும் சமயத்துக்காக வெறுத்தால் சமயத் துறவு; அதிகாரத்துக்காக வெறுத்தால் போர்த் துறவு; பணத்துக்காக வெறுத்தால் பணத் துறவு. இக் காலத்தில் காணப்படும் துறவு மூன்றுவதே.

ரஸ்கின்

402. எனக்குத் துறவறத்தில் நம்பிக்கை யில்லை. ரோஜாச் செடியில் முட்களைப் போல் மலரும் அவசிய மானதே. கடவுள் உடலை உண்டாக்கிய பொழுது அனு வசியமானது எதையும் அமைத்துவிடவில்லை.

பார்க்கர்

20. தனிமை

403. உயர்ந்த எண்ணங்களை உடையோர் ஒரு பொழுதும் தனித்தவ ராகார்.

ஸர் பிலிப் ஸிட்னி

404. கொள்கை உறுதியா யிருப்பின் தனிமையா யிருப்பது தனிமை யாகாது.

அனர்பாஷ்

405. தன்னந் தனியாய் நிற்பவனைவிட அதிகச் சக்தி வாய்ந்தவன் உலகில் கிடையாது.

இப்ஸன்

406. உயர்ந்த எண்ணங்களின் தோழமை உடையோர் ஒருநாளும் தனிமை காண்பதிலர்.

பிலிப்

407. தனிமையா யிருக்கச் சக்தி யில்லாததினுலேயே சகல துன்பங்களும் விளைகின்றன.

லா புருயர்

408. தனிமையாய் வாழ ஏன் நாம் அஞ்சவேண்டும்? நாம் தன்னந் தனியாய் இறக்கத்தானே சர்வேச்வரனுடைய திருவுள்ளம்?

கெபிள்

409. உலகத்தில் வெகு சிலரே தனியாக வாழத் தகுதி யுடையவர். அவர்களுக்கு உலகத்தின் மாயையை அறியப் போதுமான லௌகிக ஞானமும், சகல மாயை

யையும் வெறுத்துத் தள்ளப் போதுமான அறவொழுக்க மும் இருக்கவேண்டும்.

கௌலி

410. தர்ம நெறி தவறியவரே தனியா யிருப்பவர்.

ஷட்டெரெட்